REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 16+24 விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 343 ஐப்பசி 23 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 08 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## நேற்றும் 449

நாட்டில் நேற்றும் 449 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதையடுத்து 15 ▶

## வென்றார் பைடன் சென்றார் டரம்ப்



அமெரிக்க முதல் பெண் துணை ஜனாதிபதியானார் தமிழரான கமலா ஹரிஸ்

வொஷிங்டன், நவம்பர் 8

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று அந்த நாட்டில் 46ஆவது ஜனாதிபதியாகத் தெரிவானார் ஜோ பைடன். தொங்குநிலையில் இருந்த பென்சில்வேனியா, நிவேடா மாநில முடிவுகள் நேற்று முன்னிரவு வெளியாகின. இதில் பைடன் வெற்றி பெற்றதை அடுத்தே அவர் அமெரிக்காவின் 46ஆவது ஜனாதிபதியானார். 15 ▶

## கொரோனாவின் பிடியில் 80 கர்ப்பிணிப் பெண்கள்

15 ▶

## ஸஹ்ரானின் மனைவிக்கும் கொரோனா

15 ▶

## சாவு 34 ஆக அதிகரிப்பு நேற்றும் 4 பேர் இறப்பு!

கொழும்பு, நவ. 8

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றும் 3 வயோதிபர்கள் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பு 10, மாளிகாவத்தையைச் சேர்ந்த இரு பெண்களும், வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த ஆண் ஒருவரும், கனேமுல்லையைச் சேர்ந்த பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் 15 ▶

## யாழ். மாவட்டச் செயலக கூட்டங்கள் தவறானவை

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்*

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமும், இன்றைய தினம் நடைபெறவுள்ள கூட்டமும் தவறானவை என்பதை இலங்கை 16 ▶

## கச்சேரி இன்றும் களை கட்டுகிறது

*250 பேர் பங்கேற்பு*

*நாமலுடன் மாத்திரம் 100 பேர் வருகை*

யாழ்ப்பாணம், நவ. 8

சுகாதார நடைமுறைகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வந்தவர்களுடன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் 15 ▶

*முச்சந்தி முரளி*



"தமிழ் வம்சாவளி பெண் இப்பிடி அமெரிக்காவில உயர்ந்த பதவிக்கு வாறது எங்கட சனத்துக்கு ஒரு பெருமைதான்"

## பூநகரியில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று

கிளிநொச்சி, நவ. 8

கொழும்பில் பணியாற்றும் ஒருவர் கடந்த மாதம் 23ஆம் திகதி கிளிநொச்சி பூநகரி ஜெயபுரத்துக்கு வந்த நிலையில் அவருக்கு நேற்று மேற் 14 ▶

## பேரன் இறந்த செய்தி கேட்டு அம்மம்மாவும் மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், நவ. 8

பேரன் உயிரிழந்த செய்தியைக் கேட்ட அம்மம்மாவும் உயிரிழந்துள்ளார். இந்தச் சோகச் சம்பவம் நேற்று உடுவில் ஆலடியில் நடந்துள்ளது. சௌந்தர்ராஜா சகிதரன் (வயது 30), மாணிக்கம் நாகேஸ் 15 ▶

உள்ளே...

## இளைஞர்கள் சேவை மன்றக் கட்டடம் சுகாதார அனுமதிகளின்றி திறந்து வைக்கவுள்ள நாமல்

700 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவ. 8

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதி பெறாமல், தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் கட்டடத் திறப்பு விழா இன்று 700 பேருடன் இடம்பெறவுள்ளது. 16 ▶

## பவித்திரா, பீரிஸ் பங்கேற்பு சந்தேகம்

16 ▶

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)" கம்பனிப் பதிவிலக்கம் PQ 9

SINGER இடமிருந்தான தீபாவளி பரிசு பத்திரிகையை பாருங்கள்

# யாழ். பல்கலையில் நவீன வசதிகளுடன் அமைகிறது உள்ளக விளையாட்டரங்கு!

### எதிர்வரும் 19ஆம் திகதி திறப்புவிழா

**யாழ்ப்பாணம், நவ. 8**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பிரமாண்டமான உள்ளக விளையாட்டு அரங்கு எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.**

நாட்டில் தற்போது எழுந்துள்ள கொரோனா நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார நடைமுறைகளுக்கமைய மட்டுப் படுத்தப்பட்டவர்களுடன் இந்தத் திறப்பு விழாவை நடாத்துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளதுடன், நிகழ்வுகளை நேரலையாக ஒலிபரப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தற்போதைய துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியுமாகிய பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, இலங்கை பல்கலைக்கழக விளையாட்டு விழா வுக்கான ஏற்பாட்டுக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட காலத்தில் முன்வைக்கப்பட்ட திட்டமுன் மொழிவுக்கமைய 2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணத்தினால் அடிக்கல் நடப்பட்டிருந்தது. நிறைவு செய்யப்பட்ட கட்டடத் தொகுதி 2020இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கையளிக் கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் பேர் ஒரே நேரத்தில் அமர்ந் திருக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கு சர்வதேசத் தர நியமங்களுக்கமைய அமைக்கப் பட்டிருக்கிறது. பேராதனை மற்றும் ருகுண பல்கலைக்கழகங்களில் உள்ளக விளையாட்டரங்குகள் காணப்படுகின்ற போதிலும், இலங்கையில் வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் இத்தகைய வசதிகளைக் கொண்ட உள்ளக விளையாட்டரங்கு இதுவரை அமைக்கப்பட வில்லை. சுமார் இருநூற்றி எட்டு மில்லியன் ரூபா செலவில் இந்த விளையாட்டரங்கு அமைக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் அமைக்கப்பட்டுள்ள இந்த உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக் கிழமை பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் கே.கணேசநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் கல்வெட்டைத் திறந்து வைக்க, யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளக விளையாட்டரங்கைத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்லாமல், தேவைநாடும் சகலரும் இந்த உள்ளக விளையாட்டரங்கைப் பயன்படுத்துவதற்கேற்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து, அனுமதி பெற்று இங்குள்ள உள்ளக விளையாட்டு வசதிகளை விளை யாட்டுத் துறை சார்ந்தோர் பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கின் இடப்பற்றாக்குறை காரணமாகப் பல அமர்வுகளாக நடாத்தப்படும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவை இம்முறை ஒரே நாளில் இந்த அரங்கில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம ஒ.இ)

## பணப் பரிமாற்றத்தை குறைத்தால் தப்பலாம்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுரை

கொழும்பு, நவ.8

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கு பணப் பரிமாற்றத்தைக் குறைத்துக் கொள்வது முக்கியமானது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் என்று சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

பணப் பரிமாற்றத்தின் பின்னர் கைகளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்துக் கொள்ள எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கை இதுவாகும். பணம் மட்டுமல்ல பொருள்களைப் பகிரும்போதும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்று வது மிக முக்கியமாகும். என்றார். (எ-இ)

## வெடி விபத்தில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், நவ.8

யாழ்.சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டி பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற 22 வயதான இளைஞன் ஒருவன் வெடிபொருள் வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார். அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இந்தப் பகுதியில் மாடு மேய்க்க சென்றிருந்த இளைஞன் மாடு கட்டுவதற்காக அலவாங்கை நிலத்தில் ஊன்றியபோது நிலத்தில் புதைந்திருந்த வெடிபொருள் வெடித்தது என்று கூறப்படுகின்றது. (எ-ரி4)

## கிழக்கில் சதத்தை எட்டிய கொரோனா




கொழும்பு, நவ.8

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சதத்தை (100) எட்டியுள்ளது.

இறுதியாக மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப் பிரிவில் மேலும் 4 பேருக்கும், மட்டக்களப்பில் 2 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இதுவரை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 13 பேரும், கல்முனைப் பிராந்தியத்தில் 20 பேரும், அம்பாறைப் பகுதியில் 7 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.

**கல்முனையில் தடை நீங்கவில்லை**

அதேவேளை, கல்முனைப் பிராந்தியத்தில் வணக்கஸ்தலங்கள் மீதான தடை இன்னும் நீக்கப்படவில்லை என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவித்தார். (எ-22)

## கொரோனாவை ஒழிக்க ஹோமம்

யாழ்ப்பாணம், நவ.8

கொரோனா தொற்றில் இருந்து நாடும், மக்களும் மீண்டு வர வண்ணார்பண்ணை பெருமாள் ஆலயத்தில் சுதர்சன ஹோமமும் விசேட வழிபாடுகளும் சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த சிறப்பு வழிபாடுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

சகல இந்து ஆலயங்களிலும் ஹோமம், விசேட வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்த கோரிக்கைக்கமைவாக இந்த வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் உள்ள கொரோனா தொற்று அச்சத்தின் காரணமாக பொதுமக்கள் யாரும் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-111)

## போகம்பர கைதிகளுக்கும் கொரோனா

கொழும்பு, நவ.8

வெலிக்கடைச் சிறையில் உள்ள கைதிகளுக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருந்த நிலையில், போகம்பரச் சிறையில் உள்ள கைதிகளுக்கும் கொரோ னாத் தொற்றுள்ளமை நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. போகம்பரை சிறைச்சாலையில் ஏழு கைதிகளுக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)

## வீடு புகுந்து தாக்குதல் குடும்பஸ்தர் படுகாயம்


சாவகச்சேரி, நவ.8

வீட்டுக்குள் நுழைந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதில் குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை விஜிதரன் (வயது- 26) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு எழுதுமட்டுவாழ், கிளாலியில் நடந்துள்ளது. இரவு 10 மணியளவில் வீட்டு வளவுக்குள் அத்துமீறி நுழைந்த நால்வர் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதானா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-9)

# டிசெம்பர் ஆரம்பத்தில் மரணங்கள் அதிகரிக்கும்

## மருத்துவர்கள் எச்சரிக்கை



**கொழும்பு,நவ.8**
**எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்பத்தில், கொரோனா மரணங்கள் பற்றியே கூடுதலாகச் சிந்திக்க வேண்டியேற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.**

கொரோனாத் தொற்றால் பதிவான மரணங்களில், பெரும்பாலானவை கொழும்பு மாநகர சபையை அண்மித்த பகுதிகளிலேயே பதிவாகியுள்ளன.

அந்த மரணங்களில் ஏதேனும் விசேட காரணி தாக்கம் செலுத்துகின்றதா? என்பது தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும். ஒன்பது மாதங்களில் 13 மரணங்கள் என்ற போதும், தற்போது இரு வாரங்களில் மரணங்கள் அதிகரித்துள்ளன. இது மிகவும் அபாயமான நிலைமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# மக்களின் கேள்விகளால் திணறும் பி.எச்.ஐக்கள்

யாழ்ப்பாணம், நவ. 8
சாதாரண மக்களிடம் வீரம் காட்டும் நீங்கள் கொழும்பிலிருந்து வரும் அமைச்சர்கள், அதிகாரிகளிடம் ஏன் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதில்லை என்று பொதுமக்கள் தங்களிடம் கேள்வி எழுப்புகின்றனர் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். மக்களின் கேள்விகளில் நியாயம் இருக்கிறது என ஒப்புக்கொள்ளும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த விடயம் தொடர்பில் தாம் கேள்விகள் எழுப்பினால் தமது வேலைக்கே அது உலை வைப்பதாக அமைந்து விடும் என்று கூறுகின்றனர்.
கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையில் களப்பணியில் ஈடுபடுவது பொதுச் சுகாதார பரிசோதகர்களே. அரசால், அதிகாரிகளால் கொரோனா கட்டுப்பாட்டுக்காக அறிவிக்கப்படும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதும் அவர்களே.
மேல் மாகாணத்திலிருந்து வந்தவர்களை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்துவது, உணவகங்களில் தங்கியிருந்து உணவு உண்ணாமல் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதற்குரிய ஒழுங்குகள் உரிய முறையில் உள்ளனவா என்று ஆராய்வது, திருமண நிகழ்வு, இறுதிச் சடங்கு போன்ற நிகழ்வுகளுக்குரிய அளவிலானோர் பங்கு பற்றுகின்றனரா? என்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்களை களத்தில் நின்று கண்காணித்து அதனை மீறும் பொதுமக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களே. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், மேல் மாகாணத்திலிருந்து வந்த அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் அவர்களின் படைபட்டாளத்துடன் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சுகாதார விதிமுறைகளை மீறியே கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஓரிருவரை சுய தனிமைப் படுத்தலுக்கு உள்ளாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அவர்களை சில மணி நேரங்களிலேயே விடுவிக்க மேலிடங்களிருந்து அழுத்தம் பிரயோகிக்கப்பட் டுள்ளது. இதனால் சாதாரண பொது மக்களுக்கு மாத்திரம் சட்டங்களைப் பின்பற்றச் சொல்லும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அதனை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அவர்கள், உயர் அதிகாரிகள், அமைச்சர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.
தனிமைப்படுத்தலில் உள்ளவர்களைக் கண்காணிக்கச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொது இடங்களில் மக்களை கண்காணிக்கச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மக்களின் கேள்விகளால் திக்குமுக்காடியுள்ளனர். உயர் அதிகாரிகள் சுற்றறிக்கைகளுக்கு மாறாகச் செயற்படுவதால் மக்களை எதிர்கொள்ள முடியாமல் தாம் திணறுகிறோம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கவலை வெளியிட்டனர். (ஒ.5)

# மருத்துவர் எலியந்த வைட் செய்தது மூடநம்பிக்கை!

*விமர்சிக்கிறார் தேசிய மனநல சுகாதார சிரேஷ்ட மனநல மருத்துவர்*

கொழும்பு, நவ.8
கொரோனா வைரஸிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர் எலியந்த வைட் உட்பட அனைவரும் செய்வது மூட நம்பிக்கையான விடயங்கள் என்றும், அவற்றில் அறிவியல் ரீதியான எந்த அடிப்படைகளும் இல்லை என்றும் தேசிய மனநல சுகாதார கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட மனநல மருத்துவர் கபில ரணசிங்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாவிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர் எலியந்த வைட் மந்திரித்த, நான்கு தண்ணீர் கலசங்கள் ஆற்றில் விடப்பட்டுள்ளன. அவர் விஷ்வ சக்தியின் மூலம் இந்த தண்ணீர் கலசங்களை மந்திரித்தார் என்று கூறப்படுகின்றது.
அப்படி ஒரு சக்தி இருக்குமாயின் அது என்ன சக்தி, அவருக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதை அவர் பகிரங்கமாகக் கூறவேண்டும் இல்லையேல் அவர் செய்த எந்த நடவடிக்கை மீதும் நம்பிக்கை வைக்க முடியாது. இவை அனைத்தும் மன ரீதியான ஏமாற்று நடவடிக்கை என்றார். (ற-இ)

# காற்று மாசுபாடு கொழும்பில் வீழ்ச்சி

கொழும்பு,நவ.8
கொழும்பில் காற்று மாசுபாட்டின் அளவு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு மறுசீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.
அத்துடன் மழை காற்று மற்றும் வானிலை காரணமாக, காற்றின் தரம் மேம்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு விஞ்ஞானி சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.
இந்தக் காரணங்களால், காற்று மாசுபாடு மற்றும் வளிமண்டலத்தில் காபனீர் ஒக்சைட்டின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (க-இ)



# புத்தளத்தில் 71 பேருக்கு தொற்றியது கொரோனா

புத்தளம், நவ.8
புத்தளம் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 71ஆக உயர்வடைந்துள்ளது என மாவட்டத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தினுஷா பெர்ணான்டோ தெரிவித்தார்.
தொற்றுக்குள்ளானவர்கள் மாவட்டத்திலுள்ள மற்றும் வெளிப் பிரதேசங்களிலுள்ள கொரோனாச் சிகிச்சை மத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.
தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்கள் எவையும் இதுவரை முடக்கப்பட வில்லை என்றும் தொற்றாளர்களின் குடும்பங்கள் உள்ளடங்களாக ஆயிரத்து 500 பேர் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# ஆபத்தான பகுதிகளில் ஊரடங்கு தொடரட்டும்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, நவ.8
மேல் மாகாணத்தில் ஆபத்தான பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை நீக்கக் கூடாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது. கொவிட் 19 தொற்று அதிகம் காணப்படும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்று அந்தச் சங்கத்தின் மூத்த உறுப்பினர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
ஊரடங்குச் சட்டத்தை நீடிக்கத் தவறினால் நோய்த் தொற்றுப் பரவுகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். ஊரடங்குச் சட்டம் காரணமாகவே கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது.
அதேவேளை, கொரோனாத் தொற்றால் ஏற்படக்கூடிய உயிரிழப்புக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு உரிய சாராம்சம் ஒன்றை வழங்க வேண்டும். இவ்வாறு சாராம்சப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும்- என்றார். (எ-இ)

# 221 பொலிஸாருக்கு கொரோனா

கொழும்பு,நவ.8
மேல் மாகாணத்தில் இதுவரை 221 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 300ஆக அதிகரித்துள்ளது.
அத்துடன் சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 385 ஆக பதிவாகியுள்ளது. (க-இ)

# நாட்டில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு இல்லை

## அரச மருந்தக கூட்டுத்தாபனம் தகவல்



கொழும்பு,நவ.8

நாட்டில் மருந்து வகைகளுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை என்று அரச மருந்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

8 தொடக்கம் 10 மாத காலப்பகுதிக்குத் தேவையான போதுமானளவு மருந்து வகைகள் நாட்டில் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் மருந்து வகைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் எதிர் காலத்தில் மருந்து வகைகளை இறக்குமதி செய்வதை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-இ)

# ஜனாதிபதியின் படம் 'அவுட்'



யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள வீதித் திருத்தப் பணிகளுக்கான பெயர்ப் பலகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் படம் காணப்படவில்லை.

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் யாழ்ப்பாணத்தில் மூன்று வீதிகளும் கிளிநொச்சியில் ஓர் வீதியும் திருத்தம் செய்யும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அபிவிருத்தித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டு பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பெயர்ப் பலகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் நிமல்லான்சா, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் படம் மாத்திரமே பொறிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் படம் அதில் காணப்படவில்லை. அரச அபிவிருத்தித் திட்டங்களில் காட்சிப்படுத்தப்படும் பெயர்ப் பலகைகளில் ஜனாதிபதியின் படம் பொறிக்கப்படுவது வழமை. (ஓ.5)

# ஏசி அறையிலேயே கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 8

வளிச் சீராக்கி (ஏசி) பயன்படுத்துவது கொரோனா பரவலுக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் என்று மக்களுக்கு அறிவுறுத்திய அதிகாரிகளே அதனை மீறும் வகையில் தமது கூட்டங்களில் ஏசியைப் பயன்படுத்துகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில், தென் இலங்கையிலிருந்து அமைச்சர்கள் குழு பெரும் எண்ணிக்கையில் பங்கேற்றிருந்தது. இவர்கள் தனிமைப்படுத்தப்படவில்லை. அத்துடன் பி.சி.ஆர். சோதனைக்கும் உட்படுத்தப்படிருக்கவில்லை. ஒரு மீற்றர் சமூக இடைவெளியும் பேணப்பட்டிருக்கவில்லை.

கூட்டம் நடைபெற்ற மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் தொடர்ச்சியாக ஏசி பயன்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா பரவலுக்கான வாய்ப்பு ஏசி பயன்படுத்துவதால் அதிகம் என்று அறிவுறுத்திய அதிகாரிகளே அதனை மீறிச் செயற்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இன்றைய கூட்டத்திலும் ஏசி பயன்படுத்தப்படுமா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஓ.5)

# குழந்தை உள்ளிட்ட 7 பேருக்கு கொரோனா

மஸ்கெலியா,நவ.8

மஸ்கெலியாவில் நான்கு மாத குழந்தை உள்ளிட்ட 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் தாய் மற்றும் தந்தை , அவர்களுடன் தொடர்புடைய நான்கு பேர் அடங்குகின்றனர் என மஸ்கெலிய சுகாதார அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும் மஸ்கெலியா காட்மோர் பகுதியில் பேலியகொட மீன்சந்தையுடன் தொடர்புடைய இருவருக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ-இ)

## கச்சேரிக் கூட்டத்தில்

# பங்கேற்றோர் விவரத்தை கோரியுள்ள எம்.ஓ.எச்.

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டம் மற்றும் இன்றைய தினம் இடம்பெறும் கூட்டங்களில் பங்குகொள்வோர் விவரத்தை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி கோரியுள்ளார் என அறிய முடிகின்றது.

கொரோனாத் தடுப்பு நடைமுறைகளுக்கு அமைவாக தற்போது பொதுக் கூட்டங்களை நடத்தவேண்டாம் என்று சுகாதாரத் தரப்பு மாவட்டச் செயலகத்துக்கு ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தது.

இந்த நிலையில் கூட்டங்களில் பங்கேற்றோர் விவரங்களை சுகாதார மருத்துவ அதிகாரி கோரியுள்ளார். (ஓ.5)

# இன்றைய நாள்

**மேடம்:** பெரியோரின் ஆலோசனையுடன் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பணியாளர்களுக்கு உயர் அதிகாரியுடன் எதிர்பாராத சந்திப்பு உண்டு திறமை வெளிப்படும். இளைஞர்களின் புகழ் அதிகரிக்கும்.

**இடபம்:** பணியாளர்கள் தங்கள் திறமையை நிரூபித்து மகிழ்வர். குடும்ப விவகாரங்களை தீர்மானிப்ப தில் குழப்பம் நேரலாம். புதிய மனிதர்களின் அறிமுகம் உதவிக்கரமாக இருக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத சந்திப்பால் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.அலட்சியத்தால் ஏமாற்றம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். கடன் வாங்கும் முன் பலமுறை யோசியுங்கள்.

**கடகம்:** எதிலும் நிதானம் தேவை. பெண்களுக்கு சந்தோஷம் கூடும். வாங்கியிருந்த பணத்தை திருப்பிக் கொடுத்து நிம்மதி அடைவீர்கள். அவசிய மான நேரத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

**சிம்மம்:** உங்களுக்குக் கீழ் வேலை பார்ப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.தோல்வியுற்ற விடயத்தில் புதுக்கோணத்தில் வெல்வீர்கள்.சுபநிகழ்ச்சி காரணமாக நெருங்கிய விருந்தினர் வருகை உண்டு.

**கன்னி:** வீட்டிலும், வெளியிலும் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பல வேலைகளையும் திறம்படச் செய்து பாராட்டுப் பெறுவீரகள்.நியாயமான செலவினங்கள் அதிகரிக்கும். பயங் கள் நீங்கும்.

**துலாம்:** ரகசியங்கள் கசியாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். சகிப்புத் தன்மை அதிகமாகும். பணியில் அலட்சியம் வேண்டாம்.யாரிடமும் கேலி பேச வேண்டாம்.

**விருச்சிகம்:** சிரமங்கள் தீரும். நம்பியவர்கள் கைகொடுக்காமல் போகலாம். பெண்கள் உதவி செய்வர். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.எதிர்பாராத வெற்றி கிடைக்கும். பெண்களுக்குப் புகழ் கூடும்.

**தனுசு:** அலைச்சல் அதிகரிக்கும். போராடி லாபம் ஈட்டுவீர்கள்.வீண் விவாதம் வேண்டாம். பழிவரும் செயல்களைச் செய்யாதீர்கள்.குடும்பத்தைப் பற்றிய சிறுசிறு கவலைகள் வந்து நீங்கும்.

**மகரம்:** நண்பர்களால் பிரச்னைகள் தீரும். நிம்மதி கூடுதலாகும்.யாருடைய ஆசை வார்த்தையையும் நம்பி ஏமாறாதீர்கள் அலைச்சலுக்கும், முயற்சிக்கும் உரிய நற்பலன் கிடைக்கும்.

**கும்பம்:** வெற்றிக்கு வழிகள் புலப்படும். முயற்சியை அதிகரியுங்கள். மாறுபட்ட யோசனைகள் உங்களது வெற்றிக்கு வழிவகுக்கும்.

**மீனம்:** சிலரின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அதிகமாக பாடுபடுவீர்கள்.பல காலம் பார்க்க விரும்பிய பிரபலத்தைச் சந்திப்பீர்கள். அமைதியானநாள். பணியாளர்கள் புதுப் பொறுப்புகளை ஏற்பீர்கள்.

## கட்டுவன பிரதேச சபைக்கு ஜனாதிபதி நேரில் பயணம்

கொழும்பு, நவ.8 ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கட்டுவன பிரதேச சபையை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

கட்டுவனவில் உள்ள பிரதேச சபை பிரதான கட்டடத்தின் குறைபாடுகள் காரணமாக சபையின் நாளாந்த சேவைகள் மித்தெனிய நகரில் உள்ள உப அலுவலகக் கட்டடத்திலிருந்து மேற்கொள்ளப் படுகின்றன.

இவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி அங்கு நேரில் சென்றுள்ளார்.

சபைக் கூட்டங்களின் போதும், சேவைகளை வழங்கும் போதும் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து அவர் இதன்போது கேட்டறிந்தார் என்று அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ-இ)




# அபி பஷன் வேல்ட் இன்

றெடிமெற் ஆடைகளின் சங்கமம்

## தீபாவளி மெகா சிறப்பு விலைக்கழிவுகள்...

**14.11.2020 வரை அபி பஷன் வேல்ட் வழங்கும் சிறப்பு விலைத் தள்ளுபடிகள்**

தித்திக்கும் இன்ப தீபாவளியை மகிழ்வுடன் வரவேற்போம்

**இதோ உங்களுக்காக ஒன்று வாங்கினால் அதே பெறுமதியில் இன்னும் ஒன்று முற்றிலும் இலவசம்**

**ஏனைய புடவைகள் 30% முதல் 50% வரையான சிறப்பு விலைக்கழிவு**

வாருங்கள் முந்துங்கள் அதிரடி விலைத்தள்ளுபடிகளை அனுபவித்திடுங்கள்

**இன்று ஞாயிற்றுக்கிழமை கடை திறந்திருக்கும்**

021 222 3738, 071 8444 333 112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## பெண் மருத்துவ உதவியாளர் தேவை

ஆனைக்கோட்டை, கூழாவடியில் அமைந்துள்ள அபயம் மருத்துவ சேவை நிலையத்திற்கு A/L படித்த ஓரளவு ஆங்கில அறிவுள்ள பெண் உதவியாளர் தேவை. அருகாமைப் பிரதேசத்தில் உள்ளோர் விண்ணப்பிக்கலாம். அத்துடன் முன் அனுபவமுள்ளோர், பயிற்றப்பட்டோருக்கு முன்னுரிமையளிக்கப்படும்

**தொடர்புகொள்ளவேண்டிய தொ.பே. இல**
**077 585 0372**

## மணமகள் தேவை

யாழ். வாழ் மட்டு 1988, ஆயிலியம் 1 ஆம் பாதம், 2 இல் செவ்வாய் சனி கி.பா 23 3/4 5'7'' உயரமுடைய ஓய்வூதியமுடைய தொழிநுட்ப உதவியாளர் மேடம், இடபம், சிம்மம், மகரம், கும்பம் தவிர்ந்த இராசிகளும் அஸ்வினி, ஆயிலியம், மகம்,மூலம், கேட்டை, ரேவதி, தவிர்ந்த நட்சத்திரமுடைய மணமகள் தேவை.

**077 693 3004**

## REGISTER YOUR BUSINESS AS A LIMITED LIABILITY COMPANY

JUST FOR **Rs 28,000/-**
(No hidden charges)

In parallel with the price reduction of the company incorporation, We Colombo Company Secretaries (Pvt) Ltd (CCS) offers above package for new ventures.

**Followings are included for the above package**

- Advises on company incorporation
- Reservation a Name for the Company on your desire
- Register the company with a single Director and obtain CERTIFICATE OF INCORPORATION within 1 week
- 3 sets of Articles of Association
- Certified copy of Form 1
- Company Seal and Director Seal
- We appoint as the secretary to the company

Colombo Company Secretaries (Pvt) Ltd
No 70/12/B, D.S.Senanayake Road, Colombo 08
Tel 011 2680451, 0777864451
colombosec08@gmail.com

## ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ

**அரிசி ஆலை விற்பனைக்கு**

அமைவிடம் : புத்தூர் தெற்கு புத்தூரில் பெறுமதி மிக்க அரிசி ஆலை
அளவு- காணி-16 பரப்பு 15.5 குளி
அரிசி ஆலை (விசாலமான நெல் உலர வைக்கும் பகுதி, நெல் தானிய சேமிப்புப் பகுதி (02), நெல் ஊற வைக்கும் பெரிய தொட்டிகள்(04). அலுவலக அறை, சமையலறை, ஊழியர் ஓய்வு அறை, கால்நடை வளர்ப்புப் பகுதி (100 வரை), உயிர்வாயு உற்பத்தி செய்யும் பகுதி அடங்கலாக)

**காணி விற்பனைக்கு**

அமைவிடம் : மானிப்பாய் வீதி கைதடியில் நன்னீர் வெட்டுக் கிணற்றுடன் கூடிய தென்னைப் பயிர்ச் செய்கைக்கு மிகவும் உகந்த பெறுமதியான காணிகள்
அளவு - (1) காணி -15 பரப்பு
கட்டடம் - 737 சதுர அடி
(2) காணி -13 பரப்பு 10.14 குளி



அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

**0212240303, 0212240304 0212250065, 0212250067**

**0112661866**

கைத்தொலை பேசி இலக்கங்கள்
0778802757 (திரு.சுகன்) 0777863040 (திரு.பெனட்)
0761311392 (திரு.ஜெரி)

தொலை நகல் 0112662820. ஈமெயில்-recovery@hnb.lk

கேள்விக் கோரிக்கைகளை 01.12.2020 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

Head of Recoveries,
Hatton National Bank PLC,
Recoveries Department,
Level 18, HNB Towers, No.479, T.B Jayah Mawatha,
Colombo 10.

## இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

ரூ.3,500க்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்கு
20% வரையிலான விலைக்கழிவு

**UPTO 20% OFF**

கார்த்திகை மாதம் 15ம் திகதி வரை மட்டுமே




Condition Apply

*Happy Diwali*

Available
Jaffna | Anuradhapura | Kalmunai
Matara | Libety plaza | Duplication Road
www.signature.lk 077 476 6296 | 077 396 0730

Signature
The Achiever's Choice

# உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகரிப்பு



சாவகச்சேரி, நவ. 8

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக உண்ணிக் காய்ச்சலால் (வைபஸ்) பீடிக்கப்படு பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி கடந்த ஒரு வாரத்தில் ஆறு பேர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய மழையின் பின்னரே இந்த நோயின் பாதிப்பு அதிகரித்துள்ளது. பற்றைகள், புற்கள், புதர்களைத் துப்பரவு செய்வோர் மற்றும் கட்டாக்காலிகள் தங்கும் இடங்களில் நடமாடுவோரே இதனால் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறானவர்கள் தனிநபர் சுகாதாரத்தைப் பேணுமாறு சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

பற்றைகள் மற்றும் புதர்கள் துப்பரவு செய்வோர் காலணி அணிவதுடன் உடலை மூடும் உடைகளை அணிந்து வேலை செய்யுமாறும், வேலை முடிந்ததும் அணிந்துள்ள உடைகளைக் கழுவுவதுடன் நன்றாகக் குளித்து துப்பரவாக இருக்குமாறும் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். கட்டாக்காலி கால்நடைகள் தங்கும் இடங்களுக்குச் செல்பவர்களும் இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிக்கப்பட்டுள்ளது. (ப-9)

# கட்டாக்காலி மாடுகள் கைதடியில் நாளை ஏலம்

சாவகச்சேரி, நவ.8

கைதடி கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத மூன்று மாடுகள் நாளைய தினம் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகங்களில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று பெரும்போக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

கைதடி மேற்கு கமக்கார அமைப்பின் பிரிவில் பிடிக்கப்பட்ட தொடையில் புள்ளியுடைய சிவப்பு ஊர்மாடு பிரிவு கிராம அலுவலர் அலுவலகத்தில் நாளை முற்பகல் 9.30 மணிக்கும், கைதடி கிழக்கு கமக்கார அமைப்பின் பிரிவில் பிடிக்கப்பட்ட கறுப்பு ப.சி.குறியுள்ள ஊர்மாடுகள்ளிநகர் பொது நோக்கு மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கும், கைதடி நாவற்குழி கமக்கார அமைப்பின் பிரிவில் பிடிக்கப்பட்ட சிவப்பு எம்.கே.குறியுள்ள ஊர் மாடு கைதடி நாவற்குழி. ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் முற்பகல் 11.30 மணிக்கும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படுமென அவர் மேலும் அறிவித்துள்ளார்.

காலபோகப் நெற்செய்கை விதைப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நாள்களில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும் பயிர் அழிவை ஏற்படுத்தும் மாடுகள். பிடிக்கப்பட்டால் பிடிபணம், தண்டப்பணம், பராமரிப்புச் செலவு போன்றவற்றைச் செலுத்த வேண்டிவருமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# தென்மராட்சியில் 13 பேருக்கு 2ஆவது பி.சி.ஆர். சோதனை



சாவகச்சேரி,நவ. 8

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்ட 13 பேருக்கு இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றன.

தொற்று இல்லையென உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் வழங்குவதற்கு முன்னரான பி.சி. ஆர். பரிசோதனைகளே நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மேல் மாகாணத்திலிருந்து தமது சொந்த இருப்பிடங்களுக்கு வந்திருந்த நாவற்குழி மேற்கு, உசன், விடத்தற்பளை, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், சரசாலை வடக்கு, மீசாலை, மட்டுவில் ஆகிய இடங்களைச்சேர்ந்த 13 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். 14 நாள்கள் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்ததையடுத்து சுகாதாரத் திணைக்களத்தின், சுற்றறிக்கையின் பிரகாரம் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரிசோதனையில் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

கொரோனா பாதிப்பு!

# இறுதிக் கட்டத்தில் வரைபடப் பணிகள்


## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ.8

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட இடங்களை அடையாளப்படுத்தும் வரைபடத்தின் தயாரிப்புப் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன என்று ஸ்ரீலங்கா விமானப்படையின் புதிய தளபதி எயார் மார்சல் சுதர்சன பத்திரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் கொரோனா ஒழிப்பு பணிகளை ஆரம்பித்ததும் விமானப்படைதான். இதற்காக சிறப்பாக பயிற்றப்பட்ட சிப்பாய்கள் விமானப் படையில் இருக்கின்றார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த கொரோனா காலகட்டத்தில் நாடளாவிய ரீதியில் தொற்றுப் பரவிய இடங்களை அடையாளப்படுத்தும் பணிகள் ஆரம்பமாகி இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. விமானப் படையினரின் உதவிமூலம் ஆகாய மார்க்கமாக அடையாளப்படுத்தப் பட்டு இந்த வரைபடம் தயாரிக்கப்படுகிறது. விமானப்படை மட்டுமன்றி பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் இப்பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். கொரோனா ஒழிப்பு பணிகளுக்காக விமானப்படையின் ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும் -என்றார். (ப-இ)



# கொழும்பு முகத்துவாரத்தில் மேலும் 32 பேருக்கு கொவிட்

கொழும்பு, நவ.8

கொழும்பு முகத்துவாரம் பகுதியில் மேலும் 32 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களுடன் பழகியவர்களில், முதலாம் கட்டத்தினருக்கே தற்போது தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபையின் முதன்மை மருத்துவ அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

முகத்துவாரம் பகுதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஐ-இ)

அம்பலாங்கொடவில்

# பெண்ணுக்கு கொரோனா ஐவர் மருத்துவமனையில்

கொழும்பு, நவ.8

அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து, அவரின் மூன்று குழந்தைகள், சகோதரி என ஐவர் சந்தேகத்தில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவர் இதற்கு முன்னர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி இருந்த நிலையிலேயே குறித்த பெண்ணுக்கும் கொரோனா தொற்றியுள்ளது. அவரும் வீடுகளுக்குச் சென்று மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. இதனை அடுத்து பெண்ணிடம் மீன்களைப் பெற்றுக்கொண்டவர்கள் உடனடியாக சுகாதாரப் பிரிவுக்கு தெரியப்படுத்துமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ப-இ)

# எம்.எஸ்.டி உள்ளிட்ட மூவருக்கு கொவிட்

கொழும்பு,நவ.8

அமைச்சரவைப் பாதுகாப்பு பிரிவின் எம்.எஸ்.டிக்கும் அவருடைய இரண்டு மகன்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் மூவரும் ஹபராதுவ நிலபியச தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம் அறிவித்துள்ளது. இவர்கள் கொழும்பு 7 இல் உள்ள பொலிஸ் விடுதி வீட்டில் தங்கியிருந்தனர். (ஐ-இ)

# நாடு நாளை தொடக்கம் முழுமையாக திறக்கப்படும்

*பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவிப்பு*

கொழும்பு, நவ.8
புதிய வழமைப்படுத்தல் திட்டத்தின்கீழ், நாளை திங்கட்கிழமை முதல், நாடு முழுமையாகத் திறக்கப்படலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். சுகாதார நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும். நாடு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில், உலகில் தற்போது நடைமுறையில் உள்ள எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்பட வேண்டும். கொரோனாவுடன் வாழப் பழகுவது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள சில ஒழுங்கு விதிகள் தொடர்பான எண்ணக்கருவே புதிய வழமைப்படுத்தல் திட்டத்தில் உள்வாங்கப் பட்டுள்ளது.
உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, மேலும் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு இந்த நோய்த் தாக்கம் இருக்கும். என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## ஏற்றுமதிசார் தொழில்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

*அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு*

கொழும்பு, நவ.8
விவசாயம், பெருந்தோட்ட ஏற்றுமதி சார்ந்த தொழில்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியிலும் துறை சார்ந்த நிறுவனங்களின் உற்பத்தி நடைமுறைகளைத் தொடர்ந்தும் அரசு முன்னெடுத்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## இலங்கையில் புதிய இனப்பாம்புகள்!

கொழும்பு, நவ.8
இலங்கையில் இரண்டு புதிய வகைப் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.
இந்தப் பாம்புகளை இலங்கையின் ஹெர்பெட்டாலஜிஸ்ட் (Herpetologist) மெண்டிஸ் விக்கிரமசிங்க நக்கிள்ஸ் பகுதியில் கண்டுபிடித்துள்ளார்.
அதுமட்டுமன்றி அண்மையில் இலங்கைக்கு மட்டும் உரித்தான தாசியா ஹாலியானஸ் எனும் உயிரியல் பெயருள்ள தனித்துவம் மிக்க உயிரினம் வன்னிக் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. (ற-இ)

## அரிசி 'மாஃபியாவுக்கு' எதிராக சட்டம் பாயும்

கொழும்பு, நவ.8
இலங்கையில் காணப்படும் அரிசி 'மாஃபியாவுக்கு' எதிராக அரசு விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது என்று கமத் தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். கன்னோருவ பகுதியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்பவர்களைக் கண்டறிவதற்கு சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும், இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்டம் நிலைநாட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)








பசுமை நிழல்கள் அமைப்பால் வழங்கப்பட்ட மரக்கன்றுகள் கைதடி வடக்கு சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கைதடி வடக்கு வன்னியசிங்கம் வீதியோரங்களில் நேற்றுமுன்தினம் நடப்பட்டன. இயற்கையோடு இணைந்திடுவோம் எனும் செயற்றிட்டதுக்கு அமைய இந்த மரநடுகை இடம்பெற்றது. (ப-159)



## பொது இடங்களில் தொற்று நீக்கம்

முல்லைத்தீவு, நவ. 8

நாட்டில் அதிகரித்துவரும் கொரோனாத் தொற்றுக் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது இடங்களில் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களால் தொற்று நீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பஸ் தரிப்பிடங்கள், பொலிஸ் நிலையங்கள், பரீட்சை நிலையம் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றில் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. (ஐ-19)

# எழுதுமட்டுவாழ் வடக்கில் டெங்கு பெருக வாய்ப்பு

## அதை ஒழிக்கும் நடவடிக்கை தீவிரம்




**சாவகச்சேரி, நவ. 8**

**தென்மராட்சி எழுதுமட்டுவாழ் வடக்குப் பிரிவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டம், படித்த இளைஞர் குடியேற்றத் திட்டம் போன்ற இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய சூழல் காணப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களபூச்சியியல் உதவியாளர்கள் குறித்த பகுதிகளில் மேற்கொண்ட பரிசோதனைகளின் அடிப்படையிலிலேயே அவர்கள் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர், தென்மராட்சி பிரதேச செயலகத்தினர், சாவகச்சேரி பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து இப் பகுதிகளில் டெங்குப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இப் பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளையும் கோவில் நிர்வாகத்தினர் கோவில் சுற்றாடலையும் துப்பரவாக வைத்திருக்குமாறும், பரிசோதனைக் காலத்தில் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் மற்றும் டெங்குக் குடம்பிகள் காணப்படும் பட்சத்தில் குடியிருப்பாளர். கோவில் நிர்வாகத்தினர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர். (ப-9)



## வெலிக்கடை சிறையில் அதிகளவான பி.சி.ஆர்.

கொழும்பு, நவ. 8

வெலிக்கடை சிறைச்சாலையில் 25 க்கும் மேற்பட்ட கொரோனாத் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அதிகளவான பி.சி.ஆர் சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உபுல் துசாரா உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

நேற்று 300 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் நோயாளிகள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. அனைத்து சிறைக்கைதிகளையும் சோதனையிட முடிவு செய்துள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## ஆயுதங்களுடன் கைதானவர்களுக்கு சட்ட நடவடிக்கை

கொழும்பு,நவ.8


களுத்துறை தெற்குப் பகுதியில், ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹின்னடியாங்கல பகுதியில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமான வான் மற்றும் கார் ஆகியவற்றை அவதானித்துள்ள விசேட அதிரடிப்படையினர், போன்றவற்றைச் சோதனை செய்த போது ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் இவர்கள், அதற்கு புறம்பாகப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## ஆயுர்வேத வைத்தியருக்கும் தொற்றியது கொரோனா



கொழும்பு, நவ.8

மீகொட ஆயுர்வேத வைத்திய சாலை, வைத்தியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

58 வயதான அந்த வைத்தியர் பேலியகொட கொத்தணியில் தொற்று உறுதிசெய்யப்பட்ட நபர் ஒருவருடன் நேரடித் தொடர்பில் இருந்ததன் காரணமாக சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் போது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மீகொட ஆயுர்வேத வைத்தியசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ப-இ)

## கொரோனாவிலிருந்து விடுபட முல்லை பொலிஸாரால் யாக பூஜை வழிபாடு



கொவிட்-19 நெருக்கடியில் இருந்து நாட்டுக்கு ஆசிவேண்டியும், ஒட்டுமொத்த மக்களையும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்க வேண்டியும் வடக்கு மாகாணத்தில் யாக பூசை ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இந்த யாக பூசை நடைபெற்றுள்ளது.

ஐப்பசி வெள்ளியான அன்று ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயக் குருக்கள் உள்ளிட்ட குருக்களின் ஏற்பாட்டில் இந்த யாக பூசை சிறப்புற நடைபெற்றுள்ளது. இதில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸார் கலந்துகொண்டு கொரோனாத் தொற்றிலிருந்து அனைத்து மக்களும் விடுபட ஆசி வேண்டினர். (ப-19)

## எப்பவோ முடிந்த காரியம்

கடந்த சில நாள்களாக இந்தா, அந்தா என்று இழுத்துக் கொண்டிருந்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் பைடனை வெற்றிச் சிம்மாசனத்தில் இருத்த, டொனால்ட் ட்ரம்ப் வீட்டுக்கு நடையைக் கட்டியிருக்கிறார். ஏற்கனவே பைடனே தேர்தல் முடிவுகளில் முன்னிலையில் நின்றாலும், சில மாநிலங்களின் முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதால், ஒருவேளை ட்ரம்ப் வெல்வதற்கான சூழலும் காணப்பட்டிருந்தது.

இருப்பினும் தேர்தல் முடிவுகளின்படி பைடனுக்கும் ட்ரம்புக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் ஆரம்பத்தில் மிகப் பெரிதாக இருந்தபோதும், இரு மாநிலங்களில் ட்ரம்ப் அடுத்தடுத்து வெற்றிபெற நிலைமை கொஞ்சம் பரபரப்பானது. இதே வேகத்தில் எஞ்சிய மாநிலங்களிலும், ட்ரம்பின் கொடி பறந்தால் மீண்டும் அவர் ஜனாதிபதியாகி விடலாம்.

கடந்த தேர்தலிலும் அப்படியே நிகழ்ந்தது. ஹிலாரி கிளிண்டன் முன்னிலை பெற்றிருந்த நிலையில் திடீரென ட்ரம்ப் எஞ்சிய மாநிலங்களைக் கைப்பற்றி திருப்புமுனை வெற்றியைப் பெற்றிருந்தார். இம்முறையும் அதே வரலாறு மீளத்திரும்பும் என்பதே ட்ரம்பின் கணிப்பு. அதனால் தான் பைடனை நெருங்கத் தொடங்கியவுடன் ஆர்வக் கோளாறில் ஊடக சந்திப்பொன்றை நடத்தி 'நாம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறோம்' என அறைகூவத் தொடங்கினார். ஆனால் பின்னர் அவருக்கு உளவுத் தகவல் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டன. நிலைமை அவருக்குச் சாதகமாக இல்லை என்று உறுதியாகத் தெரிந்தவுடன் 'இந்தத் தேர்தலில் பெரும் மோசடி நடந்துள்ளது. நான் நீதிமன்றத்தை நாடப்போகின்றேன்' என சடாரென இன்னொரு சரவெடியைக் கொளுத்திப் போட்டார். ஆனால் அவர் சொல்லும் கதையை இனியும் ரசிக்க எவரும் தயாராக இருக்கவில்லை.

வேடிக்கை என்னவெனில், கடந்த தேர்தலில் ரஷ்யா செய்த மோசடிகளால் தான் ட்ரம்ப் ஜனாதிபதியானார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டபோது, 'அமெரிக்கத் தேர்தல் முறையில் மோசடிக்கு வழியேயில்லை' என்று அடித்துச் சொன்னவர்தான் இந்த ட்ரம்ப். ஆனால் இப்போது அவர் தோற்றபோது, அதே தேர்தல் முறையில் மோசடி நடந்ததாக ஓலமிடத் தொடங்கியுள்ளார்.

இப்போது ட்ரம்ப் போய், பைடன் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியானால் உலகெங்கும் அமைதி நிலவி, பாலாறும் தேனாறும் ஓடும் என்றோ, இலங்கைத் தமிழர் விடயத்தில் அமெரிக்கா இன்னும் அக்கறை காட்டுமென்றோ யாரும் கணக்குப் போட்டால் அதைவிட முட்டாள்தனம், எதுவுமில்லை. அமெரிக்கர்களுக்கு வேண்டுமானால் ஒரு கோமாளியின் ஆட்சியில் இருந்து மீண்ட மகிழ்வு கிடைக்கலாம். ஆனால் இலங்கை போன்ற ஏனைய நாடுகளுடனான உறவுமுறை, அணுகுமுறை, கொடுக்கல் வாங்கல் எல்லாமே முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படியே நடக்கும். அதுவே அமெரிக்கா எழுதி வைத்திருக்கும் உலக விதி. அந்த விதியை பைடன் மட்டுமல்ல யாரேனும் குப்பனோ, சுப்பனோ வந்தாலும் துளியும் மாறுபடவிடாமல் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கையை யோகர் சுவாமிகளின் வார்த்தைகளில் சொல்வதானால் 'எப்பவோ முடிந்த காரியம்'தான். எனவே ட்ரம்ப் போய் பைடன் வந்தார் என ஆரவாரம் பண்ணாமல், பைடன் வந்தால் எங்கள் பிரச்சினை எல்லாம் தீர்ந்துவிடுமென நினைத்து ஏமாறாமல், ஓடும் செம்பொன்னும் ஒன்றென நோக்கும் 'ஜென்' மனநிலையோடு, எல்லாவற்றையும் கடப்பதே புத்திசாலித்தனமானது.

# கொரோனாவைப் பரப்பினால் 2 வருடங்கள் சிறைத்தண்டனை

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, நவ. 8**

**கொரோனா நோய்த் தொற்றை ஒருவர் வேண்டுமென்றே பரப்பினால் குற்றவியல் சட்டத்தின் 263ஆம் சரத்தின் அடிப்படையில் இரண்டாண்டு கால சிறைத்தண்டனையும், அவ்வாறு பரப்பி எவராவது உயிரிழந்தால் குற்றவியல் சட்டத்தின் 298ஆம் சரத்தின் பிரகாரம் ஐந்தாண்டுகள் வரையில் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் நாள்களில் தனிமைப்படுத்தல் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை மற்றும் தனியாள் இடைவெளி பேணாமை ஆகியனவற்றுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

கொவிட்-19 நோய்த் தொற்றுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. நோய்த் தொற்று பரவுகையைக் கட்டுப்படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலங்கை குற்றவியல் சட்டத்தின் 262 சரத்தின் பிரகாரம் ஆறு மாதங்கள் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட முடியும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.



இதேவேளை, அரச அலுவலர் ஒருவர் சட்டத்தை மீறினால் அவர் தனது தொழிலை இழப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## பி.சி.ஆர். சோதனைகளுக்காக நாளாந்தம் ரூ.6 கோடி செலவு

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8



கொவிட்-19 தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக, நாளாந்தம் 6 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை செலவிடப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனையின் இரசாயன பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா செலவாகின்றது என்று சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (த-இ)

## விலங்கு வேட்டை: மின்கம்பியில் சிக்கியவர் சாவு

பலாங்கொட -தலங்கம பகுதியில் உள்ள காணியொன்றில் விலங்குகள் வேட்டைக்காக வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின்கம்பியில் சிக்கி நேற்று அதிகாலை ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஹவத்த-வெல்லந்துர பகுதியில் வசித்து வந்த 33 வயதுடையவரே உயிரிழந்துள்ளார் என்று மேலும் தெரிவித்தனர். (த-இ)

# தனிமைப்படுத்தப்பட்டோருக்கு வழங்க 1.5 லட்சம் கிலோ மீன்கள் கொள்வனவு!

கொழும்பு, நவ. 8

தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் மேல் மாகாணத்துக்கு பகிர்ந்தளிப்பதற்காக சுமார் ஒன்றரை இலட்சம் கிலோ மீன்கள் மூன்று கடற்றொழில் துறைமுகங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் கிறிஷான்த்த ரத்னவீர தெரிவித்தார்.

கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக மீன்பிடித் துறைமுகங்களில் விற்பனை செய்ய முடியாமல், மீன்கள் குவிந்திருக்கின்றன. அவற்றை விநியோகிக்க 12 நடமாடும் வாகனங்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் கொழும்பு மாவட்டத்துக்கு நான்கு நடமாடும் வாகனங்களும் கம்பஹா மாவட்டத்துக்கு 8 நடமாடும் வாகனங்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.



தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறையில் இல்லாத பிரதேசங்களில், மக்கள் தங்களுக்குத் தேவையான மீன் வகைகளை, கடற்றொழில் கூட்டுத்தாபனங்களின் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்ய முடியும். அதற்கு ஏற்ற வகையில் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை கடற்றொழில் துறைமுகங்களிலிருந்து விலைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 20ஆயிரம் கிலோ மீன்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும், நுகர்வோருக்குத் தேவையான அளவு மீன்கள் கிடைக்கவில்லை - என்றார். (த-இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்."–பிராங்க் லோயிட் றைற்

## என்றென்றும் வற்றாத ஈர விழிகளுடன் இரண்டாம் ஆண்டு பெரும் துயர் நினைவு அஞ்சலியும் இருபத்து நான்காவது பிறந்த தின நினைவுகளும்

மண் மகிழ
08 . 11 . 1996



கண்நெகிழ
31 . 10 . 2018

**செல்வன் அழகராசா புவனநிதர்ஷன் (நிறோசன்)**

(முதலாம் ஆண்டு முகாமைத்துவ பீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்)

**திதி - அபரபட்ஷ அட்டமி (08.11.2020)**

மனம் நிறைந்த மகிழ்வுடனும் வாழ்த்துக்களுடனும்
இனம் நிறைந்து கொண்டாட வேண்டிய பிறந்த
நன்னாளில் புவனம் போற்ற வந்த
புத்தொளியே புவன நிதர்ஷனே புது யுகம் படைப்பேன்
என்று பல்கலை புகுந்த புவிதீரனே விதி செய்த
சதியால் நீ இன்றில்லையென்றாலும்
உன் நினைவு இல்லாமல் எந்நாளும் நாமுமில்லை
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !


என்றும் நெஞ்சை விட்டகலாத நினைவுகளுடன் அன்பு

**அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா, தம்பி,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.**

**ஊரெழு வடக்கு,
கற்பகம் மில் வீதி, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
12 . 03 . 1944



இறப்பு
31 . 10 . 2020

## திருமதி விக்டோரியா செல்வராணி

யாழ்ப்பாணம் சங்கானையை பிறப்பிடமாகவும். சங்கானை. நீர்கொழும்பு தற்பொழுது தென்னாபிரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்டோரியா செல்வராணி துரைசிங்கம் அவர்கள் 31-10-2020 அன்று தென்னாபிரிக்காவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியார் ஞானப்பிரகாசம். காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் அன்னம்மா அவர்களின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் அல்பிரட் துரைசிங்கம் JP (Whole Island) என்பவரின் மனைவியும். Prof T.M. வேந்தன் அவர்களின் அன்புத் தாயும். M.V.கலைவாணி அவர்களின் அன்பு மாமியாரும். M.V.சர்வி அவர்களின் அன்பு பேர்த்தியும் மற்றும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சலேசியார். காலஞ்சென்ற தம்பிதுரை நேசம்மா மற்றும் ஞானப்பிரகாசம் எட்வேட். எட்வேட் மேரிராணி என்பவர்களின் அன்புச் சகோதரியு-மாவார்.

அன்னாரின் பூதவுடல் தென்னாபிரிக்காவில் Bloemfontein என்ற இடத்தில் நாளை (09-11-2020) திங்கட்கிழமை 8:30am மணியளவில் தகனம் செய்யப்பட்டு பின்னர் அஸ்தி (சாம்பல் ) இலங்கை கொண்டுவரப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:
மகன், மருமகள்**

**+ 266 5869 1693**

CCTV, Intercom Telephone Systems, Computer Net Work புதிதாகவும் திருத்தியும் தரப்படும்.

**070 233 6821**

## விற்பனைக்கு

01. பருத்தித்துறையில் 2 தியேட்டர்கள், 2 கல்யாண மண்டபங்கள்
02.பளையில் 20 ஏக்கர் தென்னங் காணி
03. தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரிக்கு அருகில் 6 பரப்பு காணி
04. திருநெல்வேலி புதிய சிவன் வீதியில் 5 பரப்பு காணியுடன் 3 வீடு

**077 221 6683**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகுவைத்த நிறுவனத்திற்கு வருகைதந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை

AAA Gold Centar

**076 568 4346**

## வாடகைக்கு

யாழ். நகருக்கு மிக அண்மிய சூழலில் வண்ணார் பண்ணை வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. 3 படுக்கை அறைகள் 2 Hall Bath room மாத வாடகை 20,000 ஒரு வருட முற்பணம் தேவை. வாகன தரிப்பிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு: 077 931 1889, 076 883 3713
(தரகர்கள் தேவையில்லை)
Store ஆகவும் பயன்படுத்தலாம்

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னத்தம்பி சண்முகநாதன்**

(ஓய்வு நிலை அதிபர் அகில இலங்கை சமாதான நீதவான் (J.P)

திதி: 08.11.2020

பிறப்பு
25 . 05 . 1936

இறப்பு
06 . 11 . 2012

ஆண்டுகள் எட்டான போதும் ஆறவில்லை எம் துயரம்
எத்தனையோ வித்தைகளை எளிதாக புரியவைத்தீர்கள்
சிந்தையும் செயலும் மெருகேறி வருகையிலே
உங்களை நாம் இழந்தோமே - அப்பா
மண்ணில் நீங்கள் மறைந்தாலும் - எங்கள்
நினைவில் என்றும் நிறைந்து வாழ்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

"சண்முக தீபம்"
இல 43 /4 கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 07 . 1934



இறப்பு
06 . 11 . 2020

## பொன்னையா வேலுப்பிள்ளை

முரசுமோட்டை பழையகமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலுப்பிள்ளை கடந்த 06.11.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகனும். காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை. வள்ளியம்மை. மற்றும் பாறிப்பிள்ளை அன்னலட்சமி. சிவ பாக்கியம் ஆகியோரின சகோதரனும் பார்வதிப்பிள்ளை. பரமேஸ்வரி. புவனேஸ்வரி. சத்தியசீலன் (அமெரிக்கா). காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் குணசீலன். யோகேஸ் வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். பதுமநிதி. சிவராசா. கணேசன். சுகன்யா. ஜெயசெல்வி. சியாமலா. செல்வராசா ஆகியோரின் மாமனாரும். நவநீதன் (லண்டன்). நிருபரன் (லண்டன்). சத்தியா (கனடா) காலஞ்சென்ற முகுந்தா. மற்றும் சங்கீதா சிவரூபன். ஜெயரூபன். காந்தரூபன் (லண்டன்). பாமிசா (பிரான்ஸ்) கயூரன். டயாளினி. கௌதமி. அபிநயா. அச்சயன். அக்சியன். அபிசாயினி. டிலக்சன் (லண்டன்) லௌஷன் (லண்டன்) அட்சயா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு - பேரனுமாவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற்றுகிழமை காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை ஐயன் கோவிலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முரசுமோட்டை, பழையகமம்,
076 69 74 350, 077 13 92 335**

தகவல்: **குடும்பத்தினர்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல்-2021

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2020 டிசம்பர் 04ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்

1. **பாவனைபொருட்கள் காகிதாதிகள்**
   1.1 எழுது பொருட்கள் காகிதாதிகள். (Toner, Cartridge, Printer Ribbon, Printer paper, etc...)
   1.2 வெட்டும் கருவிகள் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
   1.3 சுகாதார சேவை வழங்கல்:- தும்புதடி. விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்ப்பிக், விம், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
   1.4 மழைக்கோட்டுக்கள். சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
2. **புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**
   2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
   2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
   2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.
3. **தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**
   3.1 அலுவலக தளபாடம் - மரம் உருக்கு-கணினிமேசை, கதிரைகள்.
   3.2 அலுவலக உபகரணங்கள் (இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
   3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.
4. **கட்டிட பொருட்கள் / பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**
   4.1 சகல வகையான கட்டட நிர்மாண பொருட்கள்.
   a. பெயின்டுகள் வாணிஸ், தொடர்பான பொருட்கள்.
   b. கட்டிட நிர்மாண தேவைகளுக்கான அனைத்துவிதமான பொருட்களும். (மணல், கிரவல், மற்றும் கல் தொடர்பானவை)
   c. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
   d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
   e. மரங்கள் - தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
   f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
   g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
   h. குளியலறை பொருத்துகள், சுவர், தரை மாபிள்கள்.
   i. ஈரத் தடைப்பொருட்கள்.
   j. கழிவுநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.
   k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்புக்கான பொருட்கள்.
5. **மின்னியல் பொருட்கள்**
   மின்சாரசாதன உபகரணங்களும் மற்றும் உதிரிபாகங்களும்.
6. **ஆய்வு கூட பொருட்கள் / சாதனங்கள்.**
   6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
   6.2 ஆய்வு கூட இரசயன பொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.
7. **வாகனபராமரிப்பு**
   7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
   7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
   7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
   7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.
8. **பொதுசேவைகள் வழங்கல்கள்**
   8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
   8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருட்கள்.
   8.3 புடவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
   8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள். இரசாயனங்கள் கருவிகள், இயற்கை உரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
   8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணனி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்த வேலைகள்.
   8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
   8.7 கதிரைகள் பின்னுதல்.
   8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
   8.9 உடைகளைச் சலவை செய்தல்.
   8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
   8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
   8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
   8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
   8.14 உணவு வழங்கல் சேவை.
   8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
   8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
   8.17 பயண முகவர் சேவை.
   8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
   8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)
   8.20 தற்காப்பு உபகரணங்கள்
   8.21 தீயணைப்பு கருவிகள்
9. **எந்திரவியல் சேவைகள்.**
   9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
   9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குத்ல் (Rewind) உட்பட
   9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
   9.4 குளிருட்டி, வாகன குளிருட்டி திருத்துதல்.
   9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டிடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
   9.6 மின்சார இணைப்பு வேலைகள்.
   9.7 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
   9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டிடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
   9.9 கட்டிடங்கள் / கட்டிடசேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணைசேவைகள்.
   9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
   9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் /பொருத்துதல் / தச்சு வேலை.
   9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
   9.13 கறையான் /பீடைகள் ஒழிப்பு வேலைகள்.
   9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)
   9.15 பராமரிப்பு வேலைக்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்
10. **மின்னணு பொருட்கள்.**
   10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
   10.2 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
   10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
   10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்க தொலைபேசிகளும் வழங்கல்.
   10.5 கணனி வலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2021"** எனக் குறிப்பிட்டுபதிவுத்தபால் மூலம் சகலவிண்ணப்பங்களும் பின்வருமாறுசமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   - ❖ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. **162-1-001-6-0000880 மக்கள் வங்கி** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.
3. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவுபத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொது தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.
5. கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரியநேரத்திற்கு பொருட்கள் / சேவைகளைவழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளைவழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.
6. விண்ணப்பதாரர் யாழ் பல்கலைக்கழக வவுனியாவளாகத்தில் வேலைகளை செய்ய அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபார பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்கவேண்டும்.
7. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.7 இற்குமட்டும்) தருக.
8. சேவைகளை/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்புகொள்ளவும்.
தொ.பே.இல. 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2021

01. தனிப்பட்டதகவல்கள்
   1.1 முழுப்பெயர் :........................................................
   1.2 தே.அ.அ. இல :........................................................
   (தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
   1.3 விலாசம்:........................................................
   ........................................................
   1.4 நிரந்தர தொலைபேசி இல:..............................கைத் தொலைபேசி இல:........................ தொலைநகல்:........................................
02. வியாபார தகவல்கள்
   2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:........................................................
   2.2 வியாபார பதிவு இல:........................................................
   (வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
   2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:........................................................
   (VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
   2.4 விலாசம்:........................................................
   ........................................................
   2.5 நிரந்தர தொலைபேசி இல:........................கைத்தொலைபேசி இல:...............................
   தொலைநகல் :....................................
   (குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
   2.6 மின்னஞ்சல் முகவரி:........................................................
   2.7 மாவட்டம்:........................................................
   2.8 பிரதேசசெயலர் பிரிவு:........................................................
03. மேலதிக விபரங்கள்
   3.1 வங்கியாளரின் பெயர் :........................................................
   3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :........................................................
   3.3 ICTAD பதிவு இல :........................................................
   (எந்திரவியல் சேவை 9.3 இற்குமட்டும்.) ICTAD பதிவு இல்லாது விடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) க்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவார்.
04. வழங்கல் சேவைகளுக்கானவிபரங்கள்.

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருட்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்
   நான் /நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன் / இணங்குகின்றோம்.

கையொப்பம் :...............................
பெயர் :............................... திகதி :.....................

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிதம்பரம் இராசலிங்கம் (J.P)

(ஓய்வுபெற்ற ஊழியர், ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை)

தோற்றம் 25.01.1934 — மறைவு 07.11.2012

பண்பின் சிகரமாய் பாசத்தின்
உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு
வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு
இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் எட்டு மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்.

தற்காலிக முகவரி:
தேவாலய வீதி, சங்கானை.
நிரந்தர முகவரி:
V.C.C மாவிட்டபுரம், தெல்லிப்பழை

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர்

## துயர் பகிர்கின்றோம்

உதிப்பு 09 . 01 . 1935



உதிர்வு 07 . 11 . 2020

### திருமதி றெஜினா குணநாயகம்

மகிழ்ச்சிகரன் எங்களை
மகிழ்வூட்டும் இனிய நண்பன்
அவரைப் பெற்றெடுத்த
அன்பு மிகுந்த அம்மா
திருமதி றெஜினா குணநாயகம்
இயற்கை எய்தினார் இந்தியாவில்
அன்னையின் இழப்பால் துயருறும்
பிள்ளைகள் உறவுகள்
எங்கிருந்தாலும் அவர்களோடு
துயர் பகிர்கின்றோம்
அம்மாவின் ஆத்ம சாந்திக்காய்
இணைந்து பிரார்த்திக்கின்றோம்.

1982 - 1986 பிரிவு
யாழ். பல்கலைக்கழக நண்பர்கள்

## மரண அறிவித்தல்



### திரு இலங்கைநாதன் செல்லத்துரை

மலேசியாவை பிறப்பிடமாகவும் சுழிபுரம், இந்தியா, லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திரு. இலங்கைநாதன் செல்லத்துரை அவர்கள் இலண்டனில் 06.11.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கைநாதன்-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம்-கமலாவதி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்பு கணவரும் அகிலநாதன், அரவிந்தநாதன், ரமேஸ்நாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோன், சுமதி . ஆஷா ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரனும் சுழிபுரம் முன்னாள் விதானையார் காலஞ்சென்ற அப்புத்துரையின் மருமகனும் ஈஸ்வரநாதன், அருணகிரிநாதன், செந்தில் நாதன் ஆகியோரின் சிறிய தந்தையும் சாந்தகுமாரி, சதானந்தவேல், காலஞ்சென்ற நிர்மலாதேவி, நித்தியநாதமனுநீதி, கிருபாநாதமனுநீதி, நாளாயினி ஆகியோரின் சின்ன மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் லீலாவதி, ஜானகி கனடாவில் வாழும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

அகிலன் + 447801142442
அரவிந்தன் + 447387929625
ரமேஸ் + 447808554055
அப்புத்துரை விதானையார் குடும்பம் 021 225 2653

தகவல்
குடும்பத்தினர்


## வாடகைக்கு வீடு தேவை

அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு
(கோப்பாய், வலிகாமம் பிரதேசத்தினுள்)
074 042 5895

## வேலைக்கு ஆள் தேவை

சுண்டுக்குழி, கச்சேரியடி விடுதி ஒன்றில்
சமையல் உதவியாளர் துப்புரவாளர்
(Cleaner) தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 512 2246

## VACANCY ELECTRICAL ENGINEERS

Wanted Electrical Engineer On Contract Basis. Academic qualification BSc, NDT, HNDE With Minimum one Year experience in the electrical field Sound knowledge of AutoCAD drafting and fluent in English. Ability to undertake tasks individually as well as in groups For the Position, an attractive Salary package will be provided.

YD Engineers Yarl (Pvt) Ltd.
Email: donald@yhw.com.sg
4th Mile Post, KKS. Road, Kondavil West,
Jaffna, Sri Lanka

## வீடு வாடகைக்கு

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியில்
அமைந்துள்ள நான்கு அறைகள்
கொண்ட வீடு வாடகைக்கு
உண்டு.
நிறுவனங்களுக்கு உகந்தது.
077 183 2404

## Clearance Sale

யாழ் கோண்டாவிலில் பாவித்து
சில மாதங்களே ஆன
Aircondition
(Singer Brand) (Normal & Inverter), கட்டில்கள்
(Single, Double)
மேசைகள், Dressing Table,
TV Stand, TV, Fridge,மற்றும்பல
தளபாடங்கள் விற்பனைக்குண்டு.

40% Discount

199, புகையிரத வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்
(சிவபூமி பாடசாலைக்கு அருகாமையில்)
077 301 3659, 077 254 3113


## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 09 . 1948



இறப்பு 07 . 11 . 2020

### திருமதி சிவபாததுரை கமலாதேவி

அரசடி, கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும், கொண்ட சிவபாததுரை கமலாதேவி நேற்று (07.11.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாததுரையின் அன்பு மனைவியும், சுதர்சன், சுமதி (சுவிஸ்), சுகந்தி (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரீதரன் (சுவிஸ்), யோகராஜன் (சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணம்), ஜீவிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலக்சன், டிலக்சி, சுபாங்கி, சௌமியா, மதுமிதா, ஹரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி , ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 08 . 1942



மறைவு 06 . 11 . 2020

### வேலுப்பிள்ளை வெற்றிவேல்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் 25 A, திருமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வெற்றிவேல் அவர்கள் கடந்த (06.11.2020) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், சுஜீவன், காலஞ்சென்ற பிரதீபா மற்றும் டிறக்ஷனா, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இனிதா, தமிழ்ஒளி ஆகியோரின் மாமனாரும், டிவிஷனா, யஸ்ரிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராசபூரணம், நாகராசா, நாகேந்திரன், கிறிஸ்ரீனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் 25 A, திருமகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25A, திருமகள் வீதி, அரியாலை.

தகவல் : குடும்பத்தினர்.
075 040 2170

## சுகாதார பிரிவினர் திடீர் கண்காணிப்பு

வவுனியா, நவ.8
வவுனியாவில் கள நிலவரங்களைக் கண்காணிக்க அதிரடியாகக் களத்தில் இறங்கிய சுகாதாரப் பிரிவினர், சுகாதார விதிமுறைகளை மீறியவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்தனர்.

வவுனியா வர்த்தக நிலையங்களுக்கு நேற்றுக் காலை வவுனியா சுகாதாரப் பிரிவினர் திடீரெனச் சென்றனர். வியாபார நிலையங்களில் சுகாதார நடைமுறைகள் பேணப்படுகின்றதா என்பது தொடர்பில் கண்காணித்தனர். விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்களின் விவரங்களைத் திரட்டினர். வீதியில் சரியான முறையில் முகக்கவசம் அணியாது, முகக்கவசமின்றிப் பயணித்த பொதுமக்களை எச்சரித்தனர். அவர்களின் பெயர் விவரங்களையும் திரட்டினர். சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளைச் சோதனையிட்ட அவர்கள், சாரதி பயணிகள் ஆசனங்களுக்கிடையே பொலித்தீன் மூலம் அடைக்கப்பட்டுள்ளதா என்பதைப் பார்வையிட்டனர். அதனை மீறியிருந்த சாரதிகளின் பெயர் விவரங்களையும் திரட்டியதுடன் சாரதிகளை எச்சரித்தும் அனுப்பினர் (ஐ-18)

## தேவை

பில் கிளார்க், உதவியாளர், பயிலுனர்
என்பவற்றுக்கு பெண் ஊழியர் தேவை.
**பிருந்தா மில்ஸ், 179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**
தொடர்புக்கு: 077 174 6101

## பதவி வெற்றிடம்


யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்குரிய பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன

1. **வலய முகாமையாளர்**
2. **மாவட்ட இணைப்பாளர்**
3. **பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்**
4. **வட்டார பிரதிநிதி**
5. **வெளிக்கள உத்தியோகத்தர்**

ஆகிய மேற்குறித்த பதவிகளுக்கு 18 வயது பூர்த்தியான சாதாரண தர பரீட்சையில் O / L பாடம் சித்திபெற்ற ஆண் / பெண் ஆகியோர் மற்றும் பகுதி நேரம் பணியாற்றக் கூடியவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
**விண்ணப்ப முடிவுத்திகதி 18.11.2020**

பணிப்பாளர்
மனிதவள பிரிவு
இல. 10, பொதிமண்டப வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாலர் பகல் விடுதியும்
முன்பள்ளியினதும் செயலாளர்
**வேலுப்பிள்ளை குணசீலன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா**
**வேலுப்பிள்ளை**
அவர்கள்

06.11.2020 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நிர்வாகத்தினர்,**
**நீர்வேலி பாலர் பகல் விடுதியும், முன்பள்ளியும்.**

## கண்ணீர் அஞ்சலி



யா/மானிப்பாய் மகளிர்
கல்லூரியின் ஓய்வுபெற்ற
சிரேஷ்ட ஆசிரியரும், நலன்
விரும்பியும், பாடசாலை
வளர்ச்சிக்கு பல்வேறு
உதவிகளையும் வழங்கிய

**திருமதி**
**சுந்தரலக்ஷ்மி இராமலிங்கம்**
அவர்கள்

லண்டனில் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திக் குழு.**
**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி மானிப்பாய்.**

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
20
.
03
.
1937



**மறைவு**
08
.
11
.
1995

அமரர்
**குலசேகரம்பிள்ளை ஈஸ்வரி**

புன்முறுவல் காட்டியே முகமன் செய்யும் வடிவம்
குறுநகை ததும்ப உரையாடிடும் குணக்குன்றம்
சுறுசுறுப்புடன் சுயமாய் உதவிடும் சுந்தர உருவம்
நறுமலரும் நாண நம்மிடையே நடமாடியவரே
ஈடு இணையற்ற நிம்மதி நாடி
நீடு துயில் கொண்டதேனோ
ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு
எழுந்துவர மாட்டீர்களா அம்மா!
மீண்டும் திரும்பி வர மாட்டீர்களா அம்மா!

**இல.4, இராஜ வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## வாகனம் விற்பனைக்குண்டு

Mahindari Polero இனத்தைச் சேர்ந்த
DAG- இலக்க வாகனம் விற்பனைக்கு
உண்டு.
தொடர்புக்கு: 077 684 8810

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை
ஒன்றுக்கு பணிபுரிவதற்கு
ஆண், பெண் இருபாலாரும்
தேவை.
தொடர்பு:
**077 937 0000**

## காணி விற்பனைக்குண்டு

தெல்லிப்பளை, கட்டுவன் மேற்கு
ஐயனார் கோவில் முன் வீதியில்
1 3/4 பரப்புக் காணி, வீடு விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:**
**076 330 6584, 077 9360 508**

## வேலையாட்கள் தேவை

திருநெல்வேலியில் அமைந்துள்ள பான்சி
கடைக்கு வேலையாட்கள்
தேவை.
Online Business செய்யக்கூடிய
வர்கள் இருபாலாரும்
விரும்பத்தக்கது.
**தொடர்பு: 077 551 3375**

## காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி,
நகருக்கு 200MTRS தூரத்தில்
பரப்பளவு 4 1/2 குழி 0.2 விற்பனைக்
குண்டு.
இடம் ஆஞ்சநேயர் கோயிலுக்கு முன்
தரகர் தேவையில்லை
**தொடர்பு: 077 645 2487**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 40 வயது சொந்தமாக
தொழில் புரியும் (கம்ப்பியூட்டர் கிராபிக்ஸ்)
மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்ப்பில்லை.
**தொடர்பு:**
**077 905 8615 (Viber & Whatsapp)**

## காசாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு காசாளர் தேவை.
ஆண் / பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
(உயர்தரம், கணிதம், வர்த்தகம் தகைமையுடையவர்)
**தொடர்பு:- ஆர்க் தளபாட நிலையம்**
**இல.35, கோட்டைக்காடு ஒழுங்கை,**
**பலாலி றோட், கோண்டாவில்.**
**T.P: 077 300 1763**

## விற்பனைக்கு

யாழ் பிறவுண் வீதியில் 6 பரப்பு காணியும், யாழ் வைமன் வீதியில் 6 பரப்பு காணியும், யாழ் பலாலி வீதியில் இலுப்பையடி சந்திக்கு அண்மையில் 3 பரப்பு காணியும், யாழ் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக 15 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட தனி கடையும் விற்பனைக்குண்டு.
**தொடர்பு:- 0777 23 25 35**

## விசேட வகுப்புகள்

தரம் 1 தொடக்கம் 5 வரையான
விசேட வகுப்புக்கள் தங்கள் இடங்களிற்கு
வந்து கற்பிக்கப்படும்.
தரம் 04 மாணவர்களிற்கு
Zoom Class வசதியும் உண்டு.
**தொடர்பு:- 076 918 7053**

## வேலையாட்கள் தேவை


யாழ். நகரில் அமைந்துள்ள தொலைபேசி
நிலையத்திற்கு

- விற்பனையாளர்
- கணக்காளர்
- கணினி வேலையில் அனுபவமுள்ளவர்
- தொலைபேசி திருத்துனர்
மற்றும்
- சைக்கிள் பாதுகாப்பு உதவியாளர் தேவை.

**தொடர்பு: 077 361 1282**

## மரண அறிவித்தல்

**மண்ணில்**
27
.
11
.
1933



**விண்ணில்**
07
.
11
.
2020

### அந்தோனி யேசுதாசன்

**(முன்னாள் பாடுமீன் விளையாட்டுக் கழகத் தலைவர்)**

குருநகரை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு அந்தோனி யேசுதாசன் நேற்று (07.11.2020) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி சவிரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜயாத்துரை டெய்சி தம்பதியரின் மருமகனும், லூர்தம்மாவின் அன்புக் கணவரும், சதீஸ் (லண்டன்) இன் அன்புத் தந்தையும், சுக்ருநினின் மாமனாரும், றொசான், றொயிஸ்ரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.11, கொண்டடி வீதியிலிருக்கும் இல்லத்திலிருந்து இன்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சதீஸ் (மகன்)**

## மாபெரும் குருதித்தான முகாம்



விதையனைத்தும் விருட்சமே, மாற்றத்திற்கான மாவட்ட இளைஞர் பேரவை மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் இணைந்து நடத்தும் 10வது குருதித் தான முகாம் உரும்பிராய் வடக்கில் அமைந்துள்ள கிராமிய உழைப்பாளர் சங்க மண்டபத்தில் இன்று காலை 08.30 முதல் மாலை 03.30 வரை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் இந்த உன்னத பணியில் பங்களிப்புச் செய்ய விரும்புவோரை இந்த நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அந்த அமைப்பினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ப-27)

## ஆயுதங்களுடன் 7 பேர் கைது

கொழும்பு,நவ.7

களுத்துறை தெற்கு சென்றல் சந்தியில் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 7 பேர், ஆயுதங்களுடன் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து, கைக்குண்டு ஒன்று, ரி56 ரக 4 தோட்டாக்கள், 4 வாள்கள் மற்றும் 6 கத்திகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

22 தொக்கம் 36 வயதுக்குட்பட்டவர்களே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு • 19 • 08 • 1951

இறப்பு • 07 • 11 • 2020

### நாகரத்தினம் தனபாலகிருஷ்ணன்

உடுவிலைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிட மாகவும் கொண்ட நாகரத்தினம் தனபாலகிருஷ்ணன் நேற்று (07.11.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி நாகரத்தினம் இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், யோகராணியின் அன்புக் கணவரும், பிர காஷின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்துமாரியம்மன் கோவில் வீதி,**
**திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

பூநகரியில்....

கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து மன்னார் பேருந்தில் மன்னாரை வந்தடைந்து அங்கிருந்து யாழ்ப் பாண பேருந்தில் ஏறி பூநகரி -ஜெயபுரத்தில் இறங்கி முச்சக்கர வண்டியில் வீடு சென் றுள்ளார். அவர் வீட்டில் உடனேயே தனிமைப்படுத்தப் பட்டுள்ளார். அவர் வீட்டில் தனிமைப்ப டுத்தலை முடிவு றுத்துவதற்கு முன் னதாக பி.சி.ஆர். சோதனை மேற் கொள்ளப்பட்டது. இதன்போது அவ ருக்குத் தொற்று இருப்பது உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது. (ஒ,5,6)

---

## கண்ணீர் அஞ்சலி

துலா தன்னார்வ அமைப்பின் ஆலோசகரும், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணி கற்கைநெறி யின் இணைப்பாளரும், சைவ சித்தாந்த துறையின் தலைவரும் இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளரும் ஆகிய

**கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன்** அவர்களின் பாசமிகு மாமியார்




**அமரர் மாணிக்கவாசகர் விசாலாட்சி**

அவர்கள் காலமானசெய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாகக் குழு**
**துலா தன்னார்வ அமைப்பு**

---

## மரண அறிவித்தல்



பிறப்பு : 09.06.1948
இறப்பு : 07.11.2020

### வேலுப்பிள்ளை நாகராசா

நீர்வேலியை பிறப்பிடமாகவும், இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராசா நேற்று (07.11.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சுப்பையா பூமணி தம்பதியரின் மருமகனும், யோகம்மாவின் அன்புக் கண வரும், விஜிதா, சுஜிதா, வசீகரன், ராஜிதா ஆகியோரின் தகப்பனாரும், ஜெயராஜா, ஜெயதரன், காந்தன் ஆகி யோரின் மாமனாரும், செல்லமாணிக்கம், இரத்தினசாமி ஆகியோரின் மைத்துனரும் ஜெகநாதன், அம்பிகாதேவி ஆகியோரின் சகலனும், திருவேரகன், குருவித்தகன், வினிதா, அபிசங்கர், அபிசன் ஆகியோரின் பேரனும், கெங்கா, கோசலா, தீபன், கரன் ஆகியோரின் சின்ன மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பகல் 12.00 மணியளவில் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**செல்வம் மில் வீதி,**
**இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.**
**+4917651899499, 94778923105.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்



### சுந்தரலஷ்மி இராமலிங்கம்

**(இளைப்பாறிய ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி)**

யாழ். மானிப்பாய் சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை, இங்கிலாந்து ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சுந்தர லஷ்மி இராமலிங்கம் அவர்கள் கடந்த (06.11.2020) வெள்ளிக் கிழமை அன்று காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதி களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராம லிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், நளின், ஜெயந்தா, முரளி, சுமதி, சுரேஷ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற வர்களான புஷ்பராசலிங்கம், நாகலஷ்மி, அன்னபூரணம், ஆகி யோரின் அன்புச் சகோதரியும், ஆன், உமா, ஆனந்தி, இரகுநாதன், பிரஷாந்தி மற்றும் தமலாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுபாஷினி, சதிஷ், விக்னேஷ், பிரணவன், அபிராமி, சிந்துஜா, ஜனகன், திவ்யா, ஹரிணி, தர்ஷன், அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்



மண்ணில் • 29 • 11 • 1929

விண்ணில் • 07 • 11 • 2020

### திருமதி சிவகாமிப்பிள்ளை சந்திரசேகரம்

நயினாதீவு 2ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை சந்திரசேகரம் நேற்று (07.11.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சந்திரசேகரத்தின் அன்பு மனைவி யும், சச்சிதானந்தன், ஓங்காரலட்சுமி, கருணானந்தன், சுதாகரன், கோமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தியாகேஸ்வரி, ஜெகதீசன், மங்களராஜராஜேஸ்வரி, சுரமஞ்சரி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மங்கயற்கரசி, சோதி மணி மற்றும் அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற வர்களான சோமசுந்தரம், இலங்கநாயகம், சாந்தலிங்கம், சாரதாம்பாள் ஆகியோரின் மைத்துனியும், கபிலன், ஜஸ்வரியா, தனுஷன், டினோஜன், வேனுஜன், கிசோபன் பிரணவி, அம்பிகா, லாவண்யன், ரமணன், சுபத்திரா, பிரவீனா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**347/5, கோவில் வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### ஜனாதிபதியாக...

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 538 சபைகளைக் கொண்டது. இதில் 270 தேர்தல் சபைகளை எவர் கைப்பற்றுகின்றாரோ அவரே ஜனாதிபதியாகுவார். நவம்பர் மாதம் 4ஆம் திகதியில் இருந்து வாக்குகள் எண்ணப்பட்டன. ட்ரம்பை விடவும் பைடன் ஆரம்பம் முதலே முன்னிலையில் இருந்துவந்தார். நேற்று மாலை வரை 478 தேர்தல் சபை முடிவுகள் வெளியாகியிருந்தன. இவற்றில் பைடன் 264 சபைகளையும் ட்ரம்ப் 214 சபைகளையும் கைப்பற்றியிருந்தனர். நேற்று முன்னிரவு 20 தேர்தல் சபைகளைக் கொண்ட பென்சில்வேனியாவின் முடிவுகள் வெளியாகின.

ஜனநாயகக் கட்சி அமோக வெற்றிபெற்றது. இதையடுத்து பைடன் வெற்றிபெற்ற தேர்தல் சபைகள் 284ஆக அதிகரித்தன.

பைடன் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளிவந்த 15ஆவது நிமிடத்தில் (இலங்கை நேரப்படி இரவு 11 மணியளவில்) 6 தேர்தல் சபைகளைக் கொண்ட நிவேடாவையும் பைடன் கைப்பற்றினார். ஜோர்ஜியாவிலும் பைடன் முன்னிலையில் இருந்தார்.

எனினும் தேர்தல் முடிவுகளை ட்ரம்ப் ஏற்கவில்லை. 'உத்தியோகபூர்வமான வாக்குகளை எண்ணினால் நான்தான் வெற்றிபெறுவேன், ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 3ஆம் திகதி முடிவடைந்துவிட்டது. ஆனால் ஜனநாயகக் கட்சியினரின் தேர்தல் இன்னும் முடிவடையவில்லை, தேர்தல் முடிவுகளை ஒருபோதும் ஏற்கப்போவதில்லை இதற்கெதிராக நீதிமன்றம் செல்லவுள்ளேன்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகியதை அடுத்து அமெரிக்காவெங்கும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. பைடனின் ஆதரவாளர்கள் அமெரிக்காவெங்கும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தேர்தலில் பைடனுக்கு ஆதரவாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஒபாமா பரப்புரை செய்திருந்தார். அவரின் வியூகங்களே பல இடங்களை பைடன் கைப்பற்ற முக்கிய காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. தமிழகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கமலா ஹரிஸ் துணை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். (ம)

### கொரோனாவின்...

கொழும்பு, நவ. 8

நாட்டில் இதுவரை 80 கர்ப்பிணிகளுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 4 கர்ப்பிணிகள் குழந்தை பிரசவித்துள்ளனர் என்றும் அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்படுவர் என்றும் நிபுணத்துவ மருத்துவர் மயூரமான்ன தேவோலகே தெரிவித்துள்ளார். (ம-எஇ)

### சஹ்ரானின்...

கொழும்பு, நவ. 8

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதியன்று இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரியான ஸஹ்ரானின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹதியாவுக்கு கொரோனா தொற்றியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை, வெலிகந்தையிலுள்ள கொவிட்19 விசேட சிகிச்சை மத்திய நிலையத்தில் அவர் நேற்றுச் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 25 வயதான அப்துல் காதர் பாத்திமா ஹதியா, சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மருத்துவமனைக்கு அழைத்துவரப்பட்டார். அவருடன், வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்த கொரோனாத் தொற்றாளர்களில் 28 பேருக்கும் வெலிக்கந்தயிலுள்ள கொவிட் 19 மத்திய நிலையத்தில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-இ)

### சாவு 34ஆக...

என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 இலிருந்து 34 ஆக உயர்ந்துள்ளது.

**31ஆவது சாவு**

கொழும்பு 10, மாளிகாவத்தையைச் சேர்ந்த 42 வயதுடைய பெண் தனது வீட்டில் நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட மாரடைப்பே அவரது இறப்புக்குக் காரணம் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**32ஆவது சாவு**

கொழும்பு 10, மாளிகாவத்தையைச் சேர்ந்த 69 வயதுடைய பெண் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டு இருந்துள்ள நிலையில் சிகிச்சைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதையடுத்து நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் இவரது இறப்புக்குக் காரணம் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**33ஆவது சாவு**

வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டு இருந்துள்ளதுடன் சில நாட்களாகக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்ட நிலையில் அவரது வீட்டில் நேற்று உயிரிழந்துள்ளார். கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் இவரது இறப்புக்குக் காரணம் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**34ஆவது சாவு**

கனேமுல்லையைச் சேர்ந்த 88 வயதுடைய பெண் மினுவாங்கொடை கொரோனாத் தொற்றாளருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவராவார்.

தனிமைப்படுத்தலின்போது ஏற்பட்ட சுகயீனத்தால் பல்லேகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் மற்றும் குருதி நஞ்சாகியமை இவரது இறப்புக்குக் காரணம் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனாவால் நேற்று வரை 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 21 பேர் கடந்த 16 நாட்களில் சாவடைந்துள்ளனர். குறித்த 21 பேரும் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

### கச்சேரி இன்றும்...

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடல் சர்ச்சை முடிவதற்குள் இன்று மீண்டும் அடுத்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலுக்கும் மேல் மாகாணத்திலிருந்து சுமார் 150 பேர் வருகை தரவுள்ளனர்.

இவர்களுடன் வடக்கு அதிகாரிகள் சுமார் 150 பேர் என்று 300 பேர் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் அவரது பரிவாரங்கள் என்று சுமார் 100 பேர் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் 5 இராஜாங்க அமைச்சர்கள், அமைச்சுச் செயலர்கள், இராஜாங்க அமைச்சுச் செயலர்கள், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த அதிகாரிகள் சுமார் 150 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். மேல் மாகாணத்திலிருந்து வரும் அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் என்று எவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை.

இதன் பின்னர் பி.ப. 2 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையில் மற்றொரு கூட்டம்நடைபெறவுள்ளது. இந்தக்கூட்டத்தில் விளையாட்டுத்துறை யினர், இளைஞர் கழங்க பிரதிநிதி கள், மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்க ளத்தினர், சிறுதொழில் முயற்சி யாளர்கள், வர்த்தக சங்கத்தினர் என்று சுமார் 150 பேர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திலும் இன்று பி.ப 2 மணிக்கு கலாசார அலுவலர்கள் உள்ளிட்ட தரப்பினர் 90 பேருடன் ஓர் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மாவட்டச் செயலகத்தில் மாலை 5 மணிக்கு கலைஞர்களுடன் நாமல் ராஜபக்சவின் சந்திப்பு ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்புக்கான யாழ்ப்பாண மாவட்டச் செயலணி, பொதுக் கூட்டங்களை தவிர்க்குமாறு அறிவுறுத்தியிருந்தது. அத்துடன் சுகாதார மருத்துவ அதிகாரியால் கூட்டம் நடத்துவதை தவிர்க்குமாறும் மாவட்டச் செயலருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையிலுமே நேற்று முன்தினம் ஓர் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிலையில் மற்றைய கூட்டம் இன்று நடைபெறுகின்றது. (ஓ.5)

### பேரன் இறந்த...

சகிதரன் நேற்றுமுன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்றுள்ளார்.

இன்று அதிகாலை 4 மணிளவில் கோயில் செல்வதற்காக அரவது மனைவி அவரை எழுப்பியுள்ளார். அப்போது அவர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார். அதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அப்போது அவரது அம்மம்மா பிரார்த்தனை செய்து திருநீறு பூசி அவரை மருத்துவனைக்கு அனுப்பியுள்ளார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சகிதரன் சிலமணி நேரங்களில் உயிரிழந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட அம்மம்மா மயங்கி விழுந் துள்ளார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனாமருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-எ-26)

### நேற்றும்...

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 13ஆயிரத்து 419ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## பஸ் கட்டணம் அதிகரிக்காது!

### அடுத்த வாரம் மாற்றுயோசனை

கொழும்பு, நவ. 8

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலையில் பஸ் கட்டணத்தை அதிகரிக்க ஒருபோதும் தயாரில்லை. எனினும், தற்போதைய காலத்துக்குப் பொருத்தமான போக்குவரத்து கொள்கை ஒன்று அடுத்தவாரம் தயாரிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். பஸ் கட்டணத்தை அதிகரிக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ள நிலையிலும், அது தொடர்பில் எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க அந்தச்சங்கத்தினருடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளுக்கிணங்க கொரோனா வைரஸ் தொற்று செயற்பாட்டுக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பஸ்களில் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் பஸ் உரிமையாளர்கள் மற்றும் பயணிகள் ஆகிய இருதரப்பினரையும் கவனத்தில் கொண்டு இரு தரப்பினருக்கும் அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் தீர்மானம் எடுப்பது அவசியம். என்றார்.

இதேவேளை, தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன ப கட்டண அதிகரிப்பு தொடர்பில் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலையில் தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை பெரும் நட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றது. என்றார். (ம-தஇ)


**பணியாளர் தேவை**

கிளிநொச்சியில் உள்ள Hotel ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர் தேவை.

* கணக்காளர்
* சமையலாளர் (Chef)

தொடர்பு: 0777 660 396

**துயர் பகிர்கின்றோம்**



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் **வே.குணசீலன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னையா வேலுப்பிள்ளை**

06.11.2020 அன்று இறைபதம் அடைந்தார்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை.**

முதலாம் பக்க தொடர்ச்சி...

## பவித்திரா...

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று நடைபெறும் கலந்துரையாடலில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மற்றும் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் கூட்டம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர்களான பீரிஸ், பவித்திரா வன்னியாராச்சி மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இன்றைய கூட்டத்துக்கு அமைச்சர்களான பீரிஸ் மற்றும் பவித்திரா வன்னியாராச்சி ஆகியோர் வரமாட்டார்கள். 9 இராஜாங்க அமைச்சர்களில் 6 பேர் மாத்திரமே இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ,5)

## சுகாதார....

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச இந்தக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக அமைச்சர் நாமல் ராஜபக்ச தலைமையிலான குழுவினர் வருகைதரவுள்ளனர். இந்தக் குழுவினர் கல்லுண்டாயில் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்காக சுமார் 700 பேருக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. தற்போது கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பொது நிகழ்வுகள், மக்கள் ஒன்று கூடல்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி அதனை நடத்துவதால் சுகாதாரத் தரப்பின் அனுமதி கட்டாயம் பெறப்பட வேண்டும். ஆனால் இன்றைய நிகழ்வுக்கான அனுமதி எதுவும் சுகாதாரத் தரப்பிடம் பெற்றுக் கொள்ளப்படவில்லை. (மஒ,5)

## யாழ்...

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளிப்படுத்தியுள்ளது. முன்னுதாரணமாக இருக்கவேண்டியவர்கள் தவறான முன்னுதாரணத்தை வழங்கி விடக்கூடாது என்பதை அந்தச் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அந்தச் சங்கம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா சம்பந்தமாக மாவட்ட மற்றும் மாகாண மட்;டத்தில் மாவட்டச் செயலர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரே முடிவுகள் எடுக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர்கள் இருவரும் இருந்துள்ளனர்.

இலங்கையில் பொதுச் சுகாதாரத்துறை மிக இறுக்கமாக உள்ளது. இதன் காரணமாகவே ஏனைய நாடுகளை விட இலங்கையில் கொரோனாவை கட்டுப்படுத்த முடிகின்றது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கூட்டம் தொடர்பில் இரண்டு சுகாதார மருத்துவ அதிகாரிகள் எடுத்த முடிவு சரியானது. அவர்களது முடிவுகளுக்கு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் பின்புலமாக இருந்து ஒத்துழைப்பு வழங்கியிருக்கவேண்டும். இந்த மூன்று தரப்பினரும் ஒரே நேர் கோட்டில் இருந்து முடிவுகளை எடுக்கவேண்டும். அவ்வாறு இல்லை என்றால் பிரச்சினை எழும்.

கூட்டங்களையே நடத்த வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. முக்கியமான அவசரமான கூட்டங்கள் நடத்தப்படலாம். அவை மிகவும் தேவையானவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்த முடியும். மாவட்டச் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்றவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் அன்றைய தினம் அழைக்கப்பட்டிருக்கவேண்டியதில்லை.

திருமணத்துக்கு 50பேரை அழைக்கலாம் என்று முடிவு எடுத்து அறிவித்த அதிகாரிகளுக்கு தங்களது கூட்டத்துக்கு எத்தனை பேரை அழைக்கலாம் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

மேல் மாகாணத்திலிருந்து வந்தவர்களை 14 நாள்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலில் வைத்திருக்க வேண்டும் என்று அறிவித்தவர்களுக்கு, அங்கிருந்து வரும் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கூட்டத்தை நடத்துவது என்றால் அவர்களுக்கும் தங்களுக்கும் இடையில் எவ்வளவு தூரம் இடைவெளி பேணப்பட வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

மக்களை ஒரு மீற்றர் சமூக இடைவெளி பேண வேண்டும் என்று அறிவுறுத்தும் அதிகாரிகளுக்கு தாங்கள் அந்த சமூக இடைவெளியைப் பேண வேண் டும் என்ற அறிவு இருந்திருக்கவேண்டும். எம்மைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கொத்தணி என்ற ஒன்று வரக்கூடாது என்பது தான் விருப்பம் என்று தெரிவித்துள்ளனர். (ஒ,5)

நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226241

### வேலைக்கு ஆண்கள் தேவை

யாழ்ப்பாணம்.கிளிநொச்சியிலுள்ள
பிரபல நிறுவனமொன்றிற்கு
விற்பனையாளர்கள் தேவை.
சம்பளம்:-20,000-35,000 வரை

**077 375 3503**

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் பலாலி றோட் கோண்டாவிலில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக் கப்படும். 1 1/2 பரப்பாக. (கோண்டாவில் சந்திக்கு அருகாமை).

தொடர்பு:
**076 888 4625, 077 505 8561**

### காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் கல்வியங்காடு
நாயன்மார்கள் கேணியடியில் 21
பரப்பு காணி விற்பனைக்குண்டு.
பிரித்துக் கொடுக்கப்படும்.
**2 பரப்பாக**
**தரகர் தேவையில்லை**
தொடர்பு:
**076 436 5814, 074 075 4204**

### தனியார் நிறுவனமொன்றில் பணிபுரிவதற்கு

**வேலையாட்கள் தேவை**

Drivers மற்றும் Machinary இல் வலை செய்யக்கூடியவர்கள் சுய விவரக் கோவையை தபால் அல்லது email மூலம் அனுப்பவும்.

987/2, K.K.S. Road, Jaffna.
email:nobertpriska2019@gmail.com
Phone Number:077 0030 442

### கடை வாடகைக்கு விடப்படும்

130/01, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள 200 சதுர அடியைக் கொண்ட முதலாம், இரண்டாம் மாடிக் கடை வாடகைக்கு விடப்படும். வெலிங்டன் சந்தி அருகில்

**077 360 9005**

### தேவை

சிலைகள், சாடிகள் **Paint** பண்ண
கூடிய ஆண் ஒருவர் தேவை.
ஸ்பிறே **Paint** பண்ண கூடியவர்
விரும்பத்தக்கது

**076 826 7703**

### சிறுநீரகம் தேவை

35 வயதுடைய நபருக்கு
A+ இரத்த வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் தேவை.
**077 910 7218, 077 008 2915**

### வேலையாட்கள் தேவை

யாழ் நகர் பிறவுண் வீதியில் உள்ள
வீடு ஒன்றில் சுத்திகரிப்பு வேலைசெய்யக்
கூடிய ஆண் வேலையாள் தேவை.
சம்பளம் 18,000 ரூபா.
வயது : 50 கீழ்
தொடர்பு:- **0777 111 444**

### காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு ஆனந்த கானம் பகுதியில் 44 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 2 3/4 பரப்பு பிரித்து கொடுக்கப்படும். (கரந்தன் (ராசா கடை அருகாமை) தரகர் தேவையில்லை.

தொடர்பு:
**076 6400 974, 077 8949 549**

### Vacancy

Cashier (இருபாலாரும் . O/L Maths C)
Quality Assurance (BSc Degree Or Equivalent)
Marketing Executive (Degree OR Experience in Same Field)
Insurance Agents விரும்பத்தக்கது

Send Your CVS to :
careers@agoysoft.com
021 222 7400

### அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

### 2020 A / L மாணவர்களுக்கு 75% புலமைப்பரிசில்

வீட்டில் இருந்தவாறே படியுங்கள் **Distance learning Programme HND in, Civil Engineering, Business Management, Marketing, IT,** மேலும் பல 6 மாதத்தினுள் பூர்த்தி செய்த பின்னர் பட்டப்படிப்பினை தொடரும் வாய்ப்பு

**ECBC**
**Clock Tower Road, Jaffna.**
**0777585969**






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கூட்டம் கூடாதீர் கோயில் போகாதீர் மால்க் போடாமல்
வீட்டை விட்டு இறங்காதீர் மாவட்டம் தாண்டினால் தனிமை –கட்டாயமிவை
ஆரும் கடைப்பிடிக்காவிடின் கடும் தண்டனையென்பாராயினும்
ஊருக்கே உபதேசம் அமைச்சர்களுக்கில்லையென உணர்!


ஓட்டுக்குழு சுவாமிகள்

Registered as a Newspaper

பக்கங்கள்: 24

# சஞ்சீவி

மலை: 33 வள்ளுவர் ஆண்டு:2015 ஐப்பசி 23 ஞாயிற்றுக்கிழமை (08.11.2020) சிகரம்: 21



# பைடன்

## ஆட்சியமைத்தால்...!

ஆர்.பிரகாஷ்

ஒட்டுமொத்த உலகமும் இப்போது 'திக் திக்' நொடிகளில் இருக்கிறது. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்று அறியவே இப்படி உச்சபட்ச எதிர்பார்ப்போடு உலக மக்கள் காத்திருக்கின்றனர். இதுவரை எந்த அதிபர் தேர்தலின்போதும் இல்லாத பரபரப்பு, குழப்ப நிலை இம்முறை சூழ்ந்திருக்கின்றது. வழக்கம் போல் தனது கோமாளிக்கூத்தை தேர்தல் முடிவுகளிலும் வெளிப்படுத்தியுள்ளார் ட்ரம்ப். ருவிற்கள், பரபர அறிவிப்புக்கள் என்று அமெரிக்காவை உச்சக்கட்ட பீதிநிலைக்குள் ட்ரம்ப் தள்ளியுள்ளார். தேர்தல் முடிவை ஏற்கமாட்டேன் என்கின்றார், உண்மையான வாக்குகளை எண்ணினால் தான்தான் ஜனாதிபதி என்கின்றார், வாக்குகள் எண்ணுவதை நிறுத்துமாறு உத்தரவிடுகின்றார், நீதிமன்றத்தை நாடியோடுகின்றார். ஆக, ஒரு அதிபருக்கே உரிய லட்சணங்களோடு தேர்தல் முடிவுகளையும் ட்ரம்ப் கையாளவில்லை.

### இழுபறி நிலை!

538 தேர்தல் சபைகளைக் கொண்ட அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை 478 தேர்தல் சபை முடிவுகளே வெளியாகியுள்ளன. அலெஸ்கா, ஜோர்ஜியா, நிவேடா, வடக்கு கரோலினா, பென்சில்வேனியா ஆகிய ஐந்து மாநிலங்களின் முடிவுகள் வெளிவருவதில் பெரும் குழப்பநிலை நிலவுகின்றது. இந்த ஐந்து மாநிலங்களில் மட்டும் 60 தேர்தல் சபைகள் உள்ளன.

270 தேர்தல் சபைகளைக் கைப்பற்றினால் வெற்றி என்ற நிலையில் வெளியாகிய 478 தேர்தல் சபைகளில் பைடன் 264 சபைகளைக் கைப்பற்றி முன்னிலையில் இருந்தார். ட்ரம்ப் 214 சபைகளைக் கைப்பற்றியிருந்தார். இதன்படி அலெஸ்கா, ஜோர்ஜியா, நிவேடா, வடக்கு கரோலினா, பென்சில்வேனியா ஆகிய ஐந்து மாநிலங்களையும் கைப்பற்றினால் மட்டுமே ட்ரம்பால் வெற்றிபெற முடியும். ஆனால் பைடனோ அலெஸ்கா தவிர்ந்து ஏனையவற்றில் ஒன்றைக் கைப்பற்றினாலே (அலெஸ்காவில் 3 தேர்தல் சபைகள். அதைக் கைப்பற்றினாலும் 270 என்ற பெரும்பான்மை கிடைக்காது) அமெரிக்காவின் ஜனாதிபதியாவார் என்ற நிலை இருந்தது.




இந்தத் தேர்தலில் ஜனநாயக் கட்சியின் கோட்டையாக நிவேடா கருதப்பட்டது. அங்கு 6 தேர்தல் சபைகள். நிவேடாவை மட்டும் கைப்பற்றினாலே பைடன் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார். இந்தப் பின்னணியில் பைடனின் ஆதரவாளர்களும், ஜனநாயகக் கட்சியினரும் முடிவுகள் அறிவிக்கப்படும் முன்னரே வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். கிட்டத்தட்ட பைடன் வென்றுவிட்டார் என்றே கருதப்படுகின்றது. தேர்தல் முடிவுகளைக் குழப்புவதற்கு ட்ரம்ப் மேற்கொள்ளும் பிரயத்தனமும் அதையே மெய்ப்பிதம் செய்கின்றன.

### உப்பைத் தின்றால்..........!.

'மேக் அமெரிக்கா கிரேட் எகெய்ன்' (அமெரிக்காவை மீண்டும் மாட்சியடையச் செய்தல்) என்ற அறிவிப்புடன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ட்ரம்ப், கிலாரி கிளிங்டனைத் தோற்கடித்தார். ட்ரம்ப் ஒரு வர்த்தகர். எனவே அமெரிக்கப் பொருளாதாரத்தை மேம்படுத்துவார் என்ற அடிப்படையிலேயே அவருக்கு ஆட்சியுரிமையை மக்கள் வழங்கினார்கள். ட்ரம்பின் அறிவிப்புக்களும் அவ்வாறே இருந்தன. ஆனால் அவர் ஒரு முதிர்ச்சியற்ற தலைவர், ஆளுமையற்றவர் என்று ட்ரம்ப் பதவியேற்ற வெகுசில வாரங்களிலேயே அமெரிக்கர்கள் விமர்சிக்கத் தொடங்கினர். இவ்வளவு ஏன் குடியரசுக் கட்சிக்குள்ளேயே ட்ரம்புக்கு எதிர்ப்புக் காட்டப்பட்டது.

அமெரிக்கப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குப் பதிலான பயனற்ற திட்டங்களை ட்ரம்ப் அறிவித்தார். அத்துடன் தொலைநோக்கற்ற செயற்றிட்டங்களையும் மேற்கொண்டார். மெக்சிக்கோ எல்லையில் சுவர் அமைப்பதற்காக பல பில்லியன்களை வாரி இறைத்தார். போதைப்பொருள் கடத்தலை முறியடிப்பதற்காக இந்தத் திட்டம் என்று சொல்லப்படுகின்ற போதிலும் அந்தக் கடத்தல்கள் தொடர்ந்துகொண்டேதான் இருக்கின்றன. தனதும் தன் குடும்பத்தினதும் பாதுகாப்புக்கும் அதிக நிதியைச் செலவிட்டார், வெள்ளை மாளிகைக்குள் தனது குடும்பத்தினரை பெரும் பொறுப்புக்களில் நியமித்தார், பலஸ்தீனத்திடம் இருந்து இஸ்ரேலால் பறிக்கப்பட்ட பகுதிகளை அங்கீகரித்தார், ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அறிவித்து பலஸ்தீனர்களதும் உலக மக்களதும் எதிர்ப்பைச் சந்தித்தார், ஐக்கிய நாடுகள் சபைக்கான நிதியை நிறுத்தினார், உலக சுகாதார அமைப்புக்கான நிதியை நிறுத்தினார், பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்காவை வெளியேற்றினார், மத்திய கிழக்கில் பதற்றத்தை ஏற்படுத்தினார், ஈரானின் இராணுவத் தளபதியைக் கொன்று இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்தினார், சிரியா மற்றும் ஈராக்கில் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அகதிகளை உருவாக்கினார், எனினும் அவர்களை அமெரிக்காவுக்குள் அனுமதிக்க மறுத்தார், எல்லாவற்றுக்கும் மேலாக தன் நாட்டு மக்களையே விமர்சித்தார். ஆக, டொலரை மட்டும் கருத்தில்கொண்டு ஆட்சி புரிந்தார்.

### பலம்பெற்ற பைடன்

எதிர்த்தரப்பு வேட்பாளரான பைடனை பலமிழக்க வைப்பதற்கு ட்ரம்ப் பல அபத்

நாதுவின் லீலைகள்



# பாவம் திமிங்கிலங்கள்



நாரதருக்கு எரிச்சலாக இருந்தது. எவ்வளவு நேரம் தான் தனியே, ஆர்ப்பரிக்கும் கடலையே பார்த்துக் கொண்டிருக்க முடியும். அடிக்கடி பூலோகத்துக்கு 'விசிட்' அடிப்பதால், முன்னெச்சரிக்கையாக பிரமனின் ஆணைப்படி நாரதர் தனிமைப்படுத் தப்பட்டு ஒருவாரம் ஓடி விட்டது.

நாரதர் ஏதும் தில்லாலங்கடி வேலைகள் செய்து , தனிமைப்படுத்தலுக்கு டிமிக்கி கொடுத்து, பூலோகப் பக்கம் போகக்கூடும் என்பதால், அவர் தப்பிச் செல்லாத இடத்தைக் கண்டுபிடித்திருந்தார்கள். அது பாற்கடல். விஷ்ணுவின் பஞ்சணையாக இருக்கும் ஆதி சேசனிடம் நாதுவைக் கண்காணிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.ஆதிசேசன் ஆயிரம் தலைகளுள்ள பாம்பு. அவன் ஆயிரம் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும் போது நாதுவால் ஓடவும் முடியாது; ஒளியவும் முடியாது. 'பிக்பாஸ்' வீட்டில் இருப்பதைப் போல நாது உணர்ந்து பெருமூச்செறிந்தார்.

எவரையும் கொளுவி வைத்துக் கூத்துப் பார்க்க முடியாததால், நாதுவுக்கு வாழ்க்கையே உப்புச்சப்பில்லாமல் மாறியிருந்தது. எப்போதும் "நாராயணா, நாராயணா" என்று உச்சரித்துக் கொண்டிருந்தவர் இப்போது அதை மறந்து "கொரோனா! கொரோனா!! கொரோனா!" என்று பாடத் தொடங்கிவிட்டார். செல் போனை வேறு பறித்துவிட்டார்கள். இல்லா விட்டால் யாருக்காவது போன் பண்ணியாவது கொளுத்திப் போட்டிருக்கலாம்.

வேறு வழியே இல்லாமல், மீன்களோடு பேச்சுக் கொடுத்து உரையாடத் தொடங்கியிருந்தார்.

" உங்களுக்கு ஒரு பிரச்சினையுமில்லை. கொரோனாவும் வராது, கோதாரியும் வராது" என்று அவற்றுக்குப் பேச்சுத் தூண்டில் போட்டார்.

" நல்ல கதை, உந்தக் கொரோனா வந்து எங்களுக்கும் பெரும் பிரச்சினை" என்று அந்த மீன்கள் அலுப்போடு கூறின.

" என்ன பிரச்சினை?" அக்கறையோடு கேட்டார் நாது.

" இப்ப எல்லாச் சனமும் உடுப்புப் போடுதோ இல்லையோ, கட்டாயம் மாஸ்க் போடுதுகள், அதுவும் நாளுக்கொரு மாஸ்க். அப்பிடிப் போட்ட மாஸ்க்கை கண்ட கண்ட இடங்களில எறியினம். அதுகள் எல்லாம் கடைசியில எங்க வரும்?"

'எங்க வரும்..?" என்று அப்பாவியாய்க் கேட்டார் நாது.

" எல்லாம் குப்பையோட குப்பையாக கடலுக்க வந்து எங்கட சூழலை மாசுபடுத்துதுகள். என்ன செய்ய எல்லாம் எங்கட தலைவிதி" என்று சொல்லிக் கொண்டிருந்த சின்னமீன்கள் , திடீரென பயத்தால் நடுங்கின.

" நாது, நாங்கள் பிறகு வாறம்" என்று சொல்லிக் கொண்டு ஓட்டம் பிடித்தன.

அப்படி அவை ஏன் தலைதெறிக்க ஓடுகின்றன என்று நாதுவுக்கு விளங்கவில்லை.மேல அண்ணாந்து ஆதிசேசனைப் பார்த்தார். ஆதிசேசன் அர்த்தம் பொதிய தன் பார்வையை கடலின் ஒருபக்கமாக திருப்பினான். அங்கே பார்த்த நாதுவுக்கும் பயம் துளிர்த்தது. திமிங்கிலங்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தன. அவற்றிடம் சிக்கினால் அவ்வளவுதான். ஒரு சிறு சதை கூட மிஞ்சாது.

"அடேய், இப்பிடி தனிமைப்படுத்திறம் எண்டு சொல்லி கடைசியா ஆளையே முடிக்கப் போறிங்களேடா" என்று புலம்பியபடி, திமிங்கிலங்களைப் பார்த்தார்.

ஆனால் அவற்றின் முகத்தில் பசிக்களையை விடவும் பயக்களையே அதிகமாக இருந்தது.அவை நாதுவை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் அவரையும் தாண்டிப் போய்க்கொண்டிருந்தன.அது நாதுவுக்கு கொஞ்சம் துணிச்சலைக் கொடுத்தது.

" ஏய் திமிங்கிலங்களே, அவ்வளவு அவசரமாக எங்கே போகிறீர்கள் ?" என்று கேட்கவும் செய்தார். அவ்வளவுதான்!

ஒட்டுமொத்தத் திமிங்கிலங்களும் ஒரேகுரலில் 'ஓவென்று' அழத் தொடங்கின. அவற்றின் கண்ணீரில் கடல் மட்டம் உயர்ந்துவிடக் கூடாது என்ற பதை பதைப்பில் அடுத்த கேள்வியைக் கேட்டார் நாது.

" அப்படி என்ன பிரச்சினை, இப்படி ஏன் அழுகின்றீர்கள்?"

" எங்களுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. கூட்டமாகத் தற்கொலை செய்யப்போகிறோம்" என்றன அவை.

"ஏன் இந்த விபரீத முடிவு?"

" எல்லாம் அவவால தான்" கோபத்தோடு திமிங்கிலங்களின் வார்த்தைகள் வந்தன.

"எவா?"

" வேற ஆர், இந்த இலங்கையின்ர சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியம்மா தான்"

"அவவுக்கும் நீங்கள் தற்கொலை செய்யிறதுக்கும் என்ன காரணம்? ஒண்டுமா விளங் கேலையே"உண்மையாகவே புரியாமல் கேட்டார் நாது. "என்னத்தைச் சொல்ல, அவா கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிச்சிட்டாவாம்"

இந்த வார்த்தைகள் நாதுவுக்கு தேனை வார்த்தன."மருந்து கண்டுபிடிச்சா இனி எனக்கு தனிமைப்படுத்தல் தேவையில்லை:" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார். "அது நல்ல விசயம் தானே? அதுக்குப் போய் நீங்கள் தற்கொலை கிற்கொலை எண்டு பேய்க்கதை கதைக்கிறியள்"கோபமாகக் கேட்டார் நாது.

" அவவுக்குத்தான் விசர் எண்டா உங்களுக்கும் விசரோ? ஒரு பானைக்குள்ள மந்திரம் ஓதின தண்ணிய விட்டு, அதைக் கொண்டு போய் ஆத்துக்க போட்டா கொரோனா ஓடிடுமாம். இதுதான் அவவின்ர மருந்து"

அதைக் கேட்ட நாது

" அவவின்ர பேர் வன்னியாராய்ச்சியோ இல்லாட்டி தண்ணியாராய்ச்சியோ?" எண்டு நக்கலாக் கேட்டார்.

"பாத்தியளோ உங்களுக்கே கோபம் வருகுதெல்லோ. மனுசி அதோட இருந்திருந்தா பரவாயில்லை, கடைசியில எங்கட தலையில எல்லோ குண்டைத் தூக்கிப் போட்டுட்டா" என்ற திமிங்கிலங்கள்.

" ஏன், அவ எறிஞ்ச தண்ணிப்பானை உங்கட தலையில விழுந்திட்டுதோ?" என்று அக்கறையாகக் கேட்டார் நாது.

" அதில்லை, அவா சொல்லிறா கொரோனாவை ஒழிக்க கடலுக்க விழப்போறாவாம். வெளியில இருக்கேக்கயே இப்பிடியெல்லாம் விசர்க்கூத்துக் காட்டுறவ, இங்க கடலுக்க வந்து என்னென்ன குறளிவித்தை காட்டுவாவோ எண்டு கெலிச்சுப் போனம். அதால அவ கடலுக்க விழ முதல் நாங்கள் கடலை விட்டுப் போகப் போறம்" அழுதழுது சொல்லிக் கொண்டே திமிங்கிலங்கள் நகரத் தொடங்கின. அவை செல்லும்வரை பார்த்துக் கொண்டிருந்த நாது, அருகே இருந்த மண்பானையை எடுத்து, பாற்கடல் நீரை எடுத்து தனக்குத் தெரிந்த எல்லா மந்திரங்களையும் ஓதி, அதை அப்படியே அலாக்காகத் தூக்கி எறிந்தார்.

"இனி என்னைக் கொரோனா அண்டாது" ஆதிசேசனிடம் பெருமையாகச் சொல்லி முடிக்க முன்னரே=

"அச்ச்ச்ச்ச்ச்!" ஆதிசேசன் ஆயிரம் தலைகளாலும் தும்மியது.

பின்னர் தன் வாயிலிருந்து ஒரு பேப்பரை நாதுவிடம் கொடுத்தது. அது நாதுவுக்கு முதல் நாள் பிரமன் செய்த பி.சி.ஆர் முடிவு.

அதில்

"கொரோனா பொசிட்டிவ்"

என்று சிவப்பு எழுத்தில் மின்ன,

நாது தும்மிக் கொண்டே மயங்கினார்.

# பைடன்



தமான வழிமுறைகளைக் கையாண்டார். தென்னமெரிக்க நாட்டில் பைடனுக்கு சொந்தமான நிறுவனமொன்று அமெரிக்க நிதியில் இயங்குகின்றது என்றார். சீனாவின் முகவராகச் பைடன் செயற்படுகிறார் என்றார். ஆனால் இந்தக் குற்றச்சாட்டுக்களை பைடன் மிக நேர்த்தியாகக் கையாண்டார். தானே முன்வந்து இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பகிரங்க விசாரணைக்கு அழைப்பு விடுத்தார். அதன் பின்னர் ட்ரம்ப் அடக்கி வாசிக்க ஆரம்பித்தார். பைடனின் பக்கம் நியாயம் நின்றது.

### கிங் மேக்கர் ஒபாமா!

அதேபோல் ஜோர்ஜ் புளொய்ட் படுகொலையை அடுத்து அங்கு தோற்றம் பெற்ற கறுப்பினத்தவர்களின் கலவரங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் ட்ரம்ப் கண்டும்காணாமலும் இருந்தார். இன்னும் சொல்லப்போனால் அமைதிகாத்து மறைமுகமாக கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஆதரித்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச இயந்திரத்தால் மிகக்கடுமையாக அடக்கப்பட்டனர். ஆனால் பைடன் இந்த விவகாரத்தை மிகமிகச் சாதுரியமாகக் கையாண்டார்.

கறுப்பினத்தவர்கள் வாழும் மாநிலங்களுக்குச் சென்று அவர்களுக்கு நிகழ்ந்த கொடுமைகளுக்கு வருத்தத்தைத் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதியும் கறுப்பினத்தவருமான ஒபாமாவை தனது சகோதரன் என்று அறிவித்தார். ஒபாமாவும் பைடனுக்கு ஆதரவாகப் பரப்புரை செய்தார். அவரின் ஆதரவாளர்களை ஓரணியில் ஒன்றுதிரட்டி பைடனின் கரங்களைப் பலப்படுத்தினார். ஆக, ஒரு கிங்மேக்கராக ஒபாமா செயற்பட்டார்.

### எதிர்பார்ப்பு

உலக மக்கள் அனைவரும் இன்று பைடனையே எதிர்பார்த்துக் காத்துள்ளனர். தமக்கு மீட்புக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை மேற்கொண்டு அடக்குமுறைகளும் அதிகார அழுத்தங்களும் பிரயோகிக்கப்படாமல் இருக்க பைடனின் ஆட்சியே தேவை என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. பைடன் ஆட்சியடைத்தால் மத்திய கிழக்கில் பெரும் மாற்றம் ஏற்படும். ஈரான் அமெரிக்கா இடையிலான பதற்றநிலை பைடனின் ஆட்சியில் தணியும், ஈராக் மற்றும் சிரிய நாடுகளின் அகதிகள் அரவணைக்கப்படுவர், கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் கைவிடப்படும். ஒபாமா நிச்சயம் இதை நிறைவேற்றுவார், ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத் தடைகள் நீக்கப்படும், பலஸ்தீனத்தின் மீதான அடக்குமுறைகள் கைவிடப்படும், ஐக்கிய நாடுகள் சபைக்கான நிதி அனுமதிக்கப்படும், ஒபாமாவின் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பருவநிலை ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணையும்.

ட்ரம்பின் கரங்களுக்கு ஆட்சி சென்றால் இவை நிறைவேறுவதற்கு இம்மியும் வாய்ப்பில்லை. ஆனால் ஒபாமா - பைடன் கூட்டணி நிச்சயம் இவற்றைச் சாதிக்கும். அதற்காகவேனும் வர வேண்டும் பைடன்.

# ஒரேநாடு :ஒரே சட்டம்: ஒரே குடும்பம்?

நிலாந்தன்




பசில் ராஜபக்ச கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்துக்கு தேசியப் பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவார் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. இல்லையென்றால்அடுத்த அமர்வுக்கு முன் அவர் நாடாளுமன்றத்துக்குள் வந்து விடுவார் என்று தெரிய வருகிறது. அவருடைய பெயர் கட்சியின் தேசியப் பட்டியலில் இல்லாதபடியால் சட்டச் சிக்கல்கள் உண்டு என்றும் கூறப்படுகிறது. ஆனால் ராஜபக்சக்கள் இது விடயத்தில் தடைகளை உடைக்கும் சக்தி மிக்கவர்கள். பசிலை எப்படியாவது உள்ளே கொண்டுவரப் பார்ப்பார்கள். இதன்மூலம் அவர்கள் எந்த இறுதி இலக்குகளை முன்வைத்து 20 ஆவது திருத்தத்தை கொண்டு வந்தார்களோ அந்த இலக்குகளில் ஒன்றை அடைந்து விடுவார்கள்.

19 ஆவது திருத்தம் தமது குடும்பத்துக்கு எதிரானது என்று ராஜபக்சக்கள் கூறி வந்தார்கள். அதில் ஓரளவுக்கு உண்மையும் உண்டு. ராஜபக்சக்களைக் குறிவைத்து மூன்று சரத்துக்கள் அதில் இருந்தன. முதலாவது ஜனாதிபதியின் பதவி வகிக்கும் தடவை இரண்டாக மட்டுப்படுத்தப்பட்டது. அது மஹிந்த ராஜபக்சவுக்கு எதிரானது. இரண்டாவது இரட்டை பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் ஜனாதிபதியாக வர முடியாது. அது கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிரானது.மூன்றாவது 35 வயதுக்கு மேல்தான் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம்.அது நாமல் ராஜபக்சவுக்கு எதிரானது. இம்மூன்று சரத்துக்களின் மூலமும் ராஜபக்ச குடும்பம் அடுத்தடுத்த தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடுப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருந்தது.

எனினும் கோத்தாபய ராஜபக்ச தனக்குப் போடப்பட்ட சட்டப் பூட்டை வெற்றிகரமாக உடைத்தார். அதைத் தொடர்ந்து 20 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்ததன் மூலம் ராஜபக்சக்கள் தங்கள் குடும்பத்துக்குப் போடப்பட்டிருந்த எல்லாத் தடைகளையும் அகற்றிவிட்டார்கள்.பசிலோடு சேர்த்து நாடாளுமன்றத்தில் ராஜபக்சகளின் எண்ணிக்கை ஏழாகிவிடும்.

20 ஆவது திருத்தத்தின் சட்டவரைவு அரச வர்த்தமானியில் வெளியான பின் தாமரை மொட்டுக் கட்சிக்குள்ளேயே அதற்கு எதிராகக் குரல்கள் கேட்டன. அது ராஜபக்சக்கள் எதிர்பார்க்காத ஒன்று. ஏன் அவ்வாறு எதிர்ப்புக் கிளம்பியது?

நிச்சயமாக 20 ஆவது திருத்தம் நாட்டின் ஜனநாயக இதயத்தை பாதிக்கும் என்பதற்காக அல்ல. மாறாக கோத்தாபய ராஜபக்சவின் கைகளில் ஒரு அரசனுக்கு உரிய அதிகாரங்கள் கிடைத்து விட்டால் அவர் கட்சியின் மூத்த உறுப்பினர்களை மதிக்க மாட்டார் என்ற ஒரு அச்சம் தாமரை மொட்டுக் கட்சியில் இருக்கும் மூத்த உறுப்பினர்கள் மத்தியில் தோன்றியதே அதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

மஹிந்த ராஜபக்சவோடு ஒப்பிடுகையில் கோத்தாபய படைத்துறைப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர். எனவே அரசருக்குரிய அதிகாரங்கள் கிடைத்தால் அவர் கட்சிக்குள்ளும் இராணுவத்தனமாகக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தும்போது அது சில சமயம் தமது சுயமரியாதைக்கு பிரச்சினையாக அமையலாம் என்ற அச்சம் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் காணப்பட்டது. ஏற்கனவே மஹிந்த ராஜபக்சவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின்போது அவ்வாறு அவமதிக்கப்பட்ட கட்சி முக்கியஸ்தர்களைத்தான் மைத்திரிபால சிறிசேன தன் தலைமையில் திரட்டி கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். இந்தஅனுபவத்தின் பின்னணியிலேயே 20 ஆவது திருத்தத்தின் சில சரத்துக்களுக்குத் தாமரைமொட்டுக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக் கிளம்பியது என்று கூறப்படுகிறது.

அவ்வாறு எதிர்ப்பு கிளம்பியபொழுது, குறிப்பாக இரட்டை பிரஜாவுரிமை சம்பந்தப்பட்ட சரத்தில் கோத்தாபயவே அதிருப்தியாளர்களை நேரடியாகக் கையாண்டார். இரட்டைப் பிரஜாவுரிமை விவகாரம் தனது குடும்பத்துக்கு எதிரானது என்றும், 20 ஆவது திருத்தத்தில் அதை நீக்காமல் விட்டால் அது தனக்கு ஒரு மானப் பிரச்சினை போன்றது என்ற தொனிப்பட அவர் தனது கட்சி ஆட்களிடம் கேட்டுக் கொண்டதையடுத்து கட்சி உறுப்பினர்கள் அடங்கி விட்டார்கள் என்று கூறப்படுகிறது.

அதேசமயம் எதிர்க்கட்சிகள் இரட்டைப் பிரஜா வுரிமை தொடர்பான சரத்தை வேறு ஒரு கோணத்தில் அணுகின. அது இனவாதக் கோணம்.19 ஆவது திருத்தத்தில் இருக்கும் அந்தச் சரத்து நீக்கப்பட்டால் வெளிநாட்டில் இருக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற தமிழர்கள் நாட்டில் தேர்தலில் ஈடுபடுவார்கள். இதன்மூலம் புலம்பெயர்ந்த தமிழர்கள் நாடாளுமன்றத்துக்குள் நுழைந்து விடுவார்கள் என்றும் அவர்கள் பயம்காட்டினார்கள்.

ஆனால் குறிப்பிட்ட சரத்து தமிழ் நோக்கு நிலையில் சாதகமான ஒன்றே. இப்பொழுது புலம்பெயர்ந்த தரப்பில் இருக்கும் பலர் தாயகத்தில் அரசியலில் இறங்குவது நல்லது.ஏனென்றால் ஒரு காலம் போராட்ட அரசியலில் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட பலரும் இப்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.புலம்பெயர்ந்த நாடுகளில் அங்குள்ள ஜனநாயக சூழலுக்குள் அவர்கள் புடம் போடப்பட்டிருக்கிறார்கள்.போராட்ட அனுபவமும் புலம்பெயர்ந்த நாடுகளின் ஜனநாயக அனுபவமும் அவர்களுக்கு புதிய தரிசனங்களைக் கொடுத்திருக்கக் கூடும். அப்படிப்பட்ட ஆளுமைகள் தாயகத்தின் அரசியலில் நேரடியாக இடையீடு செய்யும் பொழுது அது தலைமைத்துவ வெற்றிடங்களை நிரப்ப உதவும். அதோடு இளம் தலைவர்களை உருவாக்குவதற்கு அவர்களுடைய அனுபவங்கள் உதவக்கூடும். யூதர்கள் தமது தேச உருவாக்கத்தின்போது அவ்வாறு புலம் பெயர்ந்த ஆளுமைகளை இணைத்துக் கொண்டதை இங்கு சுட்டிக்காட்டலாம்.

இதை இப்படி எழுதுவதன் நோக்கம் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் உழைத்த காசை அரசியலில் முதலீடு செய்யும் பொருட்டு அவர்களை மேலிருந்து கீழ் நோக்கி 'பரசூட் ' மூலம் தாயக அரசியலில் இறக்க வேண்டும் என்பதல்ல. மாறாக அவர்கள் காசை அல்ல தமது செழிப்பான அனுபவத்தை தாயகத்தில் பகிர்வதன் மூலம் கீழிருந்து மேல் நோக்கிய செழிப்பான தலைமைப் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதற்கு தமது பங்களிப்பைச் செய்யலாம். அதாவது தாயகத்தின் அரசியல் சூழலைப் பண்படுத்தி வளப்படுத்துவதற்கு புலம்பெயர்ந்த தமிழர்களின் அறிவும் அனுபவமும் அவசியம். அது தாயக அரசியலில் நொதிப்பை ஏற்படுத்தும்.



இந்த அடிப்படையில் சிந்தித்தால் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் இலங்கை அரசியலில் ஈடுபடுவதற்கு வழிவகை செய்யும் 20 ஆவது திருத்தத்தில் உள்ள குறிப்பிட்ட சரத்து ராஜபக்சக்களுக்கு மட்டுமல்ல தமிழ் மக்களுக்கும் பிரயோசனமானது. ஆனால் இதை தமிழ் மக்கள் அணுகும் நோக்குநிலை வேறு, ராஜபக்சக்கள் அணுகும் நோக்கு நிலை வேறு. தமிழ் மக்கள் தமது அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்துவதற்காக அவ்வாறு யோசிக்கிறார்கள். ஆனால் ராஜபக்சக்கள் சிங்களஅரசியலின் ஜனநாயக இதயத்தை பலவீனப்படுத்துவதற்காக அவ்வாறு யோசிக்கிறார்கள்.


இதை இன்னும் விரிவாகப் பார்க்கலாம். பசில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருவது என்பது ராஜபக்சவின் வம்ச ஆட்சியைத் தொடர்ச்சியுறாமல் பாதுகாக்கும் நோக்கிலானது.

பசில் ராஜபக்ச ராஜதந்திர நகர்வுகளில் சிறப்பாகச் செயற்படுவார் என்று ஒரு கருத்து குடும்பத்துக்குள்ளும், கட்சிக்குள்ளும் உண்டு. அரசியல் எதிரிகளோடு 'டீல்களைச்' செய்வதில் அவர் வல்லவர் என்றும் நிரூபிக்கப்பட்டுள்ளது. 20 ஆவது திருத்தத்துக்கு வேண்டிய மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கான 'டீல்களை' பெருமளவுக்கு கோத்தாவே முன்னெடுத்தார் என்றும் ஒரு அவதானிப்பு உண்டு. எனவே வெற்றிகரமான 'டீலரான' பசிலை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர வேண்டிய ஒரு தேவை ராஜபக்சக்களுக்கு உண்டு.

ஆனால் மெய்யான காரணம் அதை விட ஆழமானது என்று கொழும்பில் கூறப்படுகிறது. இப்பொழுது பிரதமராக இருக்கும் மஹிந்த ராஜபக்சவுக்கு வயதாகிவிட்டது. தொடர்ந்தும் அரசியலில் தீவிரமாகச் செயற்படுவதற்கு அவருடைய மூப்பும் உடல்நிலையும் இடம் கொடுக்குமா என்ற கேள்விகள் உண்டு. இப்போதுள்ள யாப்பின் படி ஜனாதிபதி வெளிநாடு செல்லும் பொழுது அல்லது ஜனாதிபதிக்கு இயலாமல் போகும்போது பிரதமரே பதில் ஜனாதிபதியாகக் கடமை புரிவார். எனவே பிரதமராக நம்பகமான, பொறுப்பான ஒருவரை வைத்திருக்க வேண்டும்.மஹிந்தராஜபக்சவுக்கு அவருடைய வயதும் உடல்நிலையும் இடம் கொடுக்கவில்லை என்றால் அந்த இடத்துக்கு வேறு ஒருவரைத் தயாராக வைத்திருக்க வேண்டும், எனவே இது விடயத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களைக் கவனத்தில் எடுத்து பசில் ராஜபக்சவை நாடாளுமன்றத்துக்குள் கொண்டுவரத் திட்டமிடு கிறார்கள். அதாவது சுருக்கமாகச் சொன்னால் ராஜபக்ச குடும்பத்தின் வம்சத் தொடர்ச்சியை நீடிப்பதற்குரிய ஏற்பாடு இது. இந்த இடத்தில் சில கேள்விகள் எழும். நாட்டை ஆள்வதற்கு ராஜபக்ச குடும்பத்துக்குள் மட்டும்தான் கெட்டிக்காரர்கள் இருக்கிறார்களா? தாமரை மொட்டுக் கட்சிக்குள் வேறு மூத்த ஆளுமைகள் கிடையாதா? அல்லது அந்தக் கட்சிக்குள் உள்ள ஆளுமை மிக்கவர்களும் மூத்தவர்களும் இதை எப்படிப் பார்க்கிறார்கள்?

தாமரை மொட்டுக் கட்சி என்பது யுத்த வெற்றியை ஒரு குடும்பத்தின் சொத்தாக்கி, நிறுவனமயப்படுத்தியதன் விளைவே. எனவே அதன் இதயம் ராஜபக்சக்கள்தான். இதை ஏற்றுக்கொண்டுதான் ஏனைய மூத்த உறுப்பினர்கள் கட்சிக்குள் அடங்கி இருக்கிறார்கள்.

பசில் ராஜபக்சவின் நியமனத்தை அவர்கள் மௌனமாக ஏற்றுக் கொள்கிறார்கள் என்று சொன்னால் முதலாவதாக யுத்தத்தை வென்ற ஒரு குடும்பத்துக்கு ஏனைய எல்லாத் தகுதிகளும் இருக்கும் என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? இரண்டாவதாக தாமரை மொட்டு கட்சி என்பது ஒரு குடும்பத்தின் சொத்து என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? மூன்றாவதாகதிறமைகளை விட மூப்பைவிட ஒருவரின் பிறப்புத்தான் பதவி உயர்வுகளைத் தீர்மானிக்கிறது என்பதனை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? அவர்கள் மட்டுமல்ல ராஜபக்ச குடும்பத்துக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைஅள்ளிக்கொடுத்த 69இலட்சத்துக்கு அதிகமான மக்களும் அப்படித்தான் நம்புகிறார்களா?



# தொப்புள்கொடி

மயூ

தமிழகத் தேர்தல் களம் சூடு பிடித்திருக்கிறது. தமிழகத்தில் தேர்தல் வந்தாலே சுவாரசியச் சம்பவங்களுக்கு குறைவிருக்காது. இப்போதும் அப்படித்தான். ஆனால் இந்த முறை "பழம் தின்று கொட்டை போட்ட" அரசியல் கட்சித் தலைவர்களை விடவும், சினிமா நட்சத்திரங்கள்தான் அதிகம் பேசப்படுகின்றனர்.

அரசியலுக்கு "வருவேன் ஆனால் வரமாட்டேன்" என்றிருந்த சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பெயரில் அறிக்கை ஒன்று வெளியாகிக் கடந்த வாரம் வெளியாகிச் சுற்றிச் சுழன்றி ருந்தது. இனி அவர் வரமாட்டார் என்பது ஏறத்தாழ நிச்சயமாகி விட்டது.

இந்தவாரம் நடிகர் விஜய் தரப்பில் இருந்து "மாப்பிள்ளை இவர்தான், ஆனால் வேட்டி சட்டை என்னுடையது" என்ற மாதிரியான கதை ஒன்று வெளியாகியிருக்கின்றது.

நடிகர் விஜய்யின் தந்தை எஸ்.ஏ.சந்தி ரசேகர் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார். அந்தக் கட்சிக்கு "அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம்" என்று அவர் பெயர் வைத்து பதிவும் செய்திருக்கின்றார். இந்தத் தகவல் வெளியானதும், "அரசியலில் முதல் அடியை எடுத்து வைத்தார் விஜய்" புல்லரித்துப் போனார்கள் ரசிகர்கள். ஆனால் அங்குதான் நடிகர் விஜய் வைத்தார் "ருவிஸ்ட்".

'எனது தந்தை எஸ்.ஏ.சந்திரசேகர், ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார் என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிந்தேன். அவர் தொடங்கி யுள்ள கட்சிக்கும் எனக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வித் தொடர்பும் இல்லை. அந்தக் கட்சியில் என் ரசிகர்கள் இணைய வேண்டாம்" என்று "பகீர்" அறிக்கை விட்டார் நடிகர் விஜய்.

"விஜய்க்காக ரசிகர் மன்றம் தொடங்கினேன். சில ஆண்டுகள் கழித்து அதை நற்பணி மன்றமாக மாற்றினேன். பின்னர் விஜய் மக்கள் இயக்கமாக உருவாக்கினேன். 25 வருடங்களாக நான் இந்த அமைப்பை நடத்திவருகிறேன். இது முழுவதும் நான் எடுத்த முடிவு மட்டுமே. விஜய்க்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை" என்று மறுபக்கம் கூறுகின்றார் எஸ்.ஏ.சந்திரசேகர்.

நடிகர் விஜய் வாய்விட்டுக் கூறாவிட்டாலும், அவருக்கும் அரசியல் ஆசை இருக்கின்றது என்பது அவரது கடந்தகாலச் செயற்பாடுகளை ஆராயும் எவருக்கும் புரியும். அவரது விஜய் மக்கள் இயக்கமும் அந்தப் பாதையிலேயே கட்டி வளர்க்கப்படுகின்றது. அப்படியிருக்கும்போது ஏன் இந்தப் புதுக் குழப்பம்?. அப்பாவுக்கும் மகனுக்கும் பிரச்சினை என்கின்றனர் சிலர், அரசியலில் இறங்குவதற்கு ஆழம் பார்க்கின்றனர் என்கின்றனர் சிலர்.


"தொழிலில் எந்தப் பிரச்சினையும் வரக் கூடாது என்பதால் விஜய்க்கு சம்பந்தமில்லாத மாதிரி "சீன்" போடுகிறார்கள்.

அவருடைய அப்பா கட்சி ஆரம்பித்து அதைச் செயலாக்கத்துக்குக் கொண்டுவர சில காலம் ஆகும். 2026 சட்டமன்றத் தேர்தல் நேரத்தில் நடிகர் விஜய், அப்பா ஆரம்பித்த கட்சியில் இணைவார்." என்று கூறுகின்றனர் அவர்கள். அப்படியும் இருக்கலாம். ஏனென்றால் அவர்கள் "நடிகர்கள்" அல்லவா? ஆக ரஜினிகாந்த் விட்ட இடத்தில் இருந்து இனி நடிகர் விஜய் தொடருவார் என்று எதிர்பார்க்கலாம்.

இளைய தளபதி வருகின்றார் என்று சந்தோசத்தில் துள்ளிக் குதித்த ரசிகர்கள் இப்போது ஒன்றும் புரியாது தலையைப் பிய்த்துக் கொண்டு இருக்கின்றனர். இதில் சந்திரசேகர் பக்கம், விஜய் பக்கம் என்று விஜய் மக்கள் இயக்கம் என்றும் கன்னைகட்டி விமர்சிக்க ஆரம்பித்தும் விட்டனர்.

இந்த நிலைமை தொடருமானால் விஜய் அரசியலுக்கு வரும்போது, விஜய் மக்கள் இயக்கம் இருக்குமா என்பதுதான் இப்போதுள்ள சந்தேகம்.

# அப்போ அம்பி; இப்போ அந்நியன்



தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் இப்போது தீவிர அரசியல் நடவடிக்கைளில் இறங்கிவிட்டன. அதற்கான காய்நகர்த்தல்கள் ஆரம்பித்து விட்டன. தமிழகத்தில் அ.தி.மு.க.வுக்கும், தி.மு.கவுக்கும் இடையில்தான் தேர்தலில் கடும் போட்டி இருக்கும். ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் பல சர்ச்சைகளில் சிக்கிச் சின்னாபின்னமாகியிருந்தது அ.தி.மு.க.. அதைப் பயன்படுத்தி அரியணை ஏறிவிடலாம் என்று காத்திருந்த தி.மு.க. இப்போது நடப்பவற்றால் சற்றுத் திக்குமுக்காடித்தான் போயிருக்கின்றது.

ஜெயலலிதாவின் பின்னர் அ.தி.மு.க. தலைவர்கள் துணிந்து முடிவு எடுப்பவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளவில்லை. மத்தியில் உள்ள பா.ஜ.கவுடன் இணக்க அரசியல், அவர்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவது என்று தற்போதைய அ.தி.மு.க. அரசு மீது கடும் விமர்சனங்கள் வைக்கப்பட்டிருந்தன. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியும் "என்ன வேணாலும் சொல்லுங்க, நான் சந்தோசமா இருப்பேன்" என்ற மாதிரி எதைப் பற்றிக் கவலைப்படாது தன்போக்கிலேயே இருந்தார். ஆனால் அவரது இந்தப் போக்கு அவருக்கு அரசியல் எதிரிகளைக் குறைத்துள்ளது என்றும் கூறலாம்.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் இதுவரை "அம்பியாக" இருந்த எடப்பாடி பழனிசாமி "அந்நியனாக" மாறத் தொடங்கியிருக்கிறார். அதனால் அவர் "அம்பி"தானே என்று இருந்த தி.மு.க. இப்போது திக்குமுக்காட ஆரம்பித்துள்ளது. நவம்பர் 1 தமிழ்நாடு தின அறிவிப்பு, பொங்கலுக்கு இரண்டாயிரம் ரூபா, ஈழத்தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை கோரிக்கை, எட்டு ஆண்டுகளாகக் கிடப்பில் கிடந்த கலைச் செம்மல் விருதுகளை வழங்கியது, பொதுத்தேர்வு ரத்து, அனைவருக்கும் வகுப்புச் சித்தி, காவிரி டெல்டா பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிப்பு என்று தனது திட்டங்களால் தி.மு.கவைத் திணறடிக்க ஆரம்பித்துள்ளார் எடப்பாடி. அதிலும் அரச பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கும் திருத்தத்தைச் சட்டமன்றத்தில் கொண்டுவந்த எடப்பாடி பழனிசாமி, அதற்கு ஒப்புதல் அளிப்பதில் ஆளுநர் காலதாமதம் செய்ததால், திடீர் அரசாணை வெளியிட்டு அதிர வைத்துள்ளார். இவையெல்லாம் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் எதிர்பார்க்காதவை.

ஸ்டாலின் மீது கட்சியின் உறுப்பினர்கள் முதல் சாதாரண பொது மக்கள் வரை பலத்த விமர்சனங்கள் இருக்கின்றன. வாரிசு அரசியல், எதிலும் நழுவல் போக்கு, கட்சித் தலைவராக வலுவான முடிவுகளை எடுப்பதில்லை, சரியான சமயங்களில் எதிர்வினைகள் ஆற்றுவதில்லை என்று விமர்சனங்கள் நீள்கின்றன. மேடைகளில் துண்டுச் சீட்டு வைத்துப் பேசுவது, வயல்களில் புகைப்படங்களுக்கு "போஸ்" கொடுப்பது மட்டும் தான் ஸ்டாலினின் பணிகள் என்றும் அவர் மீது எரிச்சலடைகின்றனர் கழகத் தொண்டர்கள். கலைஞரின் மகன் ஸ்டாலின் என்பதைத் தவிர்த்து அவரால் வேறு எதையும் மக்கள் மத்தியில் பதிய வைக்க முடியவில்லை. இது எதிர்க்கட்சித்தலைவராகக்கூட ஸ்டாலினால்உருவாகமுடியவில்லையோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. பூச்சியத்தில் இருந்து ஆரம்பித்த எடப்பாடி, தனது சமயோசிதத்தால் மேலே ஏறுகின்றார். எதிர்வரும் தேர்தல் எடப்பாடிக்கும், ஸ்டாலினுக்குமான பலப் பரீட்சையாக இருக்கப் போகின்றது. அதற்கிடையில் ஸ்டாலின் தனது சறுக்கல்களைச் சரி செய்வாரா பார்ப்போம்.

• சிறுகதை
• கவிதை
• கட்டுரை
• பத்தி எழுத்து
• ஓவியம்

நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan,com

தொடர்புகளுக்கு
0773165555

# தொப்பி பிரட்டினார்களா முஸ்லிம்கள்?

○ பரமேஸ்வரன்

இலங்கை அரசமைப்பின் இருபதாவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்ததைத் தொடர்ந்து முஸ்லிம்கள் தொப்பி பிரட்டிகள் என்ற ஒரு பிரசாரம் சிங்கள வர்களாலும் முஸ்லிம்களாலும் முன்னெ டுக்கப்பட்டு வருகிறது. நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் என்றாலென்ன பொதுத்தேர்தல் என்றாலென்ன ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் முஸ்லிம் விரோத பிரசாரத்தையே முன்னெடுத்திருந்தன.

அடிப்படை சிங்கள பௌத்த பேரினவாதிகள், மகாசங்கத்தினர், சிங்கள புத்திஜீவிகள் அல்லது கல்விமான்கள், புலம்பெயர் சிங்கள அமைப்புகள் என சகல தரப்பினரும் இணைந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் வெற்றிக்காக கடுமையாக உழைத்தனர். இதற்கு ஏப்ரல் 21 சஹ்ரானின் தற்கொலைத் தாக்குதலும் ஒரு காரணமாக அமைந்தது.

'ஏப்ரல் 21' தாக்குதல் சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது. கோத்தாபய ரஜாபக்ச ஜனாதிபதியாக வந்தால் புலிகளை ஒழித்தது போன்று இஸ்லாமியப்பயங்கரவாதத்தையும் கூண்டோடு அழிப்பார் என சிங்கள மக்கள் நம்பினர். ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் யாழ்ப்பாணம் வந்த சர்வதேச செய்தி நிறுவனமொன்றின் புகைப்பட ஊடகவியலாளர் கூட தான் இம்முறை கோத்தாவுக்குத் தான் வாக்களிக்கப்போவதாகச் சொன்னார் எனக்கு அவரது கூற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.


"எமக்கு ஒரு பலம் பொருந்திய தலைவர் தேவை (This time I'm going to vote for Gotta, we want a strong leader to the country)" என்றார். ஏற்கனவே 2010-2015 ஆண்டுக் காலப்பகுதியில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த சிறுபான்மைத் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை ஆதரித்தனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச 52 வீத வாக்குகளை ( 69 இலட்சம்) பெற்று பெரும்பான்மை சிங்கள மக்களின் அமோக ஆதரவுடன் ஜனாதிபதியானார். என்றுமில்லாதவாறு ஐக்கிய தேசியக்கட்சியின் கோட்டை என்று கருத்தப்பட்ட கொழும்பு, கண்டி மாவட்டங்களிலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மகத்தான வெற்றி பெற்றார். கொழும்பு மாவட்டத்தில் 13வீத மேலதிக வாக்குகளாலும் கண்டி மாவட்டத்தில் 6வீத மேலதிக வாக்குகளாலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெற்றியீட்டினார். வடக்கு, கிழக்கு மலையகம் போன்ற சிறுபான்மையினர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களைத்தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் கோத்தாபய ராஜபக்சதான் வெற்றிவாகை சூடியிருந்தார்.

தொடர்ந்து நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 59வீத வாக்குகளையும் 145 ஆசனங்களையும் பெற்று (தேசிபட்டியலையும் சேர்த்து) ஆட்சியைக் கைப்பற்றியது.

வழமையாக இலங்கையில் பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றும் அரசாங்கங்கள் அல்லது தலைவர்கள் செய்த அதே விடயத்தை தற்போதைய ஜனாதிபதியும் செய்கிறார் அல்லது தற்போது பதவியிலிருக்கும் அரசாங்கமும் முன்னெடுக்கிறது. அதாவது பதவியைக் கைப்பற்றியதும் அரசியல் யாப்பில் தமக்குச் சாதகமாக திருத்தங்களை மேற்கொள்வது அல்லது அரசியல் யாப்பையே மாற்றுவது. சிறிமா,ஜே.ஆர் , மஹிந்த போன்றவர்கள் இதையே செய்தனர். அவர்கள் வழியில் கோத்தாவும் செல்கிறார்.

இப்போது கோத்தாபயவுக்கு வாக்களித்த சிங்களவர்கள் எல்லோரும் துள்ளிக்குதிக்கிறார்கள். நாடு சர்வாதிகார ஆட்சியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறதாம், ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டதாம், சிவில் நிர்வாகம் இராணுவமயப்படுத்தப்படுகிறதாம்.

20க்கு எதிராக உய்ரநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்கிறார்கள். தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டத்தரணிகளும் 20க்கு எதிராக உய்ரநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தாலும் கூடுதலான வழக்குகள் சிங்கள சட்டத்தரணிகளாலேயே தாக்கல் செய்யப்பட்டிருந்தன.




இப்போது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டு என்னவென்றால் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20க்கு ஆதரவாக வாக்களித்து விட்டார்களாம். முஸ்லிம்கள் தொப்பியை பிரட்டி விட்டார்களாம், முஸ்லிம்கள் முதுகில் குத்தி விட்டார்களாம் என்றெல்லாம் சிங்களவர்கள் (சாதாரண சிங்கள பொதுமக்கள் கூட) கருத்துக்களை முன் வைத்து வருகிறார்கள்.

முஸ்லிம்கள் தொப்பியை பிரட்டி விட்டார்கள் என முஸ்லிம் இனத்தைச் சேர்ந்தவர்களும்கூட, முகநூலில் பதிவிட்டு தமது எதிர்த்தரப்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான தமது ஆத்திரத்தை கொட்டித்தீர்த்து வருகின்றனர்.இந்த விடயத்தில் சாதாரண முஸ்லிம் மக்கள் கோபப்படுவதில் நியாயமிருக்கிறது.

ஆனால் முஸ்லிம்களைப் பார்த்து தொப்பி பிரட்டிகள் என விரலை நீட்டுவதற்கு சிங்களவர்களுக்கு அருகதையில்லை. நீங்கள் (சிங்களவர்) அத்தனை பேரும் சேர்ந்து அரியணையில் அமர்த்திய ஜனாதிபதியும் அரசாங்கமும் சர்வாதிகாரப்போக்கில் ஆட்சியை கொண்டு சென்றால் மட்டும் அதை முறியடிப்பதற்கு உங்களுக்கு சிறுபான்மையினரின் உதவி தேவைப்படுகிறதா? நீங்கள் (சிங்களவர்) அத்தனை பேரும் சேர்ந்து அரியணையில் அமர்த்திய ஜனாதிபதியும் அரசாங்கமும் என்ன செய்தாலும் நன்மையோ தீமையோ அதற்கு சிங்கள வர்களே முழுப்பொறுப்பு. அரசாங்கம் மேற்கொள்ளும் ஜனநாயக விரோத செயற்பாடுகளால் பாதிக்கப்படப்போவது மூவின மக்களும் தான் என்பதை மறுக்க முடியாது. எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் சிறு பான்மையினரின் ஆதரவின்றி ஆட்சியைக் கொண்டு செல்ல வேண்டுமென ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்கள் நீங்கள் ( பேரினவாதிகள்)தான். உங்களுடைய மடியில் கை வைத்தவுடன் மட்டும் எதற்காக சிறுபான்மையினரின் உதவியை எதிர்பார்க்கிறீர்கள்,?

நீங்கள் விதைத்ததை நீங்களே அறுவடை செய்து கொள்ளுங்கள்; இனிமேலாவது சிறுபான்மையினரையும் அரவணைத்துச்செல்ல முயற்சியுங்கள்.



# சுனாமியும் கொரோனா அலையும்!

○ ராஜ்குமார்

மினுவாங்கொடவிலும் மீன் வாங்கின கடையிலும் உருவான கொரோனா , மூன்றாவது அலையாக இலங்கை முழுவதையும் ஆட்டி படைக்கிறது. மினுவாங்கொடவின் ஆடைத் தொழிற்சாலையில் ஆரம்பித்த அலை தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்த நிலையில் பேலியகொட மீன் சந்தையிலிருந்து கிளம்பிய அலையே இப்போ பேதியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது..

விமானப் படையினரின் மூன்று அன்ரனோவ் ரக விமானங்களைத் திருத்துவதற்கு உக்ரேனியிலிருந்து 11 தொழில்நுட்பவியலாளர்கள் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர் கடந்த 13ஆம் திகதி கொரோனா நோயாளராக அடையாளங்காணப்பட்டிருந்தார். அவர் தங்கியிருந்த ஹொட்டல் ஊழியர்கள் மூலம் மினுவாங்கொடைக்கு கொரோனா பரவியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. இதில் விமானப்படை சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த விடயம் அப்படியே அமுக்கப்பட்டு விட்டது.

பேலியகொட மீன் சந்தையில் பரிமாறப்பட்ட பணத்தாள்கள் மூலமே தொற்று நாலாதிசையும் பரவியிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கொரோனோவைக் கட்டுப்படுத்த மருத்துவத் திட்டங்களை வகுக்க வேண்டிய சுகாதார அமைச்சர் மந்திரித்த நீர் நிறைந்த மண்பானையுடன் ஆற்றிலே இறங்குகிறார். கொரோனாவைக் கட்டுப்படுத்த கடலிலும் குதிப்பேன் என்கிறார். இது நோயின் கட்டுப்பாடு அரசின் கையைவிட்டுப் போய்விட்டதனை சொல்லாமல் சொல்கிறது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் பெயரில் அரசும் ஏகப்பட்ட தில்லாலங்கடி வேலைகளைச் செய்து வருகிறது. அதிலொன்றுதான் சுதர்சன சூரணம். கொரோனாவுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க உலக நாடுகள் எல்லாம் தலையால் தண்ணி குடிக்கும் நிலையில் தாம் ஆயுள்வேத மருந்து ஒன்றைக் கண்டுபிடித்து விட்டதாக அறிவித்தது அரசு. பின்னர் அரச வைத்தியசாலைகளில் அது பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் பின்னர் கிளம்பிய எதிர்ப்புக்களையடுத்து சுதர்சன சூரணம் ஆய்வு நிலையில் உள்ளது என அறிவித்துள்ளது. அப்படி என்றால் அந்த மருந்தை நோயாளிகளில் ஆய்வு செய்ய முயற்சிக்கப்பட்டதா என்ற சந்தேகம் தற்போது கிளப்பப்பட்டு வருகிறது.

பி.சி.ஆர் பரிசோதனைகளிலும் ஏகப்பட்ட சொதப்பல்கள் நடப்பதாக சொல்லப்படுகிறது. மேற்கொள்ளப்பட்ட பி.சிஆர் பரிசோதனை மாதிரிகள் காணாமல் போவதாகவும் பலருக்கு பல நாளாகியும் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை என்றும் முறைப்பாடுகள் கிளம்பியுள்ளன. அண்மையில் லண்டனில் இருந்து வந்த வைத்தியரான துசார விக்ரமநாயக்க ( முன்னாள் பிரதமர் ரத்ன சிறி விக்கிரம நாயக்கவின் மகள். இப்போதைய ராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் சகோதரி) 14 நாட்கள் நீர்கொழும்பில் உள்ள ஹொட்டல் ஒன்றில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தார். பின்னர் அவர் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டார். ஆனால் முடிவுகள் அறிவிக்கப்படவில்லை

இது தொடர்பாக அந்த ஹொட்டலில் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளை வினாவிய போது அவர்கள் மிகக்கடுமையாக நடந்து கொண்டனர்.கடைசியில் அவரது பி.சி.ஆர் மாதிரி தொலைந்து விட்டதாக கூறியதோடு, மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.ஒரு அமைச்சரின் சகோதரிக்கே இப்படி என்றால் சாதாரண மக்களுக்கு பி.சி. ஆர் சோதனைகளில் என்னென்ன திருகுதாளங்கள் நடக்கின்றனவோ?

இது தவிர கொரோனா தடுப்புக்காக கிடைத்த நிதிகளை அரசு என்ன செய்கிறது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் ஓமல்பே சோபித தேரர். கொரோனா நிதியாக உலக வங்கியால் 167 மில்லியன் டொலர் அதாவது 30 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத்துறைக்கு 63 பில்லியன் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அதில் பாதியான உலகவங்கியின் நிதிக்கு என்ன நடந்தது என்று கேட்டிருக்கிறார் தேரர்.

கொரோனா நிதியாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலிருந்தும் பல கோடி நிதி கிடைத்ததே எங்கே அது? கடந்த மார்ச் மாதம் முதல் செயற்கை சுவாசக்கருவிகளோ, பி.சி.ஆர் பரிசோதனை உபகரணங்களோ அரசால் புதிதாகக் கொள்வனவு செய்யப்படவில்லை. மாறாக 'சுவசரிய ' அம்புலன்ஸ்களில் உள்ள செயற்கை சுவாசக் கருவிகளை கழற்றி வைத்தியசாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார் ஐதேகவின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்த்தன. ஏற்கனவே சுனாமிக்கு கிடைத்த நிதி மஹிந்தவால் சுருட்டப்பட்டதாகப் பேச்சு உள்ளது. அதே நிலைதான் இந்த நிதிக்கும் ஏற்படுமோ என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினரை பின்தள்ளி இராணுவத்தினரை வைத்து இந்தக் கொரோனா அலையை கட்டுப்படுத்தி விட்டு மீண்டும் ஒரு வெற்றி நாயகர்களாக வலம்வர முயற்சிக்கின்றார்கள் ராஜபக்சக்கள். அதற்காக "இன்னமும் சமூகப் பரவல் இல்லை கொத்தணி, கோட்டம் , வலயம்" என்று கதையளந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கொரோனாவோ சமூகத்தைத் தாண்டி சுனாமி ஆகி வீடுகளுக்குள் புகுந்து கொண்டிருக்கிறது...அதுவே இலங்கையின் இன்றைய யதார்த்தம்.



# பனையோடுடனான வாழ்வு

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

வழமைக்கு மாறாக இந்த ஆண்டு பல இடங்களிலும் பனை நடுகை அமர்க்களமாக நடக்கிறது. தனியாட்கள், குழுக்கள், அமைப்புகள் தொடக்கம் பனை அபிவிருத்திச் சபை வரை பல தரப்பினரும் பனை நடுகையில் ஈடுபடுகின்றனர். நல்ல விசயமிது. இது இப்படியே தொடர்ந்தால் மீண்டும் "எங்கெங்கு காணினும் பனையடா" என்று பாடக்கூடியதாக வரலாம். மில்க்வைற் கனகராசாவின் கனவு நனவாகலாம்.

முன்பு ஒரு காலம் அப்படித்தானிருந்தது. காணுமிடமெங்கும் பனைகளாகவே. இதனால்; பனையே நம்முடைய நிலத்தின் அடையாளமாக இருந்தது. நிலத்தின் அடையாளமாக மட்டுமல்ல, நம் வாழ்வின் அடையாளமாகவும்தான்.

ஆனால், யுத்தம் லட்சக்கணக்கான பனைகளைத் தின்றது. போதாக்குறைக்கு மீள் குடியேற்றத்தில், மீள் கட்டுமானத்தில் வீட்டுத் திட்டங்கள் ஆயிரக்கணக்கான பனைகளைத் தின்றன. மிஞ்சிய பனைகளையும் வடலிகளையும், காணிகளைத் துப்புரவாக்கிப் புனர மைக்கிறோம் என்ற பேரில் ஒவ்வொருவரும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். பனை அழிப்புக்கு எதிராகப் பனை அபிவிருத்திச் சபை இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றினாலும் அழிக்கப்படும் பனைகளின் எண்ணிக்கை குறைந்த மாதிரித் தெரியவில்லை, எப்படியோ சுழித்துக் கொண்டு பனைகளையும் வடலிகளையும் அழித்துக் கொண்டிருக்கிறார்கள். பனை அபிவிருத்திச் சபையினுடைய கணக்கின்படி 30 லட்சம் பனைகள் அழிந்து விட்டன என்று கூறப்படுகிறது. இதைத் தவிர, அனுமதியின்படி சராசரி ஆண்டொன்றுக்கு 30 ஆயிரம் பனைகள் அழிகின்றன.



கேட்டால், பனை நின்றால் பிற (பணப்) பயிர்கள் வளராது, விளையாது என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணம், பனைகளோடான வாழ்க்கை இன்றில்லை என்பதாகும்.

ஆனால் பனைகளோடு கூடி வாழ்ந்ததே நம்முடைய கடந்த கால வாழ்க்கை. எந்த வயலில் பனை நிற்கவில்லை? எந்தத் தோட்டத்தில், எந்த வீட்டில் பனையிருக்கவில்லை? எவருடைய காணி பனையின்றியிருந்தது? எந்த ஊர் பனையில்லாமல், பனந்தோப்புகளற்று வாழ்ந்தது?

அப்பொழுது பனை எல்லோருக்குமே தேவையாக இருந்தது. வேலியடைக்க, வீடு வேய, மாட்டுத் தீவனத்துக்கு, கடகம், பெட்டி, பாய், சுளகு, பட்டை, நீத்துப்பெட்டி, தடுக்கு, கூடை, ஒடியல், பனாட்டு, பனம்பழம், ஓலை, மட்டை, நார், மரம், நுங்கு, பனம்பழம், பனங்கட்டி, பின்ஞ்சீனி என்று ஏராளம் தேவைகளுக்காக. சுருக்கமாகச் சொன்னால், பனையின்றி வாழ்வில்லை என்றவாறு. உண்மைதான் பனையின்றித் தமிழர்களின் வாழ்க்கை இல்லை என்றிருந்தது. எழுதப்படிக்கக் கூடப் பனையோலைச் சுவடிகளே பயன்பட்டன. அதனால் பனை அன்று யாருக்கும் இடைஞ்சலாக இருக்கவில்லை.

இன்று எல்லாமே மாறி விட்டது. அதனால் பனை தேவையற்றதொன்றாகிப் போனது. இதனால்தான் பனையைத் தயவு தாட்சண்யமின்றி எல்லோரும் அழிக்கிறார்கள்.

ஒரு பக்கம் வளர்ந்த பனைகளையும் வடலிகளையும் அழித்துக் கொண்டு, மறுபக்கத்தில் பனைகளை நடுவது வேடிக்கையாக இல்லையா? என்ற கேள்வி எழுகிறதல்லவா! இதனையே மக்கள் சிந்தனைக் களத்தின் தலைவர் யோசுவா அடிகளும் கேட்கிறார். "பனையைப் பயன்படுத்தத் தயாரில்லாத சமூகத்துக்கு ஏன் பனைகள்? தனியே இயற்கைச் சூழலுக்குத்தான் பனைகள் பயன்படுமென்றால், இப்போது நிற்கின்ற பனைகளையும் வடலிகளையும் ஏன் அழிக்க வேண்டும்? பனைக்குப் பதிலாக வேறு மரங்களைக் கூட நடலாமே! இதற்கெல்லாம் விடையில்லாமல் பனை நடுகை செய்வது சரியானதா?" என்று. யோசுவா அடிகளின் கேள்விகளுக்கு மக்கள்தான் பதில் சொல்ல வேண்டும். கூடவே பனை சார் நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களும், பனை நடுகையை ஊக்கப்படுத்த வேண்டும் என்போரும்.

ஏனென்றால், முதலில் செய்ய வேண்டியது, வளர்ந்து நிற்கின்ற பயன்தரு நிலையிலுள்ள பனைகளைப் பாதுகாப்பதேயாகும். காரணம், ஆண்டொன்றுக்கு பனை அபிவிருத்திச் சபையின் அனுமதியைப் பெற்று சராசரியாக 30 ஆயிரம் பனைகள் பல தேவைகளுக்குமாக அழிக்கப்படுகின்றன. அனுமதியற்ற கணக்கு வேறு. ஆகவே, இதற்கான விழிப்புணர்வு, பொறுப்புணர்வு, பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றைச் செய்து பனைகளைப் பாதுகாத்தால் தொடரும் பனை அழிவைத் தடுக்க முடியும். கூடவே பனைப் பயன்பாட்டை விரிவு படுத்துவது. ஊக்கப்படுத்துவது. பனையை கட்டட நிர்மாணத்துக்குரிய மரத்தேவைக்கு அப்பால், அதன் பன்மைத்துவப் பயன்பாட்டுக்குட்படுத்துவது. அதாவது பனைசார் உற்பத்திகளுக்கான கேள்விகளை அதிகரிப்பதாகும். இதற்குரிய வேலைத்திட்டங்களும் விழிப்புணர்வும் பயன்பாட்டுப் பண்பாடும் உருவாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பனைகள் இயல்பாக வளர்க்கப்படக் கூடிய சூழல் உருவாகும்.



இப்போது நடப்படுகின்ற பனைகள் - போடப்படுகின்ற விதைகள் - முளைத்து, வளர்ந்து பயன்தரு நிலையை அடைவதற்கு குறைந்தது பத்து ஆண்டுகளாவது செல்லும். இந்தப் பத்தாண்டுகளுக்குள் மேலும் பனைகள் அழிந்து போகும்.

இதிலும் நடுகை செய்யப்படும் பனைகளில் 40 வீதமானவையே தேறி ஒழுங்காக வளருகின்றன என்கிறார் பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரியொருவர். சில இடங்களில் இது கூடுதலாக இருக்கலாம். ஆனால், எல்லா இடங்களிலும் அதற்கான சாத்தியங்கள் குறைவு என்பதால் சராசரி மதிப்பீட்டையே நாம் பார்க்கிறோம் என்கிறார் அவர். யுத்தம் முடிந்த பின்பு 2013 இலிருந்து 2019 வரையில் 24 7600 பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. இது பனை அபிவிருத்திச் சபையினால் நடுகை செய்யப்பட்டவை. அவருடைய தகவலின்படி 9,904368 பனைகளே முளைத்திருக்க வேண்டும். தவிர, இந்த ஆண்டு மூன்று லட்சம் விதை நடுகையை எதிர்பார்க்கிறார்கள்.

இவ்வளவும் தனியே பனை அபிவிருத்திச் சபையின் நடுகைத்திட்டத்தின் கீழானவை.இதை விட வேறு அமைப்புகள், சங்கங்கள், தனியார் போன்ற தரப்புகளால் நடப்பட்டவையும் நடுகை செய்யப்படுகின்றவையும் வேறு கணக்கில்.

இப்படி இந்தச் செயற்பாடுகள் நடந்தாலும் அண்மைக்காலத்தில் முளைத்த பனைகள் என்று குறிப்பிக் கூடிய அளவுக்கு எங்குமே அவற்றைக் காண முடியவில்லை. அதாவது எந்தப் புதிய தோப்புகளையும். *அப்படியென்றால் பனை நடுகையின் பயனென்ன? பொருளென்ன?*

இது ஒரு சிக்கலான நிலைமையே. பனை அபிவிருத்திச் சபை பல நடவடிக்கைளை தொடர்ச்சியாக மேற்தொள்கிறது. பனை நடுகை, பனைசார் உற்பத்திகளை ஊக்கப்படுத்துதல், பனை வள ஆய்வு, பனந்தொழிலாளர் அமைப்புகளை உருவாக்குதல், அதற்கான பயிற்சி நெறிகள் என. முக்கியமாக பனை உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்தல், அவற்றைச் சந்தைப்படுத்துதல், பனை சார் கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குதல் என. இந்தச் சங்கங்கள் யாழ்ப்பாணத்தில் 22, கிளிநொச்சியில் 07, முல்லைத்தீவில் 06, வவுனியாவில் 0, மன்னாரில் 06 என இயங்குகின்றன.

இந்தச் சங்கங்களுக்கும் ஏற்கனவே உள்ள பனை, தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையில் எந்தத் தொடர்பும் இல்லை. இருந்தும் முழுமையான அளவில் பனைப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை உயர்த்த முடியவில்லை.

இப்பொழுது பெரும்பாலான இடங்களில் பனம் பழத்தைத் தீண்டுவோரே கிடையாது. பனம் விதைகளைப் பொறுக்குவோரே இல்லை. பனைகளுக்குக் கீழே வடலிகள் கும்பலாக முளைக்கின்றன. அந்தளவுக்கு பனையில் அக்கறையற்ற நிலையே வளர்ந்துள்ளது. ஆனால், தொழில் வாய்ப்பில்லாமல் பலர் இருக்கிறார்கள். கிடைக்கின்ற வளத்தைப் பயன்படுத்தி வருமானத்தைப் பெறுவதற்கு இவர்கள் தயாராயில்லை.

நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, பூநகரி - கௌதாரிமுனை, இயக்கச்சி போன்ற சில இடங்களில்தான் பனை சார் தொழில் முன்னரைப்போல செழிபோடிருக்கிறது. இங்கிருந்தே சந்தைகளுக்கான உற்பத்திகள்

# பொறுப்புணர்ந்து செயற்படுவோம்

ம.பா.மகாலிங்கசிவம்

இலங்கைத் தமிழர்கள் போரின் காரணமாகவும் பொருளாதார மேம்பாடு கருதியும் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளுக்கும் சென்றனர், கடும் உழைப்பாளிகளான இவர்கள் தாம் சென்ற நாடுகளில் எல்லாம் ஊண், உறக்கம் இல்லாத உழைப்பின் மூலம் பெரும் செல்வத்தைத் தேடினர். தமது துன்பகரமான வாழ்வை மறைத்துத் தமது பெற்றோரும் சகோதரர்களுமாவது இன்பமாக வாழட்டும் என்று உழைப்பின் பெரும் பங்கைத் தாய் நாட்டுக்கே அனுப்பினர். போர்க் காலத்திலும், கொவிட் -19 முடக்கநிலைக் காலத்திலும் தமிழ் மக்கள் தாழ்ந்து போகாமல் தலைநிமிர்ந்து வாழ இவர்களது பணமே உதவியது எனலாம். வறுமையில் இருந்த குடும்பங்களை வசதியான வாழ்வுக்குள் இப்பணம் இட்டுவந்தது.

சில இடங்களில் இப்பணம் சாதாரணமாக இருந்தவர்களைத் தலைக்கனம் பிடித்தவர்களாகவும் மாற்றியது. காணி விலையிலிருந்து மணமகனுக்கான சீதனம் வரை சகலதையும் பல மடங்கு உயர்த்தியது. எந்த உழைப்பும் இல்லாத இனப்பரம்பரை ஒன்று விலையுயர்ந்த தொலைபேசிகளையும் மிக மிக விலையுயர்ந்த உந்துளிகளையும் அநாயமாகப் பயன்படுத்தி 'கலர்' காட்ட உதவியது. அதுமட்டுமா? கொல்லைப் புறத்திலுள்ள மலசலகூடத்தில் 'ஒண்டுக்கிருக்கக் கூட ஓட்டோ பிடிக்கும் தனவந்த மனப்பான்மையையும் ஏற்படுத்தியது.

இத்தகைய மனப்பான்மையில் மாயையில்வாழ்பவர்கள்தமது உறவினர்கள்புலம்பெயர்ந்த நாடுகளில் கட்டட காடுகளிடையே ஒவ்வொரு டொலரையும் ஒவ்வொரு றியாயையும் உழைக்கப் படும்பாடு குறித்து சிந்திக்கவில்லை. உணர்ந்து கொண்டவர்களும் "எவ்வளவோ கடன்பட்டு அனுப்பினோம். எங்களுக்கு உழைத்து தரத்தானே வேண்டும்" என்ற வாய்ப்பாட்டினுள் தம்மை மறைத்துக் கொண்டனர். இதேவேளை ஒருபுறம் உழைப்பில் தன்னை உருக்க இன்னொரு புறமோ பணத்தில் தம்மை மறக்கும் முரண்நிலை பற்றிப் பல்வேறு இலக்கிய கர்த்தாக்களும் சிந்தித்தே உள்ளனர். அதன் விளைவாகச் சிறந்த இலக்கியங்களைப் படைத்தும் உள்ளனர். இவ்வகையில் நெப்போலியனின் 'எதற்கு' என்ற கவிதை இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கிறது.

நெப்போலியன்



தமிழகம் புதுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பொறியியலாளர். சிங்கப்பூரைப் புலம் பெயர் தேசமாகக் கொண்டவர். கவிதை, சிறுகதை என்பவற்றுக்கான சிங்கப்பூர் தேசிய விருதைப் பெற்றவர். 'நானும் என் கருப்புக் குதிரையும்' என்பது இவரது முதல் கவிதைத் தொகுப்பு. இதை வாசித்த இசையமைப்பாளர் விஜய் ஆன்டனி அழைக்கத் திரைப்படப் பாடலாசிரியராகவும் பரிணமித்தவர். இசையமைப்பாளர், நடிகர், நடன அமைப்பாளர், குறும்படத் தயாரிப்பாளர் முதலிய பல்வகைப் பரிமாணங்களைக் கொண்டவர்.

தன்னைப் பற்றிய கற்பனையான அறிமுகத்துடன் கவிதையை ஆரம்பிக்கிறார். விடுமுறை பெற்றால் சம்பளம் வெட்டப்படும் இக்கட்டான நிலையில் வேலை. சிக்கனமாகச் செலவு செய்தால் ஒன்றரை வருடத்தில் கடனை அடைத்து விட முடியும். எனினும் தாயகத்திலுள்ள குடம்பத்தவர்கள் அதற்கு வாய்ப்பளிக்கவே இல்லை.
"அங்கே...

தனப்பனார் சாராயம் குடிப்பதை நிறுத்திவிட்டாராம்..." என்கிறார். கவிஞர் நல்ல செய்திதானே என்று சிந்தித்தால், அடுத்த அடியில் "உசந்த சரக்குதானாம் இப்பொழுது"என்று குடி மக்களுக்கு அடிவிழுகிறது. வண்ணத் தொலைக்காட்சி பெற்றுக் கொண்ட அம்மாவோ, அடுத்த தடவைப் பணத்தில் அட்டிகை வாங்க ஆலாய்ப் பறக்கிறார். அக்காவுக்குத் தகுதிக்கு மீறிய மாப்பிள்ளை, காதலனுக்கு பரிசளிக்கும் தங்கை, விலையுயர்ந்த செலுப்பணியும் தம்பி என்று குடும்பமே ஊதாரித்தனத்தின் உச்சத்துக்குச் செல்கிறது.
ஆனால் ஊணுறக்கம் இன்றி உழைப்பவனின் வாழ்க்கையோ அதலபாதாளத்தில்...

"இங்கே
உச்சி வெயிலில்
கம்பி வளைக்கையில்
உடம்பு கிறுகிறுத்து
ஐந்து நிமிடம்
அசந்து அமர்ந்ததற்காய்
அடிவயிற்றில் எட்டி உதைத்தது
அரைநாள் சம்பளம் வெட்டி
அசிங்கமாய்த் திட்டுகிறான்
குத்தகை முதலாளி"

என்று புலம் பெயர் தமிழரின் ஒட்டுமொத்தமான துன்பநிலை பதிவு செய்யப்படுகின்றது.
எனவே இன்னொருவரின் வியர்வையில் இரத்தத்தில் குளித்து பணத்தின் ஒவ்வொரு ரூபாவையும் செலவு செய்ய முன்னர் ஒரு கணம் சிந்திப்போம். அங்குள்ளவர்கள் பிரிந்திருக்கும் துயரமும் பாசமும் கண்ணை மறைக்க எதற்குப் பணம் அனுப்புறோம் என்றே தெரியாமல் தொடர்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். இங்குள்ளவர்கள் தான் அந்தப் பணத்தை ஆடம்பரமாகச் செலவிடாமல் எப்படி எதிர்காலத்துக்கான முதலீடுகளாக மாற்றலாம் என்று சிந்திக்க வேண்டும். வீட்டுக்கு வர்ணம் பூசுவது போட்டிக்கோ கட்டுவது இயற்கையான குளிர்ந்த சூழல் தந்த வேலிகளை அழித்து மதிலாக்குவது விலையுயர்ந்த கேற், சிற்பவேலைப்பாடமைந்த கதவு. அதை மறைக்க விலையுயர்ந்த 'கேட்டின்' என்று எந்த வருவாயும் இல்லாத விடயங்களிலேயே உயர்ந்த சமூக அந்தஸ்தை வேண்டி செலவளித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த முன்னேற்றம் தாராத நிலை மாற வேண்டும். புலம்பெயர் பணத்தைச் சிக்கனமாகச் சேமித்து வீட்டுத் தோட்டங்களாக, தென்னந் தோட்டம், வாழைத்தோட்டங்களாக, சிறிய தொழில் முயற்சிகளாக மாற்ற வேண்டும். புத்திசாலித்தனமாக முதலிட்டால் புலம்பெயர்ந்தவரிடம் வாழ்நாள் முழுவதும் கையேந்தி நிற்கும் நிலை மாறி நாமே அவருக்கும் பணம் அனுப்பும் நிலைக்குச் செல்லலாம். சிந்திப்போம். பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.

## எதற்கு?

என் பெயர் கருப்பையா கந்தசாமி
வயது-22
திருப்பத்தூர் ரணசிங்கபுரம் சொந்தஊர்
இரண்டு வருட வேலை அனுமதிச்சீட்டு
கட்டுமானத் தொழிலாளி வேலை
கழிவறைகள் கழுவுவதும் உண்டு
வேலைக்காக முகவரிடம் கடன்பட்ட தொகை
1,80,000 ரூபாய் ரூபாய் (வட்டி தனி)
ஒருநாள் சம்பளம் 18 வெள்ளி
விடுமுறை கிடையாது
எடுத்துக் கொண்டால் சம்பளம் இல்லை
தொடர்ந்து வேலை இருப்பின்
ஒன்றரை வருடத்தில் கடன் அடைக்கலாம்.

அங்கே ...
தகப்பனார் குடிப்பதை நிறுத்திவிட்டாராம்
உசந்த சரக்குதானாம் இப்பொழுதெல்லாம்

தொலைக்காட்சித் தொடரை
வண்ணத்தில் பார்க்கும்
அம்மாவுக்கு அடுத்த தடவை
அட்டிகை வேண்டுமாம்

படிக்க அனுப்பிய பணத்தில்
பக்கத்து வீட்டு காதலனுக்கு
பிறந்தநாள் பரிசு வாங்கிக் கொடுக்கிறாளாம்
தங்கச்சி
தம்பி போடும் செருப்பின் விலை 998 ரூபாயாம்

இங்கே உச்சி வெயிலில்
கம்பி வளைக்கையில் உடம்பு கிறுகிறுத்து
ஐந்து நிமிடம் அசந்து அமர்ந்ததற்காய்
அரைநாள் சம்பளம் வெட்டி
அசிங்கமாய் திட்டுகிறான்
குத்தகை முதலாளி

தேன் கூடு

(தொடர்ச்சி)

# பனையோடுடனான...

கிடைக்கின்றன. ஆனால், சந்தைக்கான கேள்வி தாராளமாக உண்டு. கேள்விக்கேற்ற அளவுக்கு உற்பத்திகளைப் பெற முடியவில்லை என்பது பனை அபிவிருத்திச் சபையின் கவலை. பயனாளர்களின் கவலையும் இதுதான். உள்ளூர் சந்தைகளில் ஒரு கிலோ ஒடியல் மாவின் விலை 400 ரூபாய். (ஒரு கிலோ கோதுமை மாவின் விலையோ 88 மட்டுமே.) ஒடியல் மா எங்களுடைய ஊர்களில் விளைவது.

கோதுமையோ அமெரிக்கா தொடக்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவது. புலம்பெயர் சமூகத்தினர் பனம் பொருட்களை விரும்புகின்றனர். அங்கே ஏற்றுமதி செய்ய முடியும். இருந்தும் அதற்குத் தட்டுப்பாடு. ஒடியலை இப்பொழுது யாருமே பெரிதாகக் கணக்கில் எடுப்பதில்லை. அதனால் உற்பத்தி குறையச் சந்தையில் பொருளுக்குப் பெருந் தட்டுப்பாடு. ஒடியலை மட்டுமல்ல, கிழங்கு, நுங்கு, பனம்பழம், பனையோலை, மட்டை, நார், ஈர்க்கு, பனந்தும்பு என எதையும் பெரும்பாலானவர்கள் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை இப்போது.

கள் மட்டும் ஒரு குறிப்பிட்டளவு உற்பத்தி செய்யப்படுகிறது. அதுவும் வரவரக் குறைவடைந்து போகிறது. கள் உற்பத்தியாளர்கள் குறைவடை:ந்து வருகின்றதும் இதற்கொரு காரணம். கூடவே பியர் மற்றும் பிற மதுப்பொருட்களைப் பயன்படுத்தும் அளவுக்கு கள்ளின் பயன்பாடு குறைவு. ஏன், கசிப்பைக் காய்ச்சுவதில் ஈடுபாடுள்ள அளவுக்குக் கள் உற்பத்தியில் ஈடுபாடில்லை என்று சொல்ல வேண்டிய நிலைமை உள்ளது. கள்ளை மென்பானமாக்கும் பொறிமுறை இன்னும் வளர்க்கப்படவில்லை என்பது இன்னொரு குறை. போத்தலில் அடைக்கப்படும் கள் என்பதைத் தவிர, இதில் வேறு முன்னேற்றங்கள் குறைவு. பனஞ்சாராய உற்பத்திக்கு அரச அனுமதியைப் பெறுவதில் கெடுபிடி நிலையே உண்டு. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பனம் பொருட்களுக்கு இருந்த செல்வாக்கின் நிலையை நீங்கள் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்க வேண்டும். அவ்வளவும் இயற்கை உணவுப் பண்டங்கள். அத்தனையும் இயற்கைப் புழங்கு பொருட்கள்.

இப்பொழுது சந்தையில் ஒரு கிலோ பச்சை ஒடியல், புழுக்கொடியல் ஆகியவற்றின் விலை 200 ரூபாய். பனாட்டு ஒரு கிலோ 650. கருப்பட்டி 850. பனம்பழச்சாறு ஒரு போத்தல் 100 ரூபாய். இது பனை அபிவிருத்திச் சபையின் கொள்விலை. இருந்தும் இதற்கான பொருட்கள் இல்லை. இதை மேம்படுத்த முடியாம லுள்ளமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகிறது. முக்கியமாக பனை அபிவிருத்திச் சபையில் அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்படுகின்ற தலைமைத்துவக் கட்டமைப்பு (சபைக்கான தலைவர் மற்றும் குழுவினர்) அரசியல் நியமனத்துக்கு உட்பட்டிருப்பதால் ஆட்சி மாற்றங்களோடும் அரசியல் சூழல்களோடும் எப்போதும் குழப்படைந்து, வெற்றிகரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தடையாக உள்ளது. இதனால் இலக்கினை எட்டுவது சிரமமாக இருக்கிறது.
இந்த மாதிரியான நிலையில் பனைசார் தொழில்களையும் பனந்துறையையும் வளர்த்தெடுப்பது எப்படி?

இதேவேளை இன்னொரு பிரச்சினையும் பனைக்கு எதிராக வளர்ச்சியடைந்துள்ளது. பனை சார் தொழில்களைக் குறித்த குறை மதிப்பீடு சமூகத்தில் வளர்ந்திருப்பதே. முக்கியமாக சாதிக்குட்பட்ட தொழிலாக வரையறுக்கப்பட்டிருக்கும் சமூக நடைமுறை. மற்றது கள்ளிறக்குவதாக இருந்தாலும் சரி, ஒடியல், பனாட்டு, புழுக்கொடியல் உள்ளிட்ட பனம்பொருட்களை உற்பத்தி செய்வது ஏதோ சமூக ரீதியில் தரங்குறைவான - ஏழைகளின் அடையாளம் என்ற மாதிரிஒரு தவறான புரிதல் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன், புதிய பொருளாதாரப் பண்பாட்டு நிலைமையில் பாரம்பரியத் தொழில்கள் சந்தித்து வரும் நெருக்கடி பனைசார் தொழில்களுக்கும் உற்பத்திகளுக்கும் நேர்ந்துள்ளது. இந்த நெருக்கடியைத் தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும் எதிர்கொண்டு மேலெழக் கூடியவாறும் இவற்றை நவீனப்படுத்தும் முயற்சிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை. புதிய தொழில் நுட்பங்கள் போதிய அளவுக்கு இவற்றில் பிரயோகிக்கப்படவில்லை. எனவேதான் இந்த நெருக்கடி பனைகளையும் அது சார்ந்த உற்பத்திகள், தொழில்களையும் பாதித்திருக்கிறது.

பனை அபிவிருத்திச் சபையும் பனை ஆய்வு நிலையமும் இதற்காக இயங்கிக் கொண்டிருக்கும் இரண்டு அரசு சார் நிறுவனங்கள். இவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சில வேலைகளைச் செய்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை. இருந்தாலும் வளர்ச்சியில் மந்த நிலையே காணப்படுகிறது. இதிலே கவனிக்க வேண்டிய சங்கதி என்னவென்றால், வடக்கையும் விடக் கிழக்கில் பனை உற்பத்திகளை கூடுதலாகப் பெற முடியும் என்பதாகும். ஆனால், பனை என்றால் வடக்கு. அதிலும் யாழ்ப்பாணம் என்ற கதையெல்லாம் மலையேறி மறைந்து விட்டது என்ற கதைதான். இதையெல்லாம் மாற்றியமைப்பதற்கு நமது பல்கலைக்கழகங்களும் பொருளாதாரத்துறையினரும் அரசும் அரசியல்வாதிகளும் முயற்சிக்க வேண்டும். அதுவே பனை நடுகையை மெய்யான தோப்பாக்கும்.

# மௌன மொழி

## 20 இற்கான கவிதைகள்



**பரிசு பெறும் கவிதை**

குண்டடியும் ஷெல் வீச்சும் கேட்டு
குடும்பத்துடன் இடம்பெயர்ந்து சென்று
பல்குழல் ஓசை கேட்டு பதறி நடுங்கி
படுத்தோம், பதுங்கினோம் தெருவில் அன்று
மூக்கையும், வாயையும் ஒன்றாய் சேர்த்து
முக்கால் துணிகொண்டு மூடிக் கட்டி
மூச்சை நிறுத்தும் கொரோனாப் பீதியால்
முதுகினில் சுமையுடன் வீதியில் இன்று

குகசோபி, பண்ணாகம்

முள்ளிவாய்க்கால் முதல்
முகவரியிட்ட
முகக்கவச முகாரிகள்...
இன்று,
கொள்ளைநோய் கொரோனாவாய்
வெள்ளை மாளிகை
வேந்தனையும்
தள்ளிப் பேதம்பார்க்கவில்லை.

மானியூர் ரட்ணேஸ்

பிணம் உண்ட இராஜகழுகுகளின்
கோரப் பார்வையில் தப்பிய
குற்றுயிரோடு, எம்மின உதிரம்
தோய்ந்த செம்மண் பாதையில்
எடுத்து செல்ல பொன்னில்லை, பொருளில்லை
மீதமுள்ள தமிழ் இன முத்துக்களை
தலையில் சுமந்தேனும் கரைசேர்ப்போம்
சிதைந்த வேரிலும் துளிருண்டு.....!

எழிலரசி ஹர்ஷிகா

பார்வையிலே முகமலர்கள்
போவதெந்த முகவரிகள்
பார் அற்றும் தோள் சுமக்கும்
பாசத்திற்கு ஏது விலைகள்
கோலமயில் தலை இடையில்
கொண்ட சுமை தனியுடமை
நாதி அற்ற மாந்தருக்கு
நம்பிக்கையே உறுதுணை

வி.சாத்வீகன்
முரசுமோட்டை

முகத்தை மூடி மூட்டை முடிச்சுகளுடன்
புறப்பட்டு விட்டால்
கொடிய கொள்ளை நோய்
கொரோனாவிற்கு தப்பத்தான் முடியுமா?
இன் நிலையை அறியா அப்பாவிகளாக
ஆமிக்குப் பயந்து ஓடி ஒளிந்தது
போலன்றி ஓரிடத்தில் ஒதுங்கி
வாழவேண்டிய காலம் இது.......

முல்லைக்கிளி, தண்ணீரூற்று

ஈரைந்து மாதங்கள்
வயிற்றில் சுமக்கும்
பாக்கியம் இல்லையென்றோ
இது உன் முறை என என்னை
தோளிலே சுமக்கின்றாய்
உன் தோளில் அமரும்
சுகம்தனை வேறெந்த
சிம்மாசனமும் தந்திடுவதில்லை....

பு.டனுஸ்காந்
மு/உடையார்கட்டு ம.வி

ஏழையாகப் பிறந்தோம்
எம் வாழ்க்கையை
கஷ்டத்திலே தொலைத்தோம்
பிள்ளையைத் தூக்கி
தோளிலே அமர்த்தி – அவர்களின்
வாழ்க்கையை உயர்த்தி
இன்பம் காண்பதற்கு
ஊர் விட்டுச் செல்கின்றோம்

ம.கிரிதரன்
யா/தாவடி இ.த.க பாடசாலை

கோர்வையிலே கொடி மலராய்
போவதெங்கே பொடி நடையாய்
பார்வையற்ற விழிகளுக்கு
பாசமொன்றே உறுதுணையாய்
முகத்திற்கு முகமூடி
முன்னேற வழிதேடும் -எம்
வறுமைதனை வைரஸூக்கு தெரியலை
வைரத்துக்கு வானம் ஒன்றே மறு எல்லை

கி.விஜயன், பூதன்வயல்

பாதி முகம் கவசம் இட்டு
பார்வை அற்ற விழிகளுடன்
ஜாதி முல்லை தோள் சுமந்து
பாதை செல்ல பயணம் எங்கே
கோலமகள் கடை இடையில்
கொண்ட துயர் சுமைகள் எல்லாம்
காலை வரும்போது கதிரொளியில்
கரைத்து விடும் பனி துளியாய்

முல்லையூர் சதாமதி

நீளும் நினைவுகளையும்
நிலவுப் பொழுதுகளையும்
நின்மனதில் புதைத்து
பசிமறந்து உரிமை இழந்து
கால் போன போக்கில்
திசை தெரியாக் காட்டில்
கரையேறிய பிணங்களாய்
வேறு கரை தேடி...........!

கி.சர்மிஜா
கல்வயல்
சாவகச்சேரி

வெண்ணிலவை தூக்கிச் செல்லும் வானம் போல...
உன் வலி மறந்து தூக்கிச் சென்றாயே நானும் வாழ...
விழி மூடி நான் தூங்க _ உன்..
விழி திறந்து காப்பாயே என் தூக்கம் கலையாம...
கொரோனா எனும் அரக்கி உயிரை குடிக்கும்...
ஆபத்தான நேரத்திலும் என் எதிர்காலத்துக்காய்...
உயிரைக் கொடுத்து உழைத்தாய் சமூகத்தில் நான் உயர...

எம்.சங்கர்

வறுமையின் கொடுமை அது
வளர் பிறையாய் இருக்கையிலே
குழந்தையைப் பெற்று அதன்
கால் வயிற்றை நிரப்பிடவே
தோள்களிலே சுமந்து கூலி
வேலைக்குப் புறப்படும்
பெற்றோரைக் காண்கையிலே மனம்
பித்தாகிப் போகிறதே!

து.சோபினி
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



நெஞ்சில் வலிகளின் சுமை
தோளில் தன் பிள்ளையின் சுமை –இது
ஓர் இடப்பெயர்வோ?
தாயின் இடுப்பினில் சேயின் சுமை
தலைமேலோ பொதுள்களின் சுமை
இவை ஏதும் அறியாமல்
சிறுவனின் கால் நடைப்பயணம் – தந்தை
முகத்தை மூடுவதைப் பார்த்தால் – இது
ஒரு கொரோனா இடப்பெயர்வோ?

றெ.றக் ஷனா,
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

முடக்கியது நாட்டை கொரோனா
அடங்கியது எங்கள் வாழ்க்கை
முடங்க முடியாது நாம்
முடங்கினால் நம் வாழ்வே முடங்கிவிடும்
இப் பிஞ்சுகளின் பசியைப் போக்க
நாம் நடந்தே ஆக வேண்டும்
கால்களும் தோள்களுமே துணை
இடப்பெயர்வு தந்த பாடம்
நாம் இன்னும் மறக்கவில்லை

சி.சிவடனுஷகன்
சுண்டுக்குளி

## மௌன மொழி 21

**கவிதைக்கு பரிசு 1000/-**

உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:
**14.11.2020**

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

வெடியோசைக்கு வெருண்டோடிய
வெம்மை அடங்கு முன்பே
இடியாக இன்று அலைய வைக்கின்றது
அற்ப வைரஸ்
யார்க்கெடுத்துரைத்து யார் நொந்து
என்ன பயன்?....
ஆண்ட நின் அருள் இல்லையேல்
என்றும் அகதிகள் தான் நாமெல்லாம்.

ஆர்.கே.மேனன்
ஆசிரியர்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

தந்தையின் தோளில் ஏறி நின்று
திருவிழா பார்த்து மகிழ்ந்த காலம் போனதே –இன்றோ
தந்தையின் தோளிலிருந்து வலியோடும்
சுமையோடும் பயணிக்கிறோம்
எங்கே போவது என்று தெரியாமல்
கொரோனாவின் கொடுமைக்கு
இடப்பெயர்வு தீர்வாகுமோ
இறைவா வழி சொல்லிடுவீர் எம் வலி நீங்க

செ. றெஜினா, சுழிபுரம்



# வித்துவான் பதில்கள்!



நீங்களும் கேள்விகள் கேட்கலாம்...
எழுதி அனுப்புங்கள்
வித்துவான் பதில்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com

**கொரோனா எப்போது நீங்கும்?**
பொன்நிலவன், வாரிவளவு

உலகிலுள்ள ஆறுகள், குளங்கள் எல்லாவற்றிலும் எப்போது மந்திர நீர் கலக்கப்படுகிறதோ அப்போது நீங்கும்.

**பல வீடுகளில் நாய் கடிக்கும் கவனம் என்று 'போட்' போட்டிருக்கிறார்களே. உண்மையாகவே எல்லா வீடுகளிலும் நாய் இருக்குமோ?**
பவித்திரா, சுண்டுக்குளி.

உண்மையாக இருக்கும். சில வீடுகளில் இரண்டு கால் நாய்கள்.

**வித்துவானே ஆலயத்தில் உள்ள நிலை கருங்கல்லினால் ஆனது. நாம் துணி துவைக்கும் கல்லும் கருங்கல்லினால் ஆனது. ஏன் நாம் துணி துவைக்கும் கல்லை வணங்குவதில்லை?**
த.இலட்சுமிகாந்தன் மீசாலை.

இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.
இருக்கும் இடத்தில் தான் ஆராதனை நடக்கும். அடியும் விழும்.



**குற்றம் புரிபவர்கள் யாராக இருந்தாலும் பெரும்பாலும் குற்றத்தின் பின் பெண்கள் புத்திசாலித்தனமாகத் தப்பிக் கொள்கிறார்கள். ஆண்கள் முட்டாள்தனமாக மாட்டிக் கொள்கிறார்கள்?**
மதுகரன், கோண்டாவில்.

எமது நாட்டின் ஓரங்குல நிலத்தைக் கூட வெளிநாடுகளுக்கு விற்கமாட்டோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் கடலில் உருவாக்கப்பட்ட செயற்கை நிலப்பகுதிகளை விற்காமல் 99 வருடக் குத்தகைக்கு கொடுத்தபோது நீங்கள் புரிந்துகொள்ளவில்லையா?



**ஐயா, வித்து...**
**ஏன் ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள் தினம் கொண்டாடுகின்றனர்?**
ந.வேணுப்பிரியன், குடமியன் வரணி.

மேலைத்தேயத்தில் ஏப்ரல் 1 இல் இருந்த வருடப்பிறப்பை ஜனவரி 1ஆக 13ஆம் கிரகோரி என்ற போப் ஆண்டவர் மாற்றினார். இதனை பல நாடுகள் ஏற்காமல் ஏப்ரல் 1 ஆம் திகதியையே வருடப் பிறப்பாகக் கொண்டாடினர். ஏற்காதவரைக் கேலி செய்வதற்காகவே ஏப்ரல் 1 முட்டாள்கள் தினம் எனப்பட்டதாக ஒரு தகவல் உள்ளது.

# ஆரோக்கியம் தரும் குட்டித் தூக்கம்



குட்டித் தூக்கம் என்றால் 15 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை பகல் நேரத்தில் தூங்குவதே. இதைத் தொடர்ந்து பின்பற்றி வந்தால், இதய அடைப்பு நோயை முற்றிலும் தவிர்க்கலாம். பகல் தூக்கம் சோம்பலின் அறிகுறியல்ல. ஆரோக்கியத்தைப் புதுப்பித்துத் தரும் அருமருந்து.
பகலில் சிறுதுயில் மேற்கொண்ட எடிசன், ஜஸ்டின், சர்ச்சில், ரீகன், பில்கிளின்டன் போன்றவர்கள் பிரச்சினைகளை எளிதில் சமாளித்தார்கள். பிரிட்டன் பிரதமரான சர்ச்சில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது, தினமும் பகலில் அமைச்சரவைக் கூட்டம் நடத்தினார்கள். கூட்டம் ஆரம்பமாவதற்கு அரை மணி முன்பாக தினமும் 30 நிமிடங்கள் நாற்காலியில் சாய்ந்தபடியே தூங்கும் பழக்கத்தையும் பின்பற்றினார். இவர் நேரத்தையும், கடமையையும் பொன்னாகப் போற்றியவர். எனவே, உங்கள் வேலையின் சூழ்நிலைக்கு ஏற்ப 15 நிமிடங்களாவது பகலில் தூங்க முயற்சி செய்வது நல்லது.

# மணிக்கதை

## தேர்தல் களம்





மௌனா

ஊரில் பெரும் புள்ளியான வேட்பாளர் ஒருவர் வாக்குக் கெஞ்சலுக்காக ஊரின் சேரிப்புறத்தில் காலடி பதித்தார். கூப்பிய கரங்கள் குவிந்த நிலையில் பிரியாதிருக்க, எதிர்ப்பட்ட எல்லாரிடமும் புன்முறுவல் மிளிர வாக்கு யாசகம் கேட்டுக்கொண்டு நடந்தார்.
சற்றுத் தொலைவில் ஒரு பிச்சைக்காரன் நீட்டிய கரங்களுடன் காண்போரிடமெல்லாம் "தர்மம் தாங்கோ" என்று யாசித்துக் கொண்டே வந்தான்.
பிச்சைக்காரனாயினும் அவனும் ஒரு வாக்காளர் அல்லவா?
பணக்கார வேட்பாளரும் பிச்சைக்கார வாக்காளனும் எதிரெதிரே சந்திக்க நேர்ந்த அந்தக் கணத்தில் கூப்பிய கரங்களும் நீட்டிய கரங்களும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன.
இருவர் கரங்களும் யாசிக்கும் பணியில் இருந்தாலும்......
பிச்சைக்காரனின் கரங்கள் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டன....
"ஏய்த்துப் பிழைக்கும் இந்த அரசியல்வாதிக்கு கரங்களாக இருப்பதை விட ஏந்திப் பிழைக்கும் இந்தப் பிச்சைக்காரனுக்கு கரங்களாக இருப்பது எவ்வளவோ மேல்....!"

# வல்லாரை சூப்




**தேவையான பொருள்கள் :**
வல்லாரைக் கீரை: 20 கிராம்
கிராம்பு: 4
கொத்தமல்லி தழை: 50 கிராம்
வெண்டைக்காய்: 3 ஸ்பூன் வில்லைகளாக வெட்டியது
பிரிஞ்சி இலை: 3
மிளகு தூள்: 2 ஸ்பூன்
வெங்காயம் நறுக்கியது: 2 ஸ்பூன்
வெண்ணெய்: 10 கிராம்
சூரியகாந்தி எண்ணெய்: 10 கிராம்
உப்பு: தேவைக்கு

**செய்முறை :** அடுப்பிலேற்றி சூடான வாணலியில் வெண்ணெய்யைப் போட்டு, கிராம்பு, பிரிஞ்சி இலை, 1 ஸ்பூன், மிளகு தூள் என்பவற்றைப் போட்டு பொரியவிட்டு நறுக்கிய வெங்காயத்தை பொன்னிறமாக வதக்கியவுடன், சூப்புக்குத் தேவையான நீரைவிட்டு, ஆய்ந்து அரைத்து வைத்துள்ள வல்லாரை கீரையையும், கொத்தமல்லிதழையையும் போட்டு கொதிக்கவிடவும். முதல் கொதி வந்தவுடன் தனியாக எண்ணெய்யில் பொரித்தெடுத்த வெண்டைக்காயைப் போட்டு மீண்டும், சிறுதணலில் 1/2 மணிநேரம் கொதிக்கவிட்டு தேவையான உப்பு போட்டு, மிளகு பொடி தூவி சூடாக பரிமாறவும். மாறுபட்ட சுவையுடன் உள்ள இந்தச் சூப், நினைவாற்றல் சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

சஞ்சீவி
08 நவம்பர் 2020

சிறுகதை



# சிந்திக்கிறேன் சிலரை!

சி.சிவாணி

மௌனமாக இரவு தன் நிம்மதியற்ற கசப்புக் கதிர்களை விமர்சித்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களுக்குக் கொடுத்துவிட்டு நகர்ந்து கொண்டிருந்தது . யன்னல் கம்பிகளின் கறள் பிடித்த தேகத்தில் ஒட்டிக் கொண்டிருந்த மழைச் சிதறல்கள் முத்துக் குமிழ்களாய் மின்னிக் கொண்டிருப்பது நிலவின் பஞ்சமில்லாத கதிர்க் கற்றைகளில் தெளிவுபட்டுக்கொண்டிருந்தது . போர்வையை இழுத்து மூடுவதும் அது விலகிச்செல்ல என்னைச் சுருட்டிக் கொள்வதுமாய் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தேன் . வழமைக்கு மாறாகப் பெய்த மழையின் வேகத்தால், வாலைச் சுருட்டிக் கொண்டிருந்த நாய் சூடு தேடித் தன்னையே சுற்றிக்கொண்டிருந்தது. நிறைந்திருந்த குளத்தில் இருந்து வந்து கொண்டிருந்த பேத்தைகளின் சத்தம் என் மன ஓட்டத்தை மாற்றிக் கொண்டிருக்க நித்திரை வருவதாக இல்லை எவ்வளவோ முயற்சிகள் செய்தாயிற்று . ' ஙொய்' என்ற கோரசுடன் கூட்டமாக வந்து குத்தி விட்டுப் போகும் நுளம்புகளின் மீது ஆத்திரம் பொத்துக் கொண்டு வரும் . அவற்றை அடிக்க கைகளை ஓங்கினால் பக்கத்தில் எரிந்து கொண்டிருக்கும் ஒற்றைத் தீபம் அணைந்து போய் விடும் . தீப்பெட்டிக்காக அம்மாவை எழுப்பினால் நன்றாக வாங்கிக்கட்ட நேரிடும்.

நாலைந்து நாள்களாக மூளை அமைதியடைவதாக இல்லை . தூக்கம் வருவ



தற்கு சங்கடப்பட்ட பொழுதுகளில் மனம் திசை தெரியாமல் உயரே கிளம்ப ஆரம்பித்துவிடும் . சிந்தனை வயப்பட்ட மனதை அடக்குவது சிக்கலானதாக இருக்கும் . சிந்தனை என்பது எவ்வளவு சிக்கலானது . சிந்திக்க முடிந்த வயதுதான் , ஆனால் இந்தச் சிந்தனைகள் என்னை எங்கெல்லாமோ இழுத்துக் கொண்டுபோய் விடுகின்றன.

ஆரவாரங்களின் மத்தியில் என் தனித்த சிந்தனை மற்றவரை எரிச்சல்படுத்தலாம் . சில வேளைகளில் என் மீதே எனக்குக் கோபமாக இருக்கும் . சகல ஜீவாத்மாக்களிலிருந்தும் மனிதனைப் பிரித்துக் காட்டுகின்ற சிந்தனையை எல்லோரும் சுவையாக அநுபவித்ததில்லைத்தான். ஆனால் எனக்குள் ஏதோ ஒரு மகிழ்ச்சி: உலகத்தை மனதுக்குள் பார்த்துப் பரவசப்படக் கூடிய ஆற்றல்: மனிதரை எடைபோடக்கூடிய முயற்சி: எல்லோர் மீதும் தனித்துவமாகப் பாசம் வைக்கக்கூடிய புனிதம் : கறுப்புப் புள்ளிகளாய் தெரியும் வடுக்கள் : வர்ணங்களாய் தெரியும் மகிழ்ச்சிகள். ஒட்டை போட்டுக் கொண்டு ஒளிந்திருந்து பார்ப்பது போல எனக்கு மட்டும் தெரியக்கூடிய அந்த அபரிமிதமான அழகு: உண்மையில் சிந்தனை என் தேகத்தை சிலிர்க்க வைக்கிறது .

' படார் ' என்னையுமறியாமல் நுளம்பிடம் ஏற்பட்ட கோபம் . ஒற்றைத் தீபம் அணைந்துவிட்டது . இருள் கவிந்து பயமுறுத்தியது . போர்வையால் முகத்தையும் சேர்த்து மூடிக்கொண்டேன். என் தனிமைத் திரையில் எத்தனையோ முகங்கள் வருவதும் போவதுமாய் இருந்தன. ஒவ்வொன்றும் மேடையேறிய நாடகப் பாத்திரங்களாய் முகங்கள் மாறிக்கொண்டிருந்தன. நினைத்துப் பார்க்கின்றேன்.

இறைவன் படைத்த இத்தனை உயிர்களுக்குள்ளும் எத்தனை எத்தனையோ வேதனைகள். கண்மூடித் தியானிக்கும் கண நேரத்திற்குள்ளும் ஒருவித நிம்மதியுமில்லாமல் அவஸ்தைப் படுகின்ற உடல்கள்.

"இஞ்ச பாருங்கோ எங்கட குடும்பம் நல்ல நிலைமைக்கு வரவேணுமெண்டா நீங்கள் முதல் உந்தக் குடியை விடோணும் . கசிப்புக் கசிப்பு எண்டு இண்டவரைக்கும் எத்தினை லட்சத்தை துலைச்சிருப்பியள். பிள்ளையளும் நாளைக்கு உங்கட பரம்பரைக் குணத்தைத்தான் காட்டப் போகுதுகள்.

"வரலட்சுமி அக்கா தன் புருசனோடு கத்துகிறாள் . இந்தச்சாம நேரத்தில் அவள் குரல் மிகவும் துல்லியமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. கதிரேசுவிடமிருந்து எந்தப் பதிலுமில்லை . அவன் குடிவெறியில் திக்குத்திசை தெரியாமல் அடங்கிய பின்னர்தான் அக்கா தன் ஆசைகளை வெளிக்காட்டுகிறாள்.

"என்ர சகோதரங்கள் எத்தின நாளைக் கெண்டு பனிக்கையும் குளிருக்கையுமாகக் கிடந்து உழைச்சு அனுப்பிறது ? கசிப்புக் குடிச்சுக் காலம் கடத்துவியள் எண்டு தெரிஞ்சிருந்தா கழுத்தை நீட்டியிருப்பனே . என்ர போதாத காலம் ..... கலியாணம் கண்டறியாத இழவு ....."

தன் வேதனைகளை வெளிக்காட்டுவதற்கு அவளுக்கும் சில வார்த்தைகள் தேவைப்பட்டதில் நியாயம் இருக்கிறது. கடுமையான வேதனை. கண்ணீர் விட்டழுது இதுவரை எதுவும் சாதிக்க முடியாத நிலை. கத்திக்கொண்டே காலம் கடத்துகிறாள்.

வரலட்சுமி அக்காவின் நிலையை வாசுகிக்குச் சொன்ன போது , அவள் அதை வேறு விதமாக யோசித்தாள் .

"உமக்கென்ன தெரியும் ? குடியோ வெறியோ யாரெண்டாலும் ஒருத்தர் சீதனமில்லாமல் வந்து வாழ்க்கை குடுத்தா காணாதே! பார் முப்பத்தஞ்சு வயசில பூமிக்கு பாரமா நான் இருக்கிறது ... ஐயா சொல்லிப் போட்டார் . ஐஞ்சு சதக்காசும் தன்னட்ட இல்லையாம். வாறவன் என்னை வடிவாவச்சுப் பாத்தாச் சரியாம் . இது பதினைஞ்சு வருஐயா பாடுற புராணந்தான் . உந்தப்புராணம் முடியிற மாதிரிப்படேல்ல"

வாசுகிக்கு யார் வாழ்வு கொடுக்க முடியும் ? அதுவும் சீதனமில்லாமல் இந்தக் காலத்தில் ....

" இரண்டாந்தாரமெண்டாலும் பரவாயில்லை வாசு . ஐயான்ர நச்சரிப்புக்கை இருந்து விலகோணும் " என்று வாசுகி என்னிடம் கூறினாள்.

என்னால் முடியாதே . முதல் தாரம் செய்வதற்கே அவளுக்கு என்னிலும் பத்து வயது அதிகம் . முடிந்தகாரியமாகத் தோன்றவில்லை. சிந்தனைத் திரையில் நம்பி வந்து நின்றான்.

"நான் பாக்கேல்லையே ... மச்சான் . அப்பிடி நீயும் பாரன்" என்று சொல்லி ஒரு பொல்லாத சிரிப்பு . என்சிந்தனை ஓட்டம் அலைவிடத் தொடங்கியது . காவேரி உண்மையில் பாவப்பட்ட ஜென்மம் .

தன்னால் முடிந்த அளவு நம்பியிடம் கேட்டுவிட்டாள் . பெண்ணின் வாழ்வினைப் பாதித்த மனிதாபிமானமில்லாத ஒரு மனிதமாக நம்பி வாழ்ந்துகொண்டிருப்பது எனக்கு ஜீரணிக்க முடியாதிருந்தது .

" என்னிலும் பார்க்க ஐஞ்சு வயசு கூட . இதைவச்சு என்ன செய்யிறது ? வயசுக்கோளாறு அப்ப தெரியேல்ல . நானும் கதைச்சனான்தான் . இப்ப தெளிவாயிருக்கிறன் "

எவ்வளவு பெரிய முட்டாள்த்தனமான விடை ? முதுகெலும்பில்லாதவன் கதைப்பது போல நம்பி கதைக்கிறான் . பாதிக்கப்பட்டவள் பெண் என்பதால் வேதனை மறைக்கப்பட்டிருக்கிறது . நம்பியின் மீது தட்டுத்தடுமாறிய கோபாவேசம் எனக்கு அதிகமாகவே ஏற்பட்டதெனலாம் . ஆனாலும் நான் என்ன செய்ய முடியும் ? ' விதி ' என்ற ஒன்றின் வேஷங்களுக்கும் இடங் கொடுத்துத்தானே ஆகவேண்டும்? விலத்திக் கொண்டேன் . அவஸ்தைப் பட்டுக்கொண்டே இருந்தால் உள்ளம் வெளியே தெரியாமல் உடைந்து போய்விடும் . உடைந்து போனபின் பலனில்லை . அதன் பின் உண்மை உடைந்த துண்டங்களாக உருவமில்லாம போய்விடும்.

உண்மைத்துயரத்தின் உருவமாக என் மனவாசலில் சாகித்யன் வந்துநின்றான். விடுமுறைக்காக வன்னிக்குப் போனவன் கப்பலுக்கு காத்திருப்பதாக கடிதம் வரைந்திருந்தான். அவனது முத்து முத்தான கையெழுத்தில் அப்பிக்கிடந்த சோகங்கள். " வாசு ... வன்னியில் வாழமுடியாதெடா . சின்னப்புக்கு சரியான வருத்தம். இழுப்புத்தான்.... மாமி தன்னால ஏலுமட்டும் பாக்கிறா .. அவவுக்கே தன்ர பிள்ளைகளுக்குச் சாப்பாடு போடேலாத நிலைமை . என்ன செய்யிறது ? நானும் தண்டச் சோறுதானே ... அம்மா இப்பவும் அதே நிலைமைதான் . தண்ணிச் சாப்பாடுதான் ... அண்ணன் கதையை எடுத்தா எழும்பியிருந்து கத்துவா... வாசு ! பிள்ளைப்பாசம் இந்தளவுக்கு இருக்குமெண்டு நான் நினைக்கேல்ல.... அம்மாவை குணப்படுத்திற தெண்டா கொழும்புக்குத்தான போகோணும் .... தம்பி படிக்காம சும்மா திரியுது ... இவை எல்லாரையும் மாமிதான் கொண்டிழுக்கிறா... இரவு பகலா தையல் மிசின் அடிச்சு... அதுக்கும் வயித்தில கட்டியாம் .. .

" சாகித்யனின் கடிதம் நீண்டு கொண்டே போனது . பக்கம் பக்கமாக எழுதியிருந்தான் . ஒவ்வொரு வரியிலும் ஒவ்வொரு பிரச்சினைகள். உற்ற நண்பன் என்பதால் ஒன்றுவிடாமல் தன் மனவேதனைகளைக் கொட்டியிருந்தான் . அவனது கடிதம் வாசித்து மூளை என்னவோ செய்தது. அடிவயிற்றில் பிசைவு எழுந்தது. சாப்பாடு கற்துண்டங்களாக ... வயிறு கனத்தது . ஆனால் குணத்தை சாகித்யனோடு ஒப்பிட்டால்....

குணம் ஒரு வித்தியாசமான பாத்திரம் . சட்டைப்பை நிறைய கற்றைகள் வைத்திருந்தான்.

"இண்டைக்கு மினி சினிமாவில் என்ன படமாம்?

"குணத்தைப் பார்க்க எனக்கு விசித்திரமாக இருக்கும் . எப்படி இவனால் வாழ முடிகிறது இவ்வளவு சந்தோசமாக? லண்டனில் இருக்கும் தமையன் அனுப்புகிற பணம் அவனுக்குத் தீனி போட்டுக் கொண்டிருந்தது . எப்போதும் சினிமா மோகத்தில் தவழ்ந்து கொண்டிருப்பான். படக்கசற்றுக்களை அடுக்கி வைத்துக்குக் கொண்டு விமர்சனம் சொல்லிக் கொண்டிருப்பான்.

"குணம் லதா அடிக்கடி எங்கட ரூமுக்கு வாறது எனக்குப் பிடிக் கேல்ல "

" அப்ப நீ ரூமை மாத்து" வசந்தனுக்கும் குணத்திற்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்பு சாகித்யனால் சமாதானப்பட்டது.

வாசு இது ? உனக்கும் " என்ன தெரியும் தானே. இரண்டு வருசத்துக்கு மேல ரவியோட திரிஞ்ச லதா இப்ப அவனைப் பிடிக்கேல்ல எண்டு இவனைப் பிடிச்சிருக்கிறாள் ..... எல்லாருக்கும் தெரியும் , கம்பசில பப்ளிக்கா எல்லா இடமும் ஒண்டாத் திரிஞ்சவ . இப்ப லவ் முறிஞ்சு போட்டுது ... குணந்தான் ஒரு துண்டை தன்னோட ஒட்டியிருக்கிறான். எனக்கு வாற விசருக்கு லதாவைக் கல்லெறிஞ்சு கொல்லோணும் போல..... துரோகி ... இவனுக்கு அவள் ரம்பா மாதிரி தெரியுது . லவ் தெரியேல்ல . வாசு டேய் நான் கதைக்கிறான் ... நீ .."


உதயன் பத்திரிகை வார சஞ்சிகையில் ஆடையாய் ஆண்களை மாற்றும் பெண்கள் பற்றி ' வித்துவான் பதில் ' நகைப்பை அள்ளிவீச பத்திரிகையை அவனிடம் கொடுத்து விட்டு எழுந்து

# சிந்திக்கிறேன்...

(தொடர்ச்சி)

போய்விட்டேன் . இதற்கெல்லாம் லாம் என்ன பதில் சொல்ல முடியும்? காதல் முறிந்ததும் இன்னொரு காதல் தேடும் லதாவோடு வித்யாவை ஒப்பிடுகின்றேன். எத்தனை விதமான மனிதர்கள்? எத்தனை விதமான கருக் கள்?. பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த காலத்திலிருந்தே வித்யாவை எனக்கு நன்றாகத் தெரியும் . அவள் எனக்கு ஒரு நல்ல சகோதரியாக நடந்து கொண்ட விதம் என்னைக் கவர்ந்தது. பார்த்தவர்களை உடனே கவர்ந்து விடும் அழகு அவளிடம் இல்லாவிட்டாலும் கலையழகும் கல்வியழகும் அவளிடம் அதிகமாக இருந்தன. அவளுக்கு கவர்ச்சியூட்டிக் கொண்டிருந்தன. கொஞ்சநாள்களாக அவள் மனம் மாசுபட்டிருப்பது அப்பழுக்கில்லாத அவளது முகத்தோற்றத்தின் மாற்றத்தில் தெரிந்தது.

" வாசு ! நிரஞ்சன் இப்படிச் செய்யும் எண்டு நான் எதிர்பாக்கேல்ல... என்ன.... செய்யிறது? நாங்க நினைக்கிற மாதிரி எல்லோரும் நினைக்க முடியாது தானே ? 'லவ் பண்ற மாதிரித்தான் நடந்தான் . ஒவ்வொரு செயலும் அப்பிடித்தான் இருந்தது ... பொறுமையா இருந்தன் . இதுவரைக்கும் பலனில்ல ... வெட்கத்தைவிட்டு நான் கேட்டபிறகு



இது லவ் இல்லையாம்.. வெறும் நட்புத்தானாம் . சீதனப்பிரச்சனை இடங்குடுக்காதாம் .. பெத்தவ ஐம்பது லட்சம் எதிர்பார்ப்பினமாம்... ஆனா நான் சொல்லிட்டன். வாசு மனசு ஒருத்தனுக்குத் தான்.... காத்திருப்பன் எண்டு"

"வித்யா நீ இப்படிப்பட்டவளா? உன் இருதயத்திற்குள் தீபமேற்றி விழுந்து கும்பிடவேண்டும் போல ..... "

மனசு தன்னையுமறியாமல் அரற்றத் தொடங்கியது.

' நிரஞ்சா இனி அரக்க இனம் . வித்யா உனக்கு பொக்கிசம் இல்லையா? அவள் பூ இல்லையா? தாமரை இதழ்களில் விழுந்த தண்ணீர் போல எவ்வளவு நாசுக்காகப் பதில் சொல்லிவிட்டாய் 'சட்டைக் கொலரைப் பிடித்து நான்கு வார்த்தைகள் நாக்கைப் பிடுங்கிற மாதிரிக் கேட்டுவிட வேண்டும்... மனது நினைத்தாலும் வித்யாவுக்காக பொறுத்தாக வேண்டும் . எனினும் அவனைக் கண்டு கேட்டே விட்டேன் .

" வாசு எங்கட அம்மா , அப்பா எதிர்பாக்கிற சீதனம் இவேற்ற இல்லை... நான் வித்யாவை விரும்பேல்ல . ஆனா கதைச்சனான் .. வசதிப் பட்டா செய்வமெண்டு யோசிச்சதுதான் ... காதில ஒரு நகை கூட இல்ல . அம்மா கேக்கிற இருபது பவுண் எங்களடுப்பினம்? சரி வராது வாசு. அது தான் இப்ப கதைக்காம விட்டுட்டன். வித்யா குழம்பிப் போட்டுது.

'கண்ணியவான் என்று காத்திருக்கும் இவன் கயவன் என்று சொல்லி வித்யாவிடம் கத்த வேண்டும் போல இருந்தது . ஆனால் காதல்தான் எண்டு காத்திருப்பவள் இதனை நம்புவாளா? நிச்சயமாக இல்லை.

சீதனம் இன்றைய யாழ்ப்பாணத்துப் பெண்களை எப்படியெல்லாம் பாதித்துக் கொண்டிருக்கிறது? வித்யாவுக்காக வருந்துகிற நான் நாளை அக்காவுக்கு என்ன கொடுக்கப் போகிறேன் ? கம்பஸ் முடிய இன்னும் இரண்டு வருடம் இருக்கிறது . அதற்குப் பின் காத்திருப்பு வேலை .... லட்சங்கள் சேகரித்து அக்காவின் கல்யாணம் ..... மூளை கரைந்து முதுகெலும்பால் வழிவது போல இருந்தது. அக்காவும் என்ன செய்வாள்? படித்து முடித்து பாலர் பாடசாலை ஒன்றில் வேலை செய்கிறாள் . அப்பாவின் சம்பளத்தில் வரும் பற்றாக்குறைக்கு இவளுடைய சம்பளம் தான் பரிகாரம் . சேமிப்பு பூச்சியமாக இருக்கிறது. பூமணிப் பாட்டியின் சுகவீனமும் அவளுக்கு பெரும்பாடாக வந்துவிட்டது. "எப்ப சீவன் போகுமாம்? "பேச்சில்லாம கிடக்கிற படியா சொல்லேலாது . சிலருக்கு கொஞ்ச நாளும் செல்லும் " " சிலவளிக்கிறது யாராம் ஒருத்தருமில்லாத மனிசியல்லே?

" எங்களது தூரத்து உறவுப்பாட்டியின் சாவை எதிர்பார்த்து நாலைந்து பேர் குழுமியிருந்தார்கள் . ஆளுக்கொரு கதை அருவருப்புத்தந்தது. மௌனித்துப் போய் இருக்கிற பாட்டியைவிட இவர்களுக்குத் தான் சாகிற வேளையில் வேதனை அருவருப்பாக இருக்கிறது . மூன்றடிக்குத் தள்ளி மூச்சை இழுத்து விட்டுக் கொண்டார்கள். எரிச்சலாக வந்தது. எண்பத்தாறு வயதாகும் பூமணிப் பாட்டியின் மூளை வலுவிழந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது. கடந்த ஒரு வாரமாக கடுமையாகக் கிடக்கிறாள் . பேச்சு அடங்கி ஒரு கிழமைக்கு மேல் ஆகிறது.

"கல்யாண வீட்டை போக வேணும் எனக்கு சீலை எடுத்துத் தந்திடு ..."

கதைக்கிற போது காதில் வாங்கிக் கொண்ட செய்தி. ரத்த உறவு நெருக்கமில்லாவிட்டாலும் பூமணிப் பாட்டியைப் பார்க்க இதயத்தில் ஒரு வலிப்பு எனக்குள்ளே உருவானது. அக்கா எப்படிச் சமாளித்துக் கொள்கிறாளோ தெரியவில்லை . மலம் சலமெல்லாம் கழுவி எப்போதும் துப்புரவாக வைத்துக் கொள்வாள். காலையில் அக்கா அழுத சத்தம் என் படிப்பைக் குலைத்தது . விம்மி விம்மி அழுதாள் .

' உதுக்கு தேவையில்லாத வேலை .. சாகிற மனிசிதானே ? உந்த அரியண்டங்கள் இவ சமாளிப்பாவாக்கும்' அம்மா தூரத்தில் நின்று எட்டிப் பார்த்துக் கத்திக்கொண்டிருந்தாள். அம்மம்மா அக்காவுக்கு உதவியாக ஏதோ செய்து கொண்டிருந்தாள். துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

"தம்பி பாட்டிக்குப் படுக்கைப்புண் வந்திட்டுது . ஊனம் ஊனமா வடியுது ..

அம்மம்மா சொன்னபோது நானும் ஓர் அடி தள்ளி நின்று கொண்டேன். ஆனால் அக்கா அழுது அழுது துடைத்துக் கொண்டிருந்தாள் . பாட்டியை துப்பரவாக்கி கட்டில் எல்லாம் கழுவி புதிதாகத் துணிவிரித்து அந்த இடத்தில் தெய்வீகக் களை வருகிற மாதிரி சாம்பிராணி போட்டாள். ஆனந்தக் கண்ணீர் வந்தது . தள்ளி நின்று வேடிக்கை பார்க்கும் மனதாபிமானத்தையும், அக்காவின் மனத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். மூளை வலித்தது.

நல்ல வசதியாக வாழ்ந்த பூமணிப் பாட்டி ஒரே மகனும் செத்துப் போய் விட , பேரப்பிள்ளைகளும் வெளிநாடு போய்விட நன்றாக கஷ்டப்பட்டு விட்டாள். அப்போது நாங்களும் இடம்பெயர்ந்து போனநேரம். அவளை கைதடியில் யாரோ கொண்டுபோய் விட்டதாகத் தகவல் கிடைத்தது . இப்போது வன்னியில் இருந்துவந்து கைதடியில் இருந்து பூமணிப் பாட்டியை கொண்டுவந்து சேர்த்தாயிற்று . மனம் குழம்பியிருந்த பாட்டி இப்போது படுக்கையாகிக் கிடக்கிறாள். ராசுக்குட்டியும் செல்லப்பிள்ளையும் ஒருக்கா வந்து பாக்க மாட்டுதுகளாமே?"

பூமணிப் பாட்டி நல்ல நினைவோடு இருக்கும் போது அடிக்கடி கேட்பாள். அவளின் தங்கை தன் நான்கு பிள்ளைகளையும் இவளிடம் ஒப்படைத்து விட்டு செத்துப்போய் விட, அவர்களைத் தன் பிள்ளைகள் போல வளர்த்து ஆளாக்கிவிட, இப்போது பெற்றதாய் போல வளர்த்தவளை வந்து வந்து பார்க்காத மனித ஜென்மங்களை நினைக்கின்றேன்.

உயிரின் கட்டுக்கள் அவிழ்ந்து கொள்கின்றன.

"உதுகள் செத்த வீட்டுக்கு வந்து அந்தப் பிரேதத்தில் முழிச்சு என்ன பிரியோசனம்? ஆசைப் பட்ட நேரம் பாக்காமல் .. இனி மனிசிக்குத் தெரியப் போகுதே?

"கூடியிருந்தவர்களின் பேச்சுக்களும் கதையளப்புக்களும் மனதுக்குப் பிடிக்காமல் நகர்ந்து விட்டேன், தூரத்தில் எங்கோ கோழி கூவிக்கொண்டிருந்தது. இரண்டு நாள்கள் தொடர்ந்து பெய்த மழையில் நனைந்த அதன் தேகத்தின் நடுக்கம் குரலில் தெரிந்தது . காலையில் கடினமான கணக்கு ஒன்றுக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். படிப்பு கனத்தது. இனி எழுந்து படித்தால் தான் நாளைய வகுப்புக்களை சமாளிக்க முடியும் . ( யாவும் கற்பனை )

*(13.03.1999-மீள்பிரசுரம்)*



# தேடல்.....

நட்சத்திரக் கண்ணீர்ச் சிதறல்களில்
நனைந்து நெகிழ்ந்து பூத்திருக்கும்
மேகத் தவிப்பின் மெல் நாணமேலீட்டால்
மேகத்தை இழுத்து போர்த்தியும்
மேகன மேனி திரை தாண்டி தரை தொடும்
வானத்தின் வதன வனப்புக்களிடையே
ஓயாது ஓடி ஓடி காலகாலமாய் -எதை
தேடிக் கொண்டிருக்கின்றது நிலவு

காவி உடையில் பிரம்மச்சரியப் பேச்சு
தனித்திருக்கையில் குமரிகள் கூட்டு
வெளி உலகிற்கு வெள்ளுடை வேந்தர்
இருட்டுக்குள் நிர்வாணக் கூத்தர்;
மாதர் எதிரில் செந்தமிழ் மறவர்
மனதினுள்ளே துகிலுரிந்து மனப்படுக்கையில்
மானபங்கப்படுத்தி களிகொள்ளும்
அரிதார மனிதர்கள் மத்தியில்
துளியாவது மனிதம் துடிக்கிதா என்ற தேடலோ..

ஓலைக் குடில் கூட இல்லாமல்
ஓரமாய் வயிறும் வாழ்வும் ஒட்டி உறங்கும்
ஏழை மனிதர்கள் வாழும் ஊரில்
கால்பட்ட இடமெல்லாம் கல்லுக்கு மாடம் கட்டி
கற்சிலைகளை சிறைவைத்திருக்கும்
கல்லுக் காடுகளிடையே கடவுளை தேடுகிறதோ..

பால்மணம் மாறா பட்டாம் பூச்சிகள்
பாடப் புத்தகத்து பட்ட(ப்) படிப்பெல்லாம்
புகுத்திவிடும் மேதாவித்தனத்தின் காலிடுக்கில்
நசுங்கிக் கிடக்கும் பிஞ்சு இதயங்களும்
தொழில்நுட்ப எந்திரக் குஞ்சுகளிடையில்
தொலைந்துபோன கொஞ்சும் மழலைச்
சிரிப்பும் சித்தெறும்புக் குறும்பும்
சிறிதாவது சிந்திடாதோ என்ற ஏக்கத் தேடலோ...

கண்ணே முத்தே கனியமுதே
கண்ணுக்குள் கண்ணானவளே -என்று
கெஞ்சி வஞ்சி மடிசாய்ந்து
தலை கோதிய தலைவன் தனம் தேடி
தொலைதூரத்தில் தொலைந்துபோக
தலைமகள் தசைத் துடிப்படக்க
தாண்டிடும் வேலியிடுக்கில்
கண்ணகியின் காற்சிலம்பாவது
கண்பட்டுவிடாதோ என்ற ஆர்வத் தேடலோ

ஆசை மேகத்து ஆட்டம் நிக்க
நிலவின் தேடல் ஓட்டம் நிக்கும்
தேடலின் வேகம் நிறுத்தி
வேட்டையின் வேட்கை நிறுத்த
தேடிடும் வெகுமதி கிட்டும்
இந்த உண்மைகள் உணர்ந்தும்
மனித ஆட்டம் நிற்கவில்லையே!

*சிவபாலன் அஜெந்தன்*

பதற வைக்கும் உண்மைச் சம்பவம்

வெளிவராத 'பகீர்' தகவல்கள்

# தந்தையும் தூக்கில் மகனும் தூக்கில்!!



உளவாளி

01.11.2020

அசதி கொஞ்சம் அதிகம். அதனால் வழக்கத்தைவிட கூடுதலாகவே தூங்கி விட்டார் அந்த வயதான பெண்மணி. வாய் பேசும் சக்தியற்றவர் அவர். அரக்கப் பரக்க எழுந்தவர் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஆறைக் கடந்திருந்தது. "சீமெந்துக் கல் அரியிற வேலைக்கு வேளைக்கே போறவர்... ஏன் இன்னும் எழும்பேல?" என்று மருமகனைப் பற்றிச் சிந்தித்தவாறு வேகமாகச் சென்று தேநீரைத் தயாரித்துக்கொண்டு மருமகனின் அறைக் கதவை மெதுவாகத் தட்டினார்.

பதிலில்லை... ! இன்னும் கொஞ்சம் பலமாகத் தட்டினார் .

### கயிற்றில் போன உயிர்

அப்போதும் பதிலில்லை..!

பின்பக்கமாகவுள்ள யன்னலால் எட்டிப் பார்த்தவருக்குத் தலை சுற்றத் தொடங்கியது. அங்கே அவரது மருமகன்( மகளின் கணவர்) தூக்கில் தொங்கிக் கொண்டிருந்தார்.

வாய் பேச முடியாத அந்த முதிய பெண்ணால் என்னதான் செய்ய முடியும்? கத்தமுயன்றாலும் பயனில்லையே? அதனால் தன்னால் முடிந்தளவு அவலமான ஒலியை எழுப்பியபடி வீதிக்கு ஓடினார்.

வீதியால் போய் வருவோரிடம் மருமகன் தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதை சைகை மூலம் சொல்ல முயன்றார். ஆனால் அதில் தோல்விதான். எவருக்கும் அவரது சைகையின் அர்த்தம் புரியவில்லை. எல்லோரும் ஒருகணம் தரித்து ,நின்று அவரது சைகைகையும், அவல ஒலியையும் விளங்கிக் கொள்ள முயன்றும் முடியாமல் போகவே, அங்கிருந்து நழுவினர்.

அப்போது ஒரு வயதானவர் வந்தார்.அவரை அந்தப் பெண்மணிக்கு நன்கு தெரியும். தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கும் மருமகனின் நெருங்கிய நண்பரின் தந்தை. அவராவது தான் சொல்ல வருவதைப் புரிந்து கொள்வாரென வீட்டை நோக்கிக் காட்டி, அழுவது போல ஒலியெழுப்பத் தொடங்கினார். அவரும் அதைப் புரிந்து கொள்ளமுடியாமல் தன் வீட்டுக்குச் சென்றுவிட்டார்.

ஆனாலும் அவருக்கு மனம் கேட்கவில்லை. அந்தப் பெண் என்ன சொல்ல வந்திருப்பார்? என்பதே அவரது சிந்தனையாக இருந்தது. வீட்டில் நின்ற மகனிடம் " உன்ர சினேகிதன் வினோதன்ர மாமி றோட்டில நிண்டு அழுதபடி ஏதோ சொன்னா. ஒண்டும் விளங்கேலை. ஏதும் சண்டை சச்சரவோ தெரியாது. எதுக்கும் ஒருக்காப் போய்ப் பார்" என்று கூறினார்.

அவன் போனபோதும் அந்தப் பெண் ( வினோதனின் மாமி)வீதியில் நின்று அரற்றியபடி, ஏதோ வெளிப்படுத்த முனைந்து கொண்டிருந்தாள். வினோதனின் மாமி அவனைத் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று அந்த அறையைச் சுட்டிக் காட்டினார். அவன் பரபரப்போடு ஓடிப்போய் பார்த்தான். கதவு உட்பக்கமாகப் பூட்டியிருந்தது. ஆனால் திறப்பைக் காணோம். சாவித்துவாரத்தின் ஊடாக உள்ளே நோட்டமிட்டான். அங்கே, அவனது நெருங்கிய நண்பன் வினோதன் உயிரற்ற உடலாக தூக்குக் கயிற்றில் தொங்கிக் கொண்டு வந்தான்.

என்னசெய்வதென்று தெரியவில்லை. கதவைத் திறக்க வேண்டுமே. அப்போதுதானே ஏதும் செய்யமுடியும். ஆனால் திறப்பு இல்லை. உடனேயே கதவுக்கு ஓங்கி ஒரு உதை. அந்த உதை தாங்க முடியாமல் கதவு 'படார்' என்று வாய்பிளந்த மாதிரித் திறந்துகொண்டது. ஆனால் அதன் பின்னர் அவன் உள்நோக்கிக் காலடி எடுத்து வைக்கவில்லை. நண்பன் இறந்துவிட்டான் என்று உறுதியாகத் தெரிந்தது.உடலில் சின்னச் சலனம் கூட இல்லை. அப்படியானால் உள்ளே போவது, தேவையில்லாத சட்டப்பிரச்சினைகளைக் கொண்டுவந்து விடும் என்பதால், அப்படியே நின்று கொண்டு போன் மூலமாக தனக்குத் தெரிந்தவர்களுக்கு தகவலைச் சொன்னான். அடுத்த நொடியே, அக்கம் பக்கமெல்லாம் வினோதன் தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கும்சேதி பரவியது. சில நிமிடங்களில் அந்த வீட்டுச் சூழல் சனக்கூட்டத்தால் நிரம்பியது. தகவல் கிடைத்து வந்து சேர்ந்த பொலிஸார், தங்கள் விசாரணைகளை முடித்துக்கொண்டு, சடலத்தை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

### உயிரிழந்தவர் யார்?

மந்துவில் மேற்கு, கொடிகாமத்தில் வசித்து வந்த சிவானந்தமூர்த்தி வினோதன் என்கிற வெறும் 23 வயதான இளைஞனே இப்படி தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்தவர். 8 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தின் மூத்த மகனே வினோதன். ஆரம்ப கல்வி தொடக்கம் 8 ம் வகுப்பு வரை கொடிகாமம் சிறீ பாரதி வித்தியாலயத்தில் கல்வி கற்று குடும்ப நிலை காரணமாக கல்வியை இடைநிறுத்தினான். அப்படி அவன் கல்வியை இடைநடுவில் விடுவதற்கு அவனது குடும்பத்தில் நிகழ்ந்த அதிர்ச்சிகரமான சம்பவமும் முக்கிய காரணம்.

### தந்தையும், மகனும் தூக்கில்!

அவனது தந்தை , 2011 ஆம் ஆண்டு, மந்துவிலில் உள்ள அவர்களது வீட்டிலேயே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.அவர் ஏன் தூக்கில் தொங்கினார் என்பதற்குப் பல்வேறு காரணங்கள் இன்றைக்கும் சொல்லப்படுகின்றன.

தந்தை இறந்ததால் குடும்பப்பொறுப்பு வெறும் 14 வயதேயான வினோதனில் தலையில் விழுந்தது. ஆனாலும் அவனக்கு வேலை ஏதும் தெரியாதே. அதனால் வினோதனின் தாயார், முழங்காவிலில் உள்ள தன் சகோதரனின் வீட்டுக்கு குடும்பத்தோடு போய், வசிக்கத் தொடங்கினார். வினோதன், மேசன், தச்சுவேலை என கூலி வேலைகளுக்குப் போகத் தொடங்கினான்.



### தாயாரின் மறுமணமும் 'சித்தப்பாவும்'

முழங்காவிலில் வசித்து வந்த சமயத்தில், வினோதனின் வீட்டுக்கு ஒருவர் அடிக்கடி வந்து செல்லத் தொடங்கினார். அவர் மந்துவிலைச் சேர்ந்தவர். அவரோடு வினோதனின் தாய்க்கு தவறான உறவு இருந்ததாலேயே வினோதனின் தந்தை தூக்கிட்டு உயிர்மாய்த்தார் என அப்பகுதி மக்கள் அப்போது பேசிக்கொண்டார்கள். அதை உண்மையாக்குவது போல , குறித்த நபர் வினோதன் வீட்டுக்கு சென்றுவரத் தொடங்கினார்.சித்தப்பாவாக மாறினார். அவர்களின் உறவால் வினோதனின் தாயார் ஒரு பிள்ளையும் பிரசவித்தார்.இதன் பின்னர் வினோதனுக்கும் அந்தச் சித்தப்பா வுக்கும் நல்லவிதமான உறவு நிலை இருக்கவில்லை. அது நீண்டகால மாகத் தொடந்தது.

### காதல் மலர்ந்தது கல்யாணம் முடிந்தது

அப்படி அந்தச் 'சித்தப்பா' முழங்காவில் செல்லும் போது, சிலசமயங்களில் தன்னுடைய மருமகளையும் அழைத்துச் செல்வதுண்டு.அவள் மலேசியாவில்பணிபுரிந்து விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்தாள். அவளைப் பார்த்ததுமே வினோதனுக்கு அவள் மீது காதல் ஏற்பட்டது. அந்தக் காதலை வளர்ப்பது போல அடிக்கடி மந்துவிலுக்கு வேலைக்குச் செல்லும் போதெல்லாம் அவள் வீட்டுப் பக்கம் வினோதன் சென்றுவரத் தொடங்கினான். நாளடைவில் இருவருக்குமிடையில் காதல் பூத்துக் குலுங்கத் தொடங்கியது. பெற்றோர் சம்மதத்தோடு இருவரும், கெட்டி மேளம் கொட்ட, வாழ்த்தொலிகள் முழங்க, சம்பிரதாயபூர்வமாக மணம் புரிந்து மகிழ்வாக வாழத்தொடங்கினர். வினோதனுக்கு மணமகள் வீட்டார் வீடு ஒன்றை சீதனமாகக் கொடுத்திருந்தனர். அதனால் வினோதன் முழங்காவிலில் இருந்து மந்துவிலிலேயே நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினான். சந்தோசமாக நகர்ந்து கொண்டிருந்த வாழ்வில் வேலை வடிவத்தில் பிரிவு குறுக்கிட்டது.

### வந்தது பிரிவு

வினோதனின் மனைவி மீண்டும் மலேசியாவுக்கு பணிக்காகப் புறப்பட்டாள். வினோதனுக்கு அவள் செல்வது உள்ளூர விருப்பமில்லை. ஆனாலும் மனைவி பலமுறை கெஞ்சிக் கேட்டாள். அங்கே சென்று ஒருவருடத்துக்குள் அவனையும் அங்கே அழைத்து விடலாம் என நம்பிக்கையூட்டினாள். கடைசியில் , அவள் மலேசியா செல்லச் வினோதன் சம்மதித்தான்.கட்டுநாயக்க விமான நிலையம் வரை சென்று கண்ணீரோடு அவளை வழியனுப்பி வைத்தான். கடந்த வருடம் மனைவி மலேசியா போய்விட, மந்துவில் வீட்டில் அவனும் , மனைவியின் தாயாரும்( வாய் பேச முடியாதவர்) வசித்து வந்தனர். காலையில் கூலி வேலைக்கு சென்றால் மாலை தான் வினோதன் வீடு திரும்புவான். தானுண்டு, தன் வேலையுண்டு என்றிருப்பதால், யாருடனும் எந்த வம்பு தும்பும் இல்லாதவன் என்ற பெயர் அவனுக்குண்டு.



### ஏன் சண்டை?

ஆனால் அண்மைக் காலமாக வினோதனின் வாழ்வு அவ்வளவு அமைதியானதாக இல்லை.

அவனுக்கும் மனைவிக்கும் இடையே அடிக்கடி தொலைபேசியில் பெரும் சண்டை நடக்கத் தொடங்கியது. இந்தச் சண்டைக்கு சிலபல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

### காசு அனுப்பவில்லை

வாகனம் ஒன்றை வாங்க, மலேசியாவில் இருக்கும் மனைவியிடம் பணம் அனுப்புமாறு வினோதன் கேட்டதாகவும், அதற்கு அவள் மறுக்கவே தொடர்ந்து சண்டை நடந்ததாகவும் வினோதனின் உறவினர்கள் சிலர் சொல்கிறார்கள். ஆனால் இன்னொரு சாரார் அதை மறுக்கின்றனர்.

### மனைவி இன்னொரு திருமணம்

வினோதனின் மனைவி முன்பு மலேசியாவில் இருந்த போது அங்கும் ஒரு திருமணம் செய்துள்ளாள். அவளுக்கு அங்கு ஒரு குழந்தையும் உண்டு. அந்த விடயத்தை நண்பர்கள் பேஸ்புக் மூலம் கண்டறிந்து வினோதனுக்குச் சொன்னார்கள். அதை வினோதன் அவளிடம் கேட்டபோதே சண்டை வெடித்தது" என வினோதனின் நண்பர்கள் சொல்கிறார்கள்.

### சொத்துப் பிரச்சினை

வினோதனின் மனைவியின் அம்மம்மாவுக்கு சொத்துக்கள் கொஞ்சம் இருந்தன. தன்னுடைய வாய்பேச முடியாத மகள் மீது அவர் அதிக அன்பு கொண்டவர். அதனால் தன்னுடைய வாய்பேச முடியாத மகளின் பிள்ளையான வினோதனின் மனைவியின் பெயரில் தன் சொத்துக்களை அவர் எழுதிவைத்தார்.

இது வினோதனின் மனைவியின் தாயாரின் சகோதரர்களுக்கு அதிருப்தியை உண்டுபண்ணியிருந்ததாம். அந்தச் சகோதரர்களில் ஒருவர்தான், வினோதனின் தாயாரை இரண்டாம் தாரமாக மணம் முடித்த 'சித்தப்பா'. இந்தச் சொத்துப் பிரச்சினையே அண்மைக்காலமாக வினோதன் வீட்டில் நடக்கும் சண்டைகளுக்கு மூல காரணம் என்றும் சொல்லப்படுகின்றது.

### "வீட்டை விட்டுப் போ"

இப்படி தொலைபேசியில் தொடர்ந்த தர்க்கத்தின் போது ஒருநாள் வினோதனின் மனைவி "நீ உங்கட வீட்ட போ.. நான் வர மாட்டன் " எனக் கூறியதாகவும், "நான் போக மாட்டேன்" என மறுத்து சீதன வீட்டிலேயே தொடர்ந்தும் வசித்துள்ளார் வினோதன்.

இந்த முரண்பாடுகளின் போது ஒரு தடவை மனைவியின் வாய் பேச முடியாத தாயாரை வினோதன் தாக்கினார் என்றும் சொல்லப்படுகின்றது. அதேவேளை வினோதனின் தாயாரை இரண்டாம் திருமணம் முடித்ததாகச் சொல்லப்படும் 'சித்தப்பா'வும் வந்து, வினோதனோடு மல்லுக்கட்டத் தொடங்கினார். அவர் மந்துவிலுக்கு வரும் போதெல்லாம் அந்த வீட்டில் உரத்த குரலில் வாக்குவாதங்கள் எழுவதாக அயலில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

இந்த நிலையிலேயே அன்றைக்கும் இரவு தொலைபேசியில் மிகப் பலமான சண்டை வினோதனுக்கும் மனைவிக்கும் இடையே நடந்தது. அதன் முடிவிலேயே அவர் இப்படித் தவறான முடிவெடுத்தார் என்று சொல்லப்படுகின்றது.

### "தூக்கில் தொங்குவேன்"

வினோதனின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டவேளை அவருடைய தொலைபேசிக்கு மலேசியாவிலிருந்து மனைவி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அப்போது பொலிஸார் நடந்ததை மனைவிக்குச் சொல்லி என்ன நடந்தது எனத் தொலைபேசியில் விசாரித்தனர்.

" நேற்று இரவு வீடியோ கோல் கதைச்சம், அப்படிக் கதைக்கும் போது வய்த்தர்க்கம் ஏற்பட்டது. சண்டை முற்றி ஒரு கட்டத்தில் "இண்டைக்கு தான் என்னைப் பாக்கிறது கடைசி. வடிவாப் பார் ' எண்டு சொல்லிக் கொண்டு, கயிறு ஒண்டைக் காட்டி, இதில தொங்கப் போறன் எண்டு சொன்னார்.

இதுக்கு முதலும் கனதரம் இப்பிடிச் சொன்னதால நான் இதைப் பெரிசா எடுக்கேலை. கோபத்தில சொல்லுறார் எண்டு நினைச்சிட்டன். இப்பிடிச் செய்வார் எண்டு கனவிலையும் நினைக்கேலை" என்று வினோதனின் மனைவி பொலிஸாருக்குக் கூறியுள்ளார்.

### அவன் அப்படியல்ல

வினோதன் இப்படித் தவறான முடிவெடுக்கக் கூடியவன் இல்லை என்றும் அவனது சாவில் ஏதோ மர்மம் இருப்பதாகவும் அவனது நண்பர்கள் அடித்துச் சொல்கிறார்கள். அதற்குச் சில உதாரணங்களையும் சொல்கிறார்கள்.

மனைவி மலேசியாவில் இன்னொரு திருமணம் செய்த விடயம் அவனுக்கு புகைப்பட ஆதாரங்களோடு சொல்லப்பட்டு, அவளை விட்டு வேறு திருமணம் செய்யுமாறு நண்பர் கள் அறிவுரை சொன்னபோது வினோதன் ஒரேயடியாக மறுத்துவிட்டான்.

"அவள் பாவம் . பொம்பிளையை ஏமாத்தக் கூடாது" என்று பதில் கூறியிருக்கிறான். ஆகவே என்னதான் சண்டை வந்தாலும் வினோதன் பின்னர் இறங்கிப் போவானே தவிர இப்படிச் செய்யமாட்டான் என்கிறார்கள்.

### நாளைக்கு வருவேன்

அத்தோடு முதல் நாள் இரவு ஒன்பது மணிவரை வினோதன் நண்பர்களோடு சேர்ந்து சிமெந்துக் கல் அறுக்கும் வேலையும் ஈடுபட்டிருந்தான்.



அப்போது " நாளைக்கு வந்து மிச்ச கல்லை அறுப்பம் "என்று கூறிவிட்டே சென்றுள்ளான். இப்படி ஒரு முடிவை எடுக்க நினைத்திருந்தால் அவன் எதற்காக நாளைக்கு வருவேன் எனச் சொல்ல வேண்டும்? என்றும் நண்பர்கள் கேள்வியெழுப்புகின்றனர். அதைவிட இன்னும் சில சந்தேகங்களை வினோதனின் மரணம் தொடர்பில் அவர்கள் முன்வைக்கிறார்கள்.

**சந்தேகம் 01**

**வினோதனின் தந்தையும் தூக்கில் தொங்கியே இறந்தார். அப்போது அதற்கு இப்போது வினோதனின் சித்தப்பாவாக இருப்பவர் மீது ஊரவர்கள் சந்தேகப்பட்டனர். இப்போது வினோதனும் அவ்வாறே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதன் பின்னணியிலும் அவர் இருக்கலாம் என்பது ஊரவர்களின் சந்தேகம். அந்தச் 'சித்தப்பா' வன்புணர்வு வழக்கொன்றில் சிறை சென்றும் வந்துள்ளார். அதேவேளை தவறணை ஒன்றில் தன்னுடைய மாமா ஒருவரைத் தாக்கிக் கொன்றார் என்ற வழக்கும் அந்தச் 'சித்தப்பா 'மீது போடப்பட்டு அதற்கும் 6 மாதம் சிறையில் இருந்தவர்.**

**சந்தேகம் 02**

**சம்பவ தினத்தன்று இரவு ஒன்பது மணியளவில் வினோதனின் வீட்டின் முன்பாக முச்சக்கரவண்டி ஒன்று வந்து நின்றுள்ளது. ஆனால் அதில் யார் வந்தனர் என தெரியவில்லை. அதில் வந்தவர்கள் சிறிது நேரத்தில் சென்றுவிட்டதாகவும், முச்சக்கரவண்டி வந்து நின்றபோது தொலைபேசியில் வினோதன் யாருடனோ சண்டையிடுவது போன்று கதைக்கும் சத்தம் கேட்டுள்ளது. இதன் போது வீட்டின் உறுதிப்பத்திரம் தொடர்பிலேயே சண்டை ஏற்பட்டதாகவும், வினோதனின் குரலும் வேறு ஒரு நபரின் குரலும் கேட்டதாக ஊரவர்கள் சொல்கிறார்கள். அப்படிச் சண்டையிட்டவர் யார்? அவருக்கும் இந்தச் சாவுக்கும் தொடர்பிருக்குமா?**

**சந்தேகம் 03**

**அதைவிட அன்றுஅதிகாலை மூன்று மணியளவில் ஹையஸ் வாகனமொன்று, வினோதனின் வீட்டின் முன்பாக வந்து நின்றுள்ளது. சுமார் அரை மணி நேரம் அங்கு நின்ற அந்த ஹையஸ் வாகனம் பின்னர் அப்படியே வரணி நோக்கிய பாதையால் சென்றுவிட்டது. புதிய நபர்கள் வந்தால் வினோதன் வீட்டு நாய் பலமாகக் குரைக்கும் .**

**ஆனால் ஹையஸ் வந்தபோது நாய் குரைக்கவில்லை. அப்படியானால் அந்த வாகனத்தில் நன்குன் பரிச்சயமானவர்களே வந்து சென்றுள்ளனர். அப்படி அகால வேளையில் வந்தவர்கள் யார்? அரைமணித்தியாலமாக அங்கு என்ன செய்தார்கள்? அங்கு வர வேண்டிய தேவை என்ன? என்றெல்லாம் ஊரவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.**

**சந்தேகம் 04**

**வினோதன் தூக்கில் தொங்கிய தகவல் கேட்டதும் ஊர்மக்கள் ஓடிச் சென்று பார்த்தனர். அப்போது அவர் உயிர்மாய்த்த அறைக்குள் சுத்தியல் ஒன்றும், அறைக்குச் செல்லும் பகுதியில் 'கொட்டன்' ஒன்றும் காணப்பட்டுள்ளது. அவை ஏன் அங்கு வந்தன?**

### இப்படி நிறையச் சந்தேகங்கள்

இருப்பினும் மூச்சு திணறல் ஏற்பட்டதாலேயே வினோதனுக்கு மரணம் சம்பவித்தது எனவும், அவரது உடலில் சந்தேகப்படும்படியான வேறு காயங்கள் எதுவுமில்லை என்றும் பிரேத பரிசோதனை அறிக்கை சொல்கின்றது. சந்தேகங்களை விடவும் சட்டத்தின் முன் சாட்சிகளே பலமானவை. வினோதன் உயிர் மாய்த்த தருணத்தில் அந்த வீட்டில் இருந்த வாய்பேச முடியாத மாமியாருக்கு உண்மை என்னவென்று தெரிந்திருக்கலாம். ஆனால் என்ன செய்வது, அவரால்தான் எதுவும் பேசமுடியாதே. அதனால் அவரோடு அந்த உண்மைகளும் ஊமைகளாகியிருக்கக் கூடும்.

**"வினோதனின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டவேளை அவருடைய தொலைபேசிக்கு மலேசியாவிலிருந்து மனைவி அழைப்பை ஏற்படுத்தியுள்ளார். அப்போது பொலிஸார் நடந்ததை மனைவிக்குச் சொல்லி என்ன நடந்தது எனத் தொலைபேசியில் விசாரித்தனர். நேற்று இரவு வீடியோ கோல் கதைச்சம், அப்படிக் கதைக்கும் போது வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. சண்டை முற்றி ஒரு கட்டத்தில் இண்டைக்கு தான் என்னைப் பாக்கிறது கடைசி. வடிவாப் பார் எண்டு சொல்லிக் கொண்டு, கயிறு ஒண்டைக் காட்டி, இதில தொங்கப் போறன் எண்டு சொன்னார்.**

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை

12

தில்லைநாதன் கோபிநாத்

1990-1995







**1990** களின் ஈழநாதத்தின் வரலாற்றைப் பதிவு செய்கையில் தவிர்க்க முடியாத பெயர் அழகன் என்பதாகும். அழகன் விடுதலைப் புலிப் போராளி. புலிகளின் மேஜர் தரத்தினர் என்பதால் மேஜர் அழகன் எனும் பெயரில் நன்கறியப்பட்டவர். ஈழநாதத்தின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்தவர். ஈழநாதத்தின் ஆரம்பகால வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்.

அழகனின் இயற்பெயர் இளங்கோ என்பதாகும். சாவகச்சேரியின் கல்வயல் பகுதியைச் சேர்ந்த இவரது பெற்றோர் செல்வராசா, ஆதிபுவனேஸ்வரி என்போராவர். மலர்விழி, கயல்விழி, வேல்விழி, இளங்குமரன், இளங்கோ என ஐந்து சகோதரர்களில் ஒருவராக 1966 சனவரி 13ஆம் திகதி பிறந்த இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர். க. பொ. த. உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் கல்வி கற்ற இளங்கோ பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்ட பத்தொன்பதாவது வயதில் 1985 மார்ச்சில் புலிகளுடன் இணைந்து கொண்டார்; அழகன் ஆனார். பயிற்சிகளின் பின்னர் தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் அரசியற் பணிகளில் ஈடுபட்ட அழகன் பின்னர் நாவற்குழிக்கு மாற்றப்பட்டார். இந்திய இராணுவத்தினருடனான சண்டைகள் தொடங்கிய பின்னர் முதலில் தென்மராட்சியிலும் பின்னர் வன்னியிலும் களமுனைகளில் செயற்பட்டார். முல்லைத்தீவில் புலிகள் புதிதாக அமைத்த பயிற்சி முகாமொன்றில் பயிற்சி ஆசிரியராகவும் இருந்தார். பின்னர் காட்டில் அக்காலத்தில் இயங்கிய அரசியல் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டார்.

பத்திரிகைத்துறையுடனான அழகனின் தொடர்பு அக்காலத்திலேயே ஏற்பட்டது. புலிகளால் கல்லச்சுப் பிரதிகளாக சுதந்திரப் பறவைகள், உணர்வு ஆகிய சஞ்சிகைகள் வன்னிக் காட்டு முகாம்களிலிருந்து வெளியிடப்பட்டன. அந்தச் சஞ்சிகைகளை வெளியிடத் தேவையான கல்லச்சுத் தாள், மை ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வேலை அழகனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அவ்வாறு சிறிய அளவில் தொடங்கிய அழகனின் பதிப்புப் பணி ஈழநாதம் தொடங்கப்பட்ட போது முழு அளவிலான பணியானது. போராளிகளின் கட்டுப்பாட்டில் பொதுமக்களும் ஊழியராகப் பணி செய்வதாக ஈழநாதம் அமைந்தது. ஈழநாதத்தின் தொடக்கத்தின் போது புலிகள் சார்பான நிர்வாகப் பொறுப்பாளராக அழகன் நியமிக்கப்பட்டார். பத்திரிகைத் துறையில் அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவினையும் புதிதாக உருவாக்கப்பட்ட கட்டமைப்பினையும் இருபத்து நான்கே வயதான இளைஞனாக அழகன் வழிநடத்தினார்.

ஈழநாதம் தொடங்கிய மூன்று மாதங்களில் அச்சியந்திரம், விநியோகக் கட்டமைப்பு, புளொக் தயாரிக்கும் பிரிவு போன்றன அனைத்தும் உருவாக்கப்பட்டுத் தன்னளவில் முழுமையான பத்திரிகையாக இயங்கத் தொடங்கியிருந்தது. ஆயினும் மேலும் ஓரிரு மாதங்களில் மீண்டும் போர் வெடித்ததால் பொருளாதாரத் தடைகள் ஏற்பட்டன. பத்திரிகைத் தாள் கிடைப்பது மிகவும் சிக்கலானது. பல்வேறு வழிகளில் தரு விக்கப்பட்ட பத்திரிகைகள் ஈழநாதத்துக்கு மட்டுமன்றி ஏனைய பத்திரிகைகளுக்கும் அழகன் கிடைக்கச் செய்தார் என்று கூறப்படுகிறது.

மக்கள் பத்திரிகை என்பதாக முன்வைக்கப்பட்டாலும் புலிகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாடுகளை ஈழநாதம் பிரதிபலித்தது. ஆயினும் புலிகளின் நிலைப்பாடுகளுக்கு மாற்றான கருத்துக்கள் வெளிப்படையான முன்வைக்கப் பட்ட சந்தர்ப்பங்களில் அவற்றினை வெளியிடவும் அழகன் தயங்கவில்லை. எடுத்துக்காட்டாக ஈழநாதத்தை விரிவாக விமர்சித்து மு. பொன்னம்பலம் எழுதிய கட்டுரை ஈழநாதம் முதலாண்டு மலரில் மாற்றங்களின்றிப் பிரசுரிக்கப்பட்டது. இரண்டாவது ஆண்டு நிறைவினை ஒட்டி வெளியான முதற் பக்கக் குறிப்பில் "தேசிய நலனுக்குக் குந்தகம் விளைவிக்காத எந்த ஒரு விடயத்தையும் கையாள ஈழநாதம் தயங்கியதில்லை; இனியும் தயங்கப் போவதில்லை" என வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டது.

அக்காலத்தின் விமானத் தாக்குதல்களில் பத்திரிகை அலுவலகங்களும் பாதிக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டை மோதல் முடிவடைந்ததை அடுத்து 1990.09.27 அன்று உதயன் பணிமனை சியாய் மாசெட்டி விமானத்திலிருந்து வீசப்பட்ட மூன்று குண்டுகளால் தாக்கப்பட்டது. விநியோகப் பிரிவின் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் வேறு பலர் காயமடைந்தனர். இதே போல ஈழநாதம் பணிமனையும் தாக்குதலுக்குள்ளான போது அங்கு நின்றிருந்த அழகன் மயிரிழையில் உயிர் தப்பினார். நிலத்தின் கீழ் பலமான பெரிய பதுங்கு குழிகளை அமைத்து அவற்றினுள் அச்சியந்திரத்தினை நிறுவிப் பத்திரிகை அச்சடிக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அழகன் ஈழநாதத்தின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்த போதும் களமுனைக்கு நேரடியாகப் போராளிகளுடன் சென்று செய்திகள் சேகரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். அவ்வாறு 1991இல் ஆனையிறவில் நடந்த சண்டைச் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற போது இரு வேறு சந்தர்ப்பங்களிலும் விமானத் தாக்குதலில் உயிர் தப்பினார்.


ஆயினும் இவ்வாறு தொடர்ந்து தப்ப முடியவில்லை. 1992 யூன் மாதம் 29ஆம் திகதி கட்டைக்காடு பகுதியில் படையினரின் வாகனமொன்றை ஈழநாதத்துக்காகப் படம் பிடிக்கப் புலிகளின் புகைப்படக் கலைஞர் ஒருவருடன் சென்ற வேளை அழகன் வயிற்றில் காயமடைந்து சாவடைந்தார். அழகன் சாவடைந்த செய்தி அவரது வளர்த்தெடுக்கப்பட்ட ஈழநாதத்தின் முதற்பக்கச் செய்தியாக மறுநாள் வந்திருந்தது. ஈழநாதம் பணிமனையிலேயே அழகனின் உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. ஆயினும் பத்திரிகை வெளியீட்டில் எந்தத் தடையும் ஏற்படவில்லை. எவ்வித இழப்புக்கள் வந்தாலும் தடைப்படாமல் வெளிவரும் பத்திரிகையாக ஈழநாதம் அக்காலத்திலேயே உருவாகியிருந்தது.

1995 ஒக்ரோபர் இறுதி வரை யாழ்ப்பாண நகர அலுவலகத்திலிருந்து ஈழநாதம் தொடர்ச்சியாக வெளியானது.

பொருளாதாரத் தடையால் அச்சுத்தாள் கிடைக்காத காலங்களில் சீ. ஆர். கொப்பித்தாள், பிறவுண் தாள், மட்டைகளில் கூட குறைந்த பக்கங்களில் வெளியான போதும் தடைப்படாமல் வெளியானது. ஆயினும் பக்க அளவு ஏ4 ஆக்கப்பட்டது. பக்க எண்ணிக்கை குறைக்கப்பட்டது. வார வெளியீடு தடைப்பட்டது. ஈழநாதத்தின் ஒவ்வோராண்டு நிறைவிலும் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள் நடத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டதோடு ஈழநாதத்திலும் அவை வெளியாகின. வலைப் பந்தாட்டம், உதை பந்தாட்டப் போட்டிகள் போன்றனவும் நடாத்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

1990 ஒக்ரோபரில் வலிகாமத்திலிருந்து மக்கள் இடம்பெயர்க்கப்பட்ட போது ஈழநாதமும் தென்மராட்சிக்குச் சென்றது. சாவகச்சேரி கல்வயலில் இருந்து அச்சானது. பின்னர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்தது. அத்துடன் ஈழநாதம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான காலம் முடிவுக்கு வந்தது.

1996 இல் கிளிநொச்சி நோக்கிய தாக்குதல்கள் தொடக்கிய போது பழைய முறிகண்டிக்கும் பின்னர் கரிப்பட்டமுறிப்புக்கும் பின்னர் புதுக்குடியிருப்புக்கும் எனப் பல தடவைகள் ஈழநாதம் இடம்பெயர்ந்தது. 19952002 காலத்தில் ஆகக்குறைந்தது 7 தடவைகள் ஈழநாதம் அலுவலகங்கள் இடம் மாற்றப்பட்டன.




அழகன் ஈழநாதத்தின் நிர்வாகப் பொறுப்பாளராக இருந்தபோதும் களமுனைக்கு நேரடியாகப் போராளிகளுடன் சென்று செய்திகள் சேகரிக்கும் பணிகளிலும் ஈடுபட்டிருந்தார். அவ்வாறு 1991 இல் ஆனையிறவில் நடந்த சண்டைச் செய்திகளைச் சேகரிக்கச் சென்றபோது இரு வேறு சந்தர்ப்பங்களிலும் விமானத் தாக்குதலில் உயிர் தப்பினார். ஆயினும் இவ்வாறு தொடர்ந்து தப்ப முடியவில்லை.

2002 சமாதான காலம் தொடங்கியபோது மீண்டும் ஈழநாதம் யாழ்ப்பாணத்திலும் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த வவுனியா, மன்னார் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டது. ஆயினும் ஈழ நாதத்தின் தலை அலுவலகம் கிளிநொச்சியிலேயே அமைந்திருந்தது. 2006 இல் மீண்டும் போர் மூண்டதைத் தொடர்ந்து ஓகஸ்ற் 11ஆம் திகதிக்குப் பின்னர் வன்னிப் பிரதேசத்தில் மட்டும் கிடைக்கும் பத்திரிகையானது.

2008இல் மீண்டும் இடம்பெயர்வுகள் தொடங்கின. தருமபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம், தேவிபுரம், இரணைப்பாலை எனத் தொடர்ந்து இடம்பெயர்ந்த ஈழநாதம் ஒரு கட்டத்தில் வாகனங்களில் அச்சியந்திரங்கள் ஏற்றப்பட்டு நிறுவப்பட்ட நகரும் பத்திரிகை நிறுவனமாகச் செயற்பட்டது. மின்பிறப்பாக்கிகள், கணினிகள், அச்சுச்சாதனங்களும் தொடர்ந்து நகர்த்தப்பட்டன.

இறுதிப்போரில் ஈழநாதம் ஊழியர்கள் பலரும் சாவடைந்தனர். புதுமாத்தளனிலும் பின்னர் வலைஞர் மடத்திலும் இருந்து ஈழநாதம் வெளியானது. பின்னர் இரட்டை வாய்க்கால் பகுதியிலிருந்தும் இறுதியில் முள்ளிவாய்க்காலில் இருந்தும் வெளியான ஈழநாதத்தின் இறுதிப் பதிப்பு 2009 மே 12ஆம் திகதி வெளியானது. அன்றிரவு எஞ்சிய சாதனங்களும் முற்றாகச் சேதமைடைந்ததால் ஈழநாதத்தின் பயணம் முடிவுக்கு வந்தது.

மோகன் வைத்தியலிங்கம்



# எல்லாம் குட்டையே; அமெரிக்காவும் மட்டையே!

பதவியைப் பற்றிப்பிடிக்க யாருக்குத் தான் ஆசை இல்லை? எமது நாட்டு அரசியலில் இருந்தும், அரசியல்வாதிகளிலிருந்தும் அமெரிக்க அரசியல்வாதிகள் மேலானவர்கள், ஜென்ரில்மன்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது அமெரிக்கா என்றாலும் சரி இலங்கை என்றாலும் சரி அரசியல்வாதிகள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று தெட்டத்தெளிவாகத் தெரிந்துவிட்டது.

அமெரிக்காவில் தேர்தல் செலவினங்களுக்காகப் பல மில்லியன் டொலர் பொது மக்களிடமிருந்து பெறப்படுகிறதாம். ஒரு தேர்தலின்போது பிரசாரத்துக்காகச் செலவிடப்படும் தொகை பல மில்லியன்களைத் தாண்டுவதாகச் செய்திகள் உண்டு. அந்தவகையில் தற்போது நடைபெற்றிருக்கும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலிலும் பல மில்லியன்கள் செலவிடப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளைப் போல தேர்தல் பிரசாரங்க ளுக்கு இவ்வளவு தான் செலவு செய்ய வேண்டும் என்று எந்த கட்டுப்பாடுகளும் அமெரிக்காவில் இல்லை. இந்நிலையில் அமெரிக்கத் தேர்தலுக்கு ஆகும் செலவு காலத்துக்குக் காலம் அதிகரித்துக் கொண்டே போகிறது.

2000ஆம் ஆண்டு நடந்த தேர்தலுக்கு ஆன செலவைவிட, 2016ஆம் ஆண்டு தேர்தலுக்கான செலவு இரு மடங்கு அதிகம் என்றும்,2020 இல் அது இன்னும் இருமடங்கால் உயர்ந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இலங்கை போன்றதொரு சிறிய நாட்டிலேயே ஜனாதிபதிப் பதவிக்காகப் பலத்த போட்டி நிலவும்போது, அதற்காகப் பிரசாரத்தின்போது செலவிடப்படும் பணத்தின் பெறுமதியும் பல கோடிகள் என்று சொல்லப்படும்போது, உலகின் மிகவும் சக்திவாய்ந்த ஒரு நாட்டின் உயர் பதவிக்கான போட்டியும், அதற்கான செலவும் குறைவாக இருக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது தான். சுயாதீனக் குழுக்கள் தமது அரசியல் செலவினங்களுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களிடம் இருந்து நிதி திரட்டலாம் என்ற அனுமதி 2010ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவில் வழங்கப்பட்டுவிட்டது. தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா நோய் நெருக்கடியால் அமெரிக்கத் தேர்தல் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருக்கிறது.


தேர்தல் பிரசாரத்துக்காக உள்நாட்டுப் பயணம் மேற்கொள்வது தவிர்க்கப்பட்டுள்ளது. 2016ல் டொனால்ட் டிரம்ப் மற்றும் ஹில்லாரி கிளின்டன் இருவரும் பிரசாரத்துக்காக உள்நாட்டில் பயணம் செய்வதற்கு மட்டும் தனித்தனியே சுமார் 45 மில்லியன் டொலரைச் செலவு செய்திருக்கின்றனர்.

அது மட்டுமல்ல தேர்தல் பிரசாரத்தின் போது மக்களுக்கு வழங்கப்படும் அன்பளிப்புகள் பற்றியும் இப்போது அதிகம் பேசப்படுகிறது. பிரசாரத்துக் கான ஆடைகள் ஜனாதிபதி வேட்பாளரின் பெயர், மற்றும் புகைப்படம் பொறிக்கப்பட்ட ரீசேட்டுகள், தொப்பிகள், இவையெல்லாம் தேர்தல் காலத்தில் அமெரிக்காவில் மிகவும் பிரபலமானவை. அந்தவகையில் 2016ஆம் ஆண்டுத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் 3 மில்லியன் டொலருக்கும் மேல் அன்பளிப்புப் பொருள்களுக்காகச் செலவிட்டதாகச் சொல்லப்படுகிறது.




2016ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்கான செலவு ஆறரை பில்லியன் டொலர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் அதிகம் ஊடகங்களுக்கும் வேட்பாளர்களால் நியமிக்கப்படும் ஊழியர்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது. அந்தவகையில் 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கிய ஹிலாரி கிளின்டன், தன்னால் நிய மிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு சுமார் 85 மில்லியன் டொலரை சம்பளமாக மட்டும் வழங்கியிருக்கிறார்.

இவர்களுக்கு இப்படி கோடி கோடியாகக் கொட்டுவதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது? யார் இவ்வளவு பணத்தொகையை அள்ளிக் கொடுக்கிறார்கள் தெரியுமா?





பெரும்பாலான தேர்தல் நிதியை இவர்கள் தமது பிரசார நன்கொடையில் இருந்து தான் பெற்றுக் கொள்கிறார்கள். 2016 தேர்தலில் மூன்றுபேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் ஒருவர், 200 டொலர் அல்லது அதற்கும் குறைவான டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் நன்கொடையாளர்கள் அனைவரும் அமெரிக்க குடிமக்கள் என்றே சொல்லப்படுகின்றது

ஆனால், பெரும்பகுதியான நிதியைச் செல்வந்தர்களே நன்கொடையாக வழங்குகின்றனர். அமெரிக்க மக்கள் குழுக்களும் தம்மாலானவரை நிதி திரட்டி நன்கொடையாக வழங்குகின்றனர். கடந்த தேர்தலில் ஏறத்தாழ 200 மக்கள் குழுக்கள், சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலரைச் சேகரித்து நன்கொடையாக வழங்கியுள்ளன. இதனைத் தவிர வேட்பாளர் மற்றும் அவரது கட்சியினரும் இணைந்து நிதி திரட்டல் கூட்டங்களை ஒருங்கிணைப்பதும் உண்டு. இதிலேயே அதிகளவு நன்கொடை சேகரிக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல செல்வந்தர்களைக் குறிவைத்து ஜனாதிபதி வேட்பாளரினால் விசேட விருந்து ஏற்பாடு செய்யப்படுகிறது. அதில் பலவகையான உணவு மற்றும் பானங்கள் பரிமாறப்பட்டு அவர்கள் மகிழ்விக்கப்படுகின்றனர். அப்படிப்பட்ட விருந்துபசாரத்தின் பின்னர் சேகரிக்கப்படும் தொகை ஒரு நாளில் பல மில்லியன்களாகக் காணப்படும்.

இருந்தும் இப்படியான நன்கொடையை வழங்குவதற்கு அங்கு தடைகள் இல்லையா? அரசாங்க விதிமுறைகள் இல்லையா? என்று கேட்கலாம். பிரசாரத்துக் கான நன்கொடையளிப்பதற்குச் சில விதிமுறைகளை அமெரிக்கா வகுத்திருக்கிறது. அங்கு அமெரிக்கர்கள் மட்டும்தான் பிரசார நன்கொடை செலுத்த முடியும். மேலும் தனிப்பட்டவர்களால் கொடுக்கப்படுகின்ற நன்கொடைக்கு என்று சில கட்டுப்பாடுகள் உண்டு. ஒருவர் ஒரு வேட்பாளருக்கு 2,800 டொலருக்குக் குறைவாகவே நன்கொடையளிக்க முடியும்.

**“2000ஆம் ஆண்டு நடந்த தேர்தலுக்கு ஆன செலவைவிட, 2016ஆம் ஆண்டு தேர்த லுக்கான செலவு இரு மடங்கு அதிகம் என்றும்,2020இல் அது இன்னும் இரு மடங்கால் உயர்ந்துள்ளது எனவும் கூறப் படுகின்றது.”**

ஆனால், போட்டியிடும் வேட்பாளர் சார்ந்த கட்சி, நிதி திரட்டுமேயானால், அக்கட்சியின் நிதிதிரட்டும் திட்டத்தின் கீழ் நன்கொடையாளருக்கு இது போன்று கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை என்று சொல்லப்படுகிறது.

இப்படியாக அமெரிக்கத் தேர்தல் செலவினத்தைப் பற்றிச் சொல்லும்போது, நம்மவர் ஒருவர் “எமது நாட்டில் தேர்தல் செலவினத்துக்காகப் பணம் கொடுக்கும் செல்வந்தர்கள் தாம் பண உதவி செய்த போட்டியாளர் பதவிக்கு வந்தால் , அவருடைய செல்வாக்கைத் தமது வியாபாரத்துக்குப் பயன்படுத்தி ஊழல் செய்வது வழமை. அதுபோல் அமெரிக்கர்கள் செய்யமாட்டார்களா?" என்று கேட்டார். பாவம் அவர். அவருக்குத் தெரியாது உலகின் உச்சபட்ச ஊழல் அமெரிக்காவில் தான் உண்டு. ஆனால் வெளியில் தெரியவராமல் அவர்கள் அமுக்கி விடுவார்கள் என்ற விடயம்.

# பிஞ்சு தூரிகைகள்



தனுஷ்காந்
தரம்-9
யாழ்.கொக்குவில்
இந்துக் கல்லூரி.

ச.விஷ்ணகா
தரம்-8
யா/ வேம்படி மகளிர் உயர்தரப்
பாடசாலை.





றெ.ஹெய்லின் றக்சனா
தரம்-6
சுண்டிக்குளி மகளிர்
கல்லூரி.

யதுர்சனா ரவிதாசன்,
யாழ்.இந்து
மகளிர் கல்லூரி.





மு.பிரியங்கா
யா/ இந்து மகளிர் கல்லூரி.
அங்கத்துவ
இலக்கம்-88



மு.பிரியங்கா,
யா/ இந்து மகளிர் கல்லூரி.
அங்கத்துவ இலக்கம்.88




## சீனப் பழமொழி

- எப்போதும் வசந்தகாலம்தான் ஒரு புத்தகத்தோடு வாழ்பவனுக்கு
- நீர் கப்பலைத் தாங்கும். அதுவே கப்பலைக் கவிழ்க்கவும் செய்யும்
- வில்லில் ஏற்படும் ஒரு மயிரிழை வித்தியாசம் இலக்கிலிருந்து ஒரு மைல் தொலைவுக்கு தள்ளிப் போய்விடும்.
- ஒரு எலும்புக்காக ஒரு நேர்மையான மனிதன் தன்னை நாயாக்கிக் கொள்ளமாட்டான்.
- மனிதனுடைய பேச்சுத்தான் அவன் எண்ணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடி
- இரகசியத்தை ஊமைப் பெண்ணிடம் சொல்லுங்கள். அவளும் பேசக் கற்றுக் கொள்வாள்.
- ஓர் இனத்தை அடிமைப்படுத்த வேண்டுமாயின் அவ் இனத்தின் மொழியையும் இலக்கியத்தையும் அழித்தாலே அவ்வினம் தாமாகவே அடிமையாகிவிடும்.
- துன்பப்படும் பறவைகள் உன் தலைக்கு மேலாக வந்து வட்டமிடுவதை நீ தவிர்க்க முடியாது. ஆனால் அவை உன் கூந்தலிலே உட்கார்ந்து கூடு கட்டிக் கொள்ளாமல் தடுக்க முடியும்.




சஞ்சீவி

# மாணவர் கழகம்



**பெயர்:** சிறிகுமார் ரேனுயன்
**முகவரி:** நரியிட்டான், மல்லாகம்.
**பி. திகதி:** 2008.10.29
**பாடசாலை:** யா/ மகாஜனக் கல்லூரி.
அங்கத்துவ இல. 111



**பெயர்:** உதயகுமார் சானுஜா,
**முகவரி:** 23/7 அராலி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 13.06.2008
**பாடசாலை:** யா/ இந்துக் கல்லூரி.
அங்கத்துவ இல. 112



**பெயர்:** அ. அன்புமாறன்
**முகவரி:** வரணி வடக்கு, வரணி.
**பி. திகதி:** 16.08.2007
**பாடசாலை:** வரணி மத்திய கல்லூரி.
அங்கத்துவ இல. 113



**பெயர்:** லிங்கேஸ்வரன் வாகினி,
**முகவரி:** 'குணவாசா' சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
**பி. திகதி:** 2014.12.02
**பாடசாலை:** கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.
அங்கத்துவ இல. 114



**பெயர்:** சிவசிதம்பரம் திருக்குமரன்
**முகவரி:** ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.
**பி. திகதி:** 2004.07.15
**பாடசாலை:** யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.
அங்கத்துவ இல. 115

சஞ்சீவி

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ........................................
2. முகவரி: ........................................
........................................
3. பிறந்த திகதி: ........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ........................................
5. கற்கும் தரம்: ........................................
6. தொலைபேசி இலக்கம்: ........................................

........................ மாணவர் ஒப்பம் ........................ பெற்றோர் ஒப்பம்

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

## வித்தியாசங்களை காண்போம்



சஞ்சீவி மாணவர் கழக அங்கத்தவர்களாக இணைய உங்கள் புகைப்படத்துடன் மேலுள்ள முகவரிக்கோ அல்லது வட்அப், வைபர் எண்ணுக்கோ அனுப்பி அங்கத்தவர்களாக இணையுங்கள். உங்கள் படைப்புக்களையும் அங்கத்துவ இலக்கத்தோடு எழுதி அனுப்புங்கள்.

# அறிந்தும் அறியாமலும்

சுழியன்

## ரவி மௌன விரதம்

ஆசியாவிலேயே பழமையான அரசியல் கட்சிகளுள் ஒன்றான ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் 8 பொதுத்தேர்தல்களில் வெற்றிபெற்றுள்ளது. அதுமட்டுமல்ல 4 நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளையும், 7 பிரதமர்களையும் உருவாக்கிய பெருமையும் அந்தக்கட்சியையே சாரும்.

இவ்வாறு 75 வருடகால வரலாற்றைக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியில் உப தலைவர் என்ற முக்கிய பதவியை வகிப்பவர்தான் ரவி கருணாநாயக்க. ரணில் விக்கிரமசிங்கவின் நம்பிக்கைக்குரியவர்களில் ஒருவராக வலம் வந்த அவர் கட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட காலங்களில் எல்லாம் அதனை மீளக்கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றியவர்.

எனினும்,2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியின் பின்னர் அவர் செயற்பாட்டு அரசியலுக்கு ஓய்வு கொடுத்துள்ளார். ஐ.தே.கவின் பிரதித் தலைவர் பதவியை எதிர்பார்த்த அவர், அது கிடைக்காததால் தற்போது கட்சி தலைமையகமான சிறிகொத்த பக்கம்கூட வருவதில்லையாம்.

இந்தநிலையில் ரவியின் அடுத்தகட்ட நகர்வு என்னவென்பதை அறிய பலரும் முயற்சித்துள்ளனர், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர்கூட அழைப்பை ஏற்படுத்தி இது பற்றி கதைத்துள்ளனர். ஆனாலும் புன்னகையை மாத்திரமே ரவி பதிலாக வழங்கிவருகிறாராம்.

அரசியல் பேசுவதைத் தவிர்த்து மௌனமாக இருப்பதால் தனக்கு எதிரான அரசியல் ரீதியான அழுத்தங்கள் குறைவதாக ரவி நம்புகின்றாராம். சரி எப்போது அவரின் மௌனவிரதம் முடியும் என்பதை காத்திருந்து கண்காணிப்போம்.





## மாகாண தேர்தல் ஒத்திவைப்பு

எதிர்வரும் டிசம்பரில் வரவு - செலவுத் திட்டம் நிறைவேறிய பின்னர் 2021 பெப்ரவரி அல்லது மார்ச்சில் மாகாணசபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இதற்காக சட்டரீதியிலான ஏற்பாடுகளும் அவசர அவசரமாகச் செய்யப்பட்டன. எனினும், கொரோனா வைரஸ் தாக்கத்தால் மாகாணசபைத் தேர்தலை திட்ட மிட்ட அடிப்படையில் அரசாங்கம் நடத்தாது எனவும், மேலும் சில மாதங்களுக்கு அது ஒத்திவைக்கப்படலாம் எனவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

கொரோனாவால் இலங்கையின் பொருளாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது,சுற்றுலா உட்பட பெரும்பாலான துறைகளும் ஆட்டம் கண்டுள்ளன. மறுபுறத்தில் கொரோனா வைரஸ் பரவல் எப்போது கட்டுக்குள் வரும் என்பதை உரியவகையில் கணிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் பிரதான இலக்காக இருக்கும் எனவும், மாகாணசபைத் தேர்தலை அவசரமாக நடத்தினால் அது மக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கும் என்பதால் 2021 இறுதிவரைகூட தேர்தல் பிற்போடப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## மொட்டின் சாதனை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்டு 48 மாதங்கள் மாத்திரமே கடந்துள்ளன, ஆனால் மூன்று தேர்தல்களில் அந்தக்கட்சி தொடர் வெற்றிகளை பதிவுசெய்தது. உள்ளூராட்சிமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் மொட்டு கட்சி வரலாற்று வெற்றியை பதிவுசெய்துள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் குறுகிய காலப்பகுதிக்குள் கட்சியொன்று இவ்வாறு வெற்றிநடை போடுவது இதுவே முதன்முறையாகும்.

1950களில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க,1951 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உருவாக்கினார், அதன்பின்னர் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று அரியணையேறினார்.

அதுவே பல வருடங்களாக பெரும் சாதனையாக இருந்தது. அந்த சாதனையையும் மொட்டுக் கட்சி முறியடித்துள்ளது. அதுமட்டுமல்ல விகிசாதார முறைப்படி நடைபெறும் தேர்தலில் அதிகூடிய ஆசனங்களைக் கைப்பற்றிய கட்சி என்ற பெருமையும் மொட்டுக் கட்சியையே சார்ந்துள்ளது. ஆனால் இவ்வாறு குறுகிய காலப்பகுதிக்குள் வெற்றிநடைபோடும் மொட்டுக் கட்சியின் 4 ஆவது ஆண்டு நிறைவுவிழாவை இம்முறை பிரமாண்டமாக கொண்டாடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் மிக எளிமையான முறையில் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

## அரவிந்தகுமாரின் அஸ்திரம்

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்ததால் அரவிந்தகுமாரை கட்சியில் இருந்து இடைநிறுத்தும் முடிவை மலையக மக்கள் முன்னணி எடுத்திருந்தது. அத்துடன், கட்சியின் எந்தவொரு செயற்பாட்டிலும் பங்கேற்கக் கூடாது எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் தனக்கு வாக்களித்த மக்களுக்காக மனசாட்சியின் பிரகாரம் தான் செயற்பட்டுவருவதாக அரசியல் விஞ்ஞான விளக்கம் வழங்கியுள்ள அரவிந்தகுமார், சில நாட்களுக்கு முன்னர் ஊவா மாகாண ஆளுநரை சந்தித்திருந்தார். மேற்படி சந்திப்புக்கு மலையக மக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளர்களையும், செயற்பாட்டாளர்களையும் அவர் அழைத்துச் சென்றிருந்தார்.

கட்சிச் செயற்பாடுகளில் பங்கேற்க அவருக்கு தடைவிதிக்கப்பட்டிருந்த நிலையில் கட்சி உறுப்பினர்களை எவ்வாறு சந்திப்புக்கு அழைத்துச்செல்ல முடியும் என்ற சர்ச்சை தற்போது வெடித்துள்ளது. இதன் பின்னணியில் அரசியல் காய்நகர்த்தல்கள் சில இருப்பதாக கருதப்படுகின்றது.

அதாவது தனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டால் பதுளை மாவட்டத்தில் மலையக மக்கள் முன்னணிக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது எனவும், செயற்பாட்டாளர்கள் எல்லாம் தனது பக்கமே நிற்கின்றனர் என்பதையுமே இச்சந்திப்புமூலம் அரவிந்தகுமார் கோடிகாட்டியுள்ளார். இதனால் அரவிந்தகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் மலையக மக்கள் முன்னணி சற்றுத் தயக்கம் காட்டத் தொடங்கியுள்ளது.

## அங்குசம் யார் வசம்?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியைக் கைப்பற்றுவதற்காக அக்கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவுக்கும், தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்கவுக்குமிடையில் 'கொரோனா' தாக்கத்துக்கு மத்தியிலும் கடும் போட்டி நிலவுகின்றது என அறியமுடிகின்றது. இதனால்தான் தேசியப்பட்டியல் ஆசனம் கூட இழுபறியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. தலைமைப்பதவியில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அப்பதவிக்கு தனது உறவினரான ருவான் விஜேவர்த்தனவை கொண்டுவருவதற்கான வியூகத்தையும் வகுத்துள்ளார். இதன் ஓர் அங்கமாக பிரதித் தலைவர் பதவியும் ருவானுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் கடும் அதிருப்தியடைந்த நவீன் திஸாநாயக்க, தனது மாமாவான கருஜயசூரிய ஊடாக தற்போது காய்நகர்த்தி வருகின்றார். பௌத்த தேரர்களின் ஆசியுடன் தலைமைப்பதவியை பெறுவதற்கு முயற்சித்துவருகின்றார். கருவுக்கு சங்கக பல அமைப்புகள் இருப்பதால் மறுபுறத்தில் ருவானும் தலைமைப்பதவியை குறிவைத்து அரசியல் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சிக்கான புதிய தலைவர் 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் நியமிக்கப்படவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





○ கோகுலராகவன்

# II குழைக்காட்டு கதைகள்



கிட்டத்தட்ட 20,30 வருடங்களுக்கு முன், எங்கள் கிராமத்தில் வீடுகளுக்கு பிரதான நுழைவாயிலைத் தவிர வீடுகளை இணைக்கும் குறுக்குப் பாதைகள் இருந்தன. எங்கள் வீட்டிலிருந்து ஊரில் கடைசி வீட்டுக்கு இந்த குறுக்கு பாதைகள் வழியாக , வீதிக்குப் போகாமல் வேலிகளில் இருக்கும் இணைப்புப் பாதைகளால் போய்விட முடியும்.

இதற்கு வைக்கப்பட்ட விசேட பெயர் 'கொட்டுக் கடப்பு' .

பனை அல்லது தென்னை ஏதோ ஒன்றின் அடிக்குற்றி மூன்றை எடுத்து வரிசையாக நட்டு விடுவர். வேலியின் நடுவில் உயரமான குற்றி நடப்படும். அதன் பக்கவாட்டில் , வேலியால் பிரிக்கப்படும் இரு வளவுகளிலும் நடுக்குற்றியில் ஏற வசதியாக அதை விட பதிவான,சம அளவிலான இரண்டு குற்றிகள் போடப்படும்.

பதிவான குற்றியில் கால் வைத்து நடுக்குற்றியில் ஏறிக் கொண்டு,பின்னர் அதிலிருந்து மற்ற வளவில் இருக்கும் அடுத்த பதிவான குற்றியில் கால் வைத்து, இறங்கிவிட முடியும்.

'கொட்டுக் கடப்பு' அமைப்பதற்கு இலகுவானது. படலை கட்ட நேரமும் செலவும் அதிகம் என்பதால் இந்தக் கண்டுபிடிப்பு. ஆடு, மாடு இதனைத் தாண்டி வருவது கடினம். பயிர்க் கொடியை மேயாது காப்பாற்றலாம். சிலவேளை நாய் கலைத்தாலும் இதன் மேல் ஏறி நின்று தப்பித்துக் கொள்ளலாம்.

எங்கள் வீட்டில் 'வீமன்' எனும் நாய் நின்றது. சரியான கடியன் நாய். தங்கம் மாமி எங்கள் வீட்டுக்கு கொட்டுக் கடப்பு ஊடாக வரவும் வீமன் நாய் வழிமறிக்கவும் சரியாகிபோய்விட்டது. வீட்டில் அந்த வேளை நாங்கள் ஒருவரும் இல்லை. தங்கம் மாமி நாங்கள் பொழுதுபட வீடு திரும்பும் வரை கொட்டுக் கடப்பில். நாய் கீழே..

"ஏன் மாமி மற்றப் பக்கம் இறங்கிப் போயிருக்கலாமே"

"அட ஓமடா பயத்தில் அப்படியே இருந்திட்டன்"

"மூளை இருந்தா பிறந்த வீட்டுக்குள் செத்திருப்பியள்"

"போடா மடையா"

> "கொட்டுக் கடப்பு, உறவு கள் பலமாக இருக்க பாலமாக இருந்தது. மாமன், சித்தப்பன், பெரியப்பன் உறவு முறைகள் தொடர்ந்தன."

இந்தக் கொட்டுக் கடப்பு, உறவுகள் பலமாக இருக்க பாலமாக இருந்தது. மாமன், சித்தப்பன், பெரியப்பன் உறவு முறைகள் தொடர்ந்தன.

இரவானதும் வீட்டுக்கு விளக்கு வைத்து விட்டு சொந்தங்கள் இப்பாதையால் வந்து ஒரு வீட்டின் முற்றத்தில் ஒன்றுசேர்ந்து ஒன்பது பத்து மணிவரை அளவளாவி மகிழ்வர்.

எங்கள் வீட்டுக்கு பல உறவுகள் இப்படி இந்தப் பாதையால் வருவார்கள். இப்படி அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருபவர்களில் முக்கியமானவர்கள், சின்னையாண்ணையும் அவர் மனைவி செல்லம் மாமியும்.

சின்னையா அண்ணை தோட்ட வேலைக்கு போபவர். நிறைய ஊர்க்கதைகள் அறிந்து வருவார். காதல் கதைகள், காணிப் பிரச்சினைகள், கடன் பிரச்சினைகள், சண்டை சச்சரவுகள், தொகுப்பு கதைகள் என நிறையக் கதைகளை விலாவாரியாக சொல்லுவார்.

செல்லம் மாமியும் சந்தையில் வியாபாரம் செய்பவர். அவரும் தன் பங்குக்கு புதினம் சொல்லிக் கொண்டு இருப்பார்.

சிரிப்பும் கதையும் முற்றத்தில் பரவ, லாம்பு வெளிச்சத்தில் முகங்கள் பரவசம் அடைந்து இருப்பதைக் காண முடியும்.

நாங்களும் படிக்காமல் எல்லோர் வாயையும் பார்த்துக் கொண்டிருப்போம்.

சில வேளைகளில் சில கதைகள் உயர்ந்த குரலில் ஒலித்தால்

"மெல்லக் கதையுங்கோப்பா உங்களுக்கு மாட்டுக் குரல்"

"அவங்கட காதில விழப் போகுது"

"நாளைக்கு பச்சை மட்டையோட வரப் போறாங்கள்"

அதன் பின்னர் குரல்கள் தாழ்ந்து இரகசியமாய் ஒலிக்கும். கேட்கச் சுவாரசியமாக இருக்கும். கிட்டத்தட்ட கிராமத்தில் வசிக்கும் ஆட்கள் அனைவரையும் பற்றி ஓரிரு மணித்தியாலத்தில் கதைத்தே முடித்து விடுவார்கள்.

புதினம் அறிய சுற்றி இருப்பவர்களும் "மெய்யண்ணை, மெய்யண்ணை" என்று துருவித் துருவி கேட்பார்கள். சின்னையாண்ணையும் புளுகில் எல்லாம் சொல்லிவிடுவார்.

கதைகள் முடியவும் பசியும் தொடங்க சின்னையா அண்ணை புறப்படத் தயாராவார்.

' 'எழும்பு செல்லம் .எங்களுக்கேன் ஆற்றையேன் வீட்டு துளவாரம். பசிக்குது போவம்" என்றபடி லாம்பைத் தூக்கி, தூண்டி விட்டு பிரகாசமாக்கிக் கொண்டு முன்னே கடப்பார். நல்ல பிள்ளை மாதிரி பின்னே செல்லம் மாமியும் தொடருவார்.

# சொற்சிலம்பம் போட்டி 20

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | | 6 |
| 7 | | | | 8 | | 9 | |
| 10 | | | 11 | | 12 | | |
| | | 13 | | 14 | | | |
| | 15 | | | | | 16 | |
| 17 | | | | 18 | 19 | | |
| 20 | | | 21 | | | | 22 |
| 23 | | | | | 24 | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

.......................................................

கையொப்பம்:...............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.உள்ளூராட்சி சபைகளில் மிகப் பெரியது, 7.அழி, 8.இந்தியாவை இப்படியும் அழைப்பர், 10.உங்களுக்கு கிடைக்க வேண்டியதை இப்படியும் குறிப்பிடுவர், 12.அழகு/புகழ், 13. கடவுளை நம்பிக்கையுடன் துதிப்பவன், 15.அகலும், 16. பிசாசு, 17.எதற்கும் பயனற்றுப் போய்விடும் நிலை, 18.ஒரு கிழமை/கிரகங்களுள் ஒன்று, 20.கையையும் குறிக்கும். களவையும் குறிக்கும், 21.திருமால்/இராகங்களுள் ஒன்று, 23.இரும்பை அறுக்கப் பயன்படும் கருவி, 24.மயானம்

## மேலிருந்து கீழ்

1.திருமாலின் மற்றொரு பெயர், 2.விலகுமாறான ஏவல் சொல், 3.முன்வினை காரணமாய்க் கிட்டும் நற்பலன், 4.உயர்சபை/கலைநிகழ்வுகள் இடம்பெறும் மண்டபம், 5.இந்து சமயிகளின் கடவுளரில் ஒருவர், 6.தொற்று நோயான இது பரவினால் கட்டுப்படுத்துவது கடினம், 9.குளிர்மை, 11.திசையை இப்படியும் குறிப்பிடுவர், 14.நாண் கொண்ட வாத்தியக் கருவி, 15.விளக்கம், 16.தலையில் இருக்குமானால் தொல்லை அதிகமாகும், 17.எழுத்துக்களின் ஆரம்பம், 19.செய்கை பண்ணப்படாத நிலம், 21. மூன்று என்பதைக் குறிக்கும் அடைமொழி, 22.சிரசு

### சொற்சிலம்பம் போட்டி 18 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.இந்திராகாந்தி, 5. ரிஷி, 6.மரகதம், 8.ரம், 11.இன்பதுன்பம், 14.பாடை, 15.திரு, 16.ருப(பரு), 18.வடம், 19.திராவிடம், 20.வளி

**மேலிருந்து கீழ்**

இராமன், 2. தினகரன் 3. காமம், 4.திரிபு, 7.தம்பதி, 9.தேன், 10.நம்ப, 11.இடை, 12.துருவம், 13.பரும்வ(பருவம்), 14.பாரதி, 17.புவி

**சொற்சிலம்பம் போட்டி இல.20**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
14.11.2020 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 17 இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**
**சதுர்ஜா அருள்லிங்கம்**
364/பி சுஜன் பந்தல் ஒழுங்கை, சாந்தசோலை வீதி, வவுனியா

**2 ஆம் பரிசு**
**திருமதி. ஆர்.எம் தயானந்தன்**
15ஆம் கட்டையடி, உடுப்பிட்டி

**3 ஆம் பரிசு**
**மா.மகாலிங்கம்**
கைதடி மேற்கு, கைதடி.

**4 ஆம் பரிசு**
**நடராசா பார்கவி**
ஆதிசிவன் வீதி, குடமியன் வரணி.

**5 ஆம் பரிசு**
**எஸ்.ஜெ மரியதாசன்**
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

# இழக்கப்போகிறோமா ஈழவூரை?



சர்மிலா வினோதினி

ஈழம் என்கின்ற சொல் இலங்கையின் பூர்வீகப் பெயராக இருந்து வருகின்றபோதும் இலங்கை அரசைப் பொறுத்தவரை அது பயன்பாட்டளவில் மறுதலிக்கப் படுகின்ற பெயராக மாறி இருக்கிறது. இந்த நிலையில் ஈழம் என்கின்ற சொல் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த ஈழவூர் என்கின்ற கிராமத்தைப்பற்றி அனேகமானவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

**தொன்மங்களை சுமந்த நிலம்**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவின்கீழ் அமைந்திருக்கிறது ஈழவூர் என்னும் பழம்பெரும் கிராமம்.

பெயருக்கு ஏற்றாற்போல் ஆதி இரும்புக்கால எச்சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற நிலமாக அடையாளப் படுத்தப்படுகின்ற ஈழவூரில் அமைந்துள்ள வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பின்னுள்ள பகுதிகளில் வெளிவந்த தொல்லியல் எச்சங்களும், கிராஞ்சிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கிணறும் வரலாற்றின் கதைகளைச் சொல்லி நிற்கின்றன. அத்தோடு சங்ககாலத்துப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் இங்குதான் வாழ்ந்தார் எனவும் செவிவழிக்கதைகள் கூறுகின்றன.

தொன்மையின் சுவடுகளை சுமந்திருக்கின்ற ஈழவூர் யாழ்ப்பாண இராசதானிக் காலத்தில் வெளிநாடு என்றும் அழைக்கப்பட்டது என்கின்றனர் வரலாற்று ஆசிரியர்கள்.

**பெயர் மாற்றப்பட்ட ஈழவூரும் அயற்கிராமங்களும்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வேரவில் என்று பெயர்மாற்றப்பட்ட ஈழவூருக்கு அருகில் அமைந்துள்ள பொன்னாவெளி, பாலாவி, கிராஞ்சி உட்பட்ட கிராமங்கள் பண்டைய காலத்தில் நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கி இருக்கின்றன. இங்குவ் விளைந்த நெல் மற்றும் பாற்பொருள் உற்பத்தியின் காரணமாகவும், புவியியல்சார்ந்த இட அமைவின் காரணமாகவும் வரலாற்றுக் காலத்தில் இந்தப்பிரதேங்கள் புகழ் பெற்று விளங்கியிருந்தன.

வன்னிப் பிராந்தியத்தில், குறிப்பாக பூநகரியின் வரலாற்றில் ஈழவூர் செறிந்த மக்கள் தொகையினைப் பதிவு செய்திருக்கிறது. பொருளாதார மற்றும் குடித்தொகை வ்ளம் ஆகியவற்றில் முன்னிலை வகித்ததன் காரணத்தால் இந்தப்பிரதேசங்களை தமது ஆளுகையின்கீழ் உட்படுத்துவதற்கு போர்த்துக்கேயர்கள் பெருமுயற்சி செய்தனரென்று வரலாறு சொல்கி றது.

ஈழவூருக்கு அருகில் உள்ள பொன்னாவெளிக் கிராமத்தில் இன்று இடிபாடுகளோடு காணப்படுகின்ற பாடசாலையும், சிதைந்து போன நிலையில் காணப்படுகின்ற கட்டங்களும் சொல்லி நிற்கின்ற கதைகளும் ஈழவூருக்கு கூடுதல் வலுச்சேர்க்கின்றன.

நிலம் மலர நெல்விளையும் காரணத்தினால் பொன் விளையும் பூமியென சிறப்புப் பெற்று அழைக்கப்பட்டது பொன்னாவெளிக் கிராமம். ஐரோப்பியர்களின் ஆதிக்கத்துக்கு அடிபணியாமல் இந்தப் பிரதேசத்தில் பூர்வீகமாக வாழ்ந்துவந்த சைவப் பெரியவர்கள் இங்குள்ள மாணவர்களின் கல்வி வ்ளர்ச்சிக்கென்று பதினெட்டாம் நூற்றாண்டில் பாடசாலை ஒன்றை நிறுவி சுவாமி ஆறுமுக நாவலரின் கரங்களினால் அந்தப் பாடசாலையைத் திறந்து வைத்து கல்விப்பணி ஆற்றினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலில் அமைக்கப்பட்ட பாடசாலையும் இதுவேயாகும். அத்தோடு அங்கு வாழ்ந்த உடையாரின் வீட்டுச் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த புகைப்ப டத்தில் இருந்தே பிற்காலத்தில் ஆறுமுக நாவலரின் புகைப்படம் தமிழ் உலகுக்குக் கிடைத்ததாகவும் சொல்லப்படுகிறது.

“அபிவிருத்திச் செயற்பாடுகளின் மூலமாகக் கிட்டுகின்ற நன்மைகள் கிராமிய மக்களின் வாழ்வாதா ரத்தை சிதைத்து அழிக்கின்ற வகையில் நிகழக்கூடாது.”

**இருள்சூழ்ந்த காலம்**

இத்தகைய பெருமைகளைக் கொண்டிருக்கக் கூடிய பொன்னாவெளிக் கிராமத்தின் வயல் நிலங்கள் 1964 ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட சூறாவளித் தாக்கத்தின் காரணமாக கடல்நீர் உட்புகுந்து உவர் அடையத் தொடங்கியதோடு, தரைக்கீழ் நீர்வளமும் பாதிப்படையத் தொடங்கியது. பொன் விளையும் பூமியாக இருந்த பொன்னாவெளி மெல்ல மெல்லத் தன்னிலை இழக்கத் தொடங்க அங்கிருந்த குடிகளும் ஊரிலிருந்து வெளியேறி தற்போது ஈழவூரில் உறவுகளோடு வாழ்ந்து வருகின்றனர்.

குடிகளை இழந்த பொன்னாவெளிக்கு ஆலய வழிபாடு மற்றும், பெரும்போகப் பயிர்ச்செய்கையின் நிமித்தமாக இன்றும் மக்கள் சென்று வருவது வழக்கத்தில் இருந்து வருகின்றது.

**அழிவுக்கு வழிகோலும் அபிவிருத்தி**

அபிவிருத்தி அரசியலின் இப்போதைய பின்புலத்தில் தற்போது வேரவில் என்று அழைப்படுகின்ற ஈழவூரில் சிமெந்துத் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான திட்ட வரைபுகள் முன்மொழியப்பட்டு ஈ.ஐ.ஏ என்கின்ற சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு ஆரம்பகட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஈழவூரில் அமைக்கப்படவுள்ள இச் சிமெந்துத் தொழிற்சாலைக்கான மூலப் பொருளாகிய சுண்ணக்கற்களை பொன்னாவெளியில் இருந்து அகழ்ந்து எடுப்பதற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு அங்குள்ள சுண்ணக்கல்லின் தரத்தைப் பரிசோதிக்கும் முயற்சியில் இலங்கைப் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகம் ஈடுபட்டுள்ளது. இதற்காக பொன்னாவெளியில் உள்ள தனியார் வயல் நிலங்களில் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பரிசோதனைக்கென தோண்டப்படுகின்ற கிணறுகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற உவர்நீர் பொறுப்பற்ற முறையில் வயல் நிலங்களுக்குள் பாய்ச்சப்படுகின்றது.

முறையற்ற இந்தச் செயற்பாட்டின் காரணமாக ஏற்கனவே பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்ற விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை தொடர்பாக உரிய திணைக்களங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளைத் தொடர்புகொண்டபோதிலும் எவ்வித முயற்சியும் பயனளிக்கவில்லை எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


**நிலைபேண் அபிவிருத்தியின் அவசியம்**

அபிவிருத்திச் செயற்பாடுகளின் மூலமாகக் கிட்டுகின்ற நன்மைகள் கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து அழிக்கின்ற வகையில் நிகழக்கூடாது. அவ்வகையில் நிகழ்கின்ற அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிலைபேண் அபிவிருத்தியாகவும் கொள்ளப்பட முடியாதவை. ஆக, ஈழவூரில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சிமெந்துத் தொழிற்சாலை அங்கு நிறுவப்பட்டால், அந்தப் பிரதேச மக்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்பினைவிடவும், ஏற்படக்கூடிய எதிர்மறை விளைவுகள் அதிகமாகும். தொழிற்சாலையில் இருந்து வெளிவிடப்படுகின்ற தூசுக்களின் காரணமாக வளி மாசுபட்டு சுவாசம் சார்ந்த அனர்த்தங்களை சுற்றுவட்டத்தில் வாழ்கின்ற கிராம மக்கள் எதிர்கொள்ள நேரிடும்.


அத்தோடு, பொன்னாவெளியில் அகழப்படப் போகின்ற சுண்ணக்கல்லின் காரணமாக அந்தக் கிராம மக்கள் தமது பூர்வீக வயல் நிலங்களை இழக்க நேரிடும். அதுமட்டுமன்றி குறித்த பிரதேசம் கடலிற்கு அண்மையில் அமைந்திருப்பதன் காரணமாக கடல் நீர் உட்புகுந்து தரைக்கீழ் நீரோடு கலப்பதற்கான வாய்ப்புக்களும் மிக மிக அதிகம்.

அகழப்படுகின்ற சுண்ணக்கற்கள் போக, எஞ்சிய நிலத்தில் இராட்சதக் குழிகள் ஏற்பட்டு, அந்தப்பிரதேசமே தன்நிலை இழந்து, முற்றாக அழிந்துபோவது மட்டுமன்றி பொன்னாவெளிக்கு அருகிலுள்ள ஈழவூரின் தரைக்கீழ் நீர்வளத்திலும் மாற்றங்களை நிகழ்த்தக்கூடும். பொதுவாக, இவ்வாறான தொழிற்சாலைகளை அமைப்பதற்கான சுற்றுச்சூழல் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகிறபோது மக்கள் கருத்துக்காக குறிப்பிட்ட காலம் சுற்றுச்சூழல் திணைக்களத்தின் இணையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். அக்காலத்தில் குறித்த யாரேனும் தமது கருத்துக்களை உரிய முறையில் பரிசீலனைக்காக தெரிவிக்க முடியும்.

ஆனால், இவை தொடர்பாக இக் கிராம மக்களிடம் உரிய விழிப்புணர்வு அற்ற நிலையில் ஏழை எளிய மக்களின் நலனினை புறம் தள்ளிய இவ்வாறான அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக குறித்த பிரதேசத்துக்குரிய மக்கள் பிரதிநிதிகள் கவனமெடுத்து இத்திட்டம் தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.



ஈழத்தமிழர்களது இருப்பின் அடையாளங்கள் மெல்ல மெல்ல அழிக்கப்பட்டு வருகின்ற நிலையில் வரலாற்றின் பக்கங்களில் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய அடையாளக் கிராமங்களாகிய ஈழவூரையும் பொன்னாவெளியையும் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தார்மீகக் கடமையாகும். ■




# யார் வந்தாலும் கவலையில்லை

அ.நிக்ஸன்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குளறுபடிகள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. ஆனால் அமெரிக்காவில் எவர் பதவியேற்றாலும் இலங்கை மற்றும் இந்தியாவைப் பொறுத்தவரை பெரியளவில் மாற்றங்கள் எதுவும் இருக்காது. ஏனெனில் இந்தோ பசுபிக் பிராந்திய அமெரிக்க நலன் சார்ந்த விடயங்களைச் சாதகமாகப் பயன்படுத்தியே பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தையும் நிலை நிறுத்த வேண்டிய சூழல் இந்தியாவுக்கு உண்டு. அத்துடன் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் இந்தோ பசுபிக் பிராந்தியச் செயற்பாடுகள் என்பது அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்கள், தீர்மானம் எடுப்பவர்களின் கைகளிலேயே உண்டு. ஆகவே யார் ஆட்சிக்கு வந்தாலும் ஆசியப் பிராந்தியச் செயற்பாடுகளில் மாற்றங்கள் இருக்காதென்றே கூறலாம்.




ஆனாலும் மோடி அரசாங்கத்தைப் பொறுத்தவரை டொனால்ட் ட்ரம் மீண்டும் பதவிக்கு வர வேண்டுமென அது எதிர்பார்க்கிறது. ஏனெனில் சீனா பாக்கிஸ்தான் போன்ற நாடுகளோடு ட்ரம் முரட்டுத்தனமாக மல்லுக்கட்டும் அரசியலால், மோடிக்குக் கொஞ்சம் லாபம் உண்டு. அதனால் ட்ரம்பை விருப்பக்கூடும். ட்ரம்ப் மீண்டும் பதவிக்கு



வரவேண்டுமென புதுடில்லியில் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. இதன் பின்னணியில் மோடியின் ஆதரவாளர்கள் உள்ளனர் என்பது வெளிப்படை. ஆனால் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள், தீர்மானம் எடுக்கும் இராஜதந்திரிகள். அமெரிக்காவின் ஆசியக் கொள்கைகளை உள்வாங்கியே செயற்பட விரும்புவர்.

இரண்டு வேட்பாளர்களில் யார் வெற்றி பெற்றாலும் இந்தியா அதனை வரவேற்கும். வரலாறுகளும் அப்படித்தான் உள்ளன. ஏனெனில், அமெரிக்க - இந்திய வெளியுறவுக் கொள்கைகள் எழுதப்பட்டவை. ஆட்சியாளர்களின் தன்மைக்கு ஏற்ப அந்தக் கொள்கைகள் மாறக் கூடியவையும் அல்ல.

அதற்குக் கிட்டிய உதாரணமாக கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனைய அபிவிருத்தித் திட்டத்தை இந்தியா ஜப்பானுடன் சேர்ந்து மேற்கொள்ள எடுத்த முயற்சிக்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கியுள்ளதைக் கூறலாம். அத்துடன் இந்தியா ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் அமெரிக்காவைத் தங்கள் பக்கம் வைத்திருக்கும் நோக்கிலும் அவ்வாறான வெளியுறவுக் கொள்கைகளை வகுத்துள்ளதென்ற கருத்துக்களும் இல்லாமலில்லை. இந்தியா அயல்நாடு என்பதால், ஈழத் தமிழர்கள் விடயத்தில் அமெரிக்காவும் இந்தியா சொல்வதைக் கேட்டே அனைத்துச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தமை 1984ஆம் ஆண்டின் பின்னரான வரலாறு. 2012ஆம் ஆண்டு இலங்கை தொடர்பாக ஜெனீவா மனித உரிமைச் சபையில் அமெரிக்கா சமர்ப்பித்திருந்த பிரேரணைகூட இந்தியாவின் ஆலோசனைகளுடனேயே அமைந்திருந்தன. 2002ஆம் ஆண்டு நோர்வேயின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்த சமாதானப் பேச்சுக்கள் குறித்த விவரங்கள் அவ்வப்போது இந்தியாவுக்கு தெளிவுபடுத்தப்பட்டிருந்தன. அதாவது நோர்வே சமாதானத் தூதுவர் கொழும்புக்கும் வன்னிக்கும் வந்து திரும்பும்போது புதுடில்லிக்கும் செல்வது வழமை.

ஆகவே இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா, இந்தியா சொல்வதைக் கேட்டே செயற்பட்டதுடன் இந்தோ பசுபிக் பிராந்திய நலன்சார் விடயங்களில் அமெரிக்க விரும்பத்துக்கு ஏற்பவே இந்தியாவும் செயற்பட்டு வருகிறது. இதன் பின்னணியிலேயே இந்தோ பசுபிக் பிராந்திய நலன்கள் தொடர்பாக அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ ஆசிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்த நாட்களில், இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் விடயத்தில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இலங்கை அரசாங்கத்துக்குக் கடும் அழுத்தம் கொடுத்துள்ளார்.

2015ஆம் ஆண்டு 500 மில்லியன் டொலரில் இத்திட்டத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும், 2016ஆம் ஆண்டு மைத்திரி ரணில் அரசாங்கத்தில் உருவான குழப்பங்களினால் அத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. ஆனாலும் 2019ஆம் ஆண்டு மே மாதம் இந்தத் திட்டத்துக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆனால் அதே ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான சூழலில், அந்த ஒப்பந்தம் பற்றி எதுவுமே பேசப்படவில்லை.

சீனாவின் மண்டலமும் பாதையும் என்ற செயற்திட்டத்தின் வரைபடத்தில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையம் இடம் பெற்றுள்ளது.

இதனாலேயே கிழக்குக் கொள்கலன் முனையத்தின் அபிவிருத்தி வேலைகளை 2019ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் செய்து முடிக்க வேண்டுமென இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடும் அழுத்தம் கொடுத்திருக்கிறார்.

பௌத்த குருமாரின் எதிர்ப்புக் காரணமாக முன்னர் இந்தத் திட்டம் கைவிட்டிருந்தது. எனினும் தற்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுள்ளதால் கோத்தாபய அரசாங்கத்தினால் இந்தத் திட்டத்தைச் செய்து முடிக்க முடியுமென இந்தியா நம்புகின்றது.

ஆனால் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையம் நூறு வீதமும் இலங்கையின் திட்டமாகவே இருக்க வேண்டுமெனக் கோரி துறைமுக ஊழியர்கள் கோரி, தொடர்ந்து போரடியும் வருகின்றனர். இதனால் ஊழியர்களின் கோரிக்கையை மீறிச்செயற்பட முடியாதவொரு நிலைமை இருப்பதாவே இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்குச் சொல்லியிருக்கிறது.

ஆனால் அதனை ஏற்கும் நிலையில் இந்தியா இல்லை என்பதையும், அமெரிக்க ஆதரவோடுதான் இத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் உணர்த்தவே இவ்வாறு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அமெரிக்காவில் ஆட்சி மாறினாலும் இந்தத் திட்டத்திற்கு அமெரிக்க நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்கும். ஏனெனில் சீனாவின் மண்டலமும் பாதையும் என்ற திட்டத்தின் மூலமாக இலங்கைக்குள் அதிகரித்து வரும் சீன ஊடுருவல்களைத் தடுப்பதற்கான எதிர்ச் செயற்பாடாகவே கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வது என்ற போர்வையில் அதற்குள் கால்பதிக்க வேண் டிய அவசியத் தேவை அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உள்ளது. அதற்கு ஆதரவாகவே ஜப்பானையும் இந்தியா கூட்டுச் சேர்த்துள்ளது.

இதனால் ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் அமெரிக்கா மீண்டும் இந்தியா சொல்வதைக் கேட்டே செயற்படும் என்பதில் சந்தேகமேயில்லை.



**இரண்டு வேட்பாளர்களில் யார் வெற்றிபெற்றாலும் இந்தியா அதனை வரவேற்கும். வரலாறுகளும் அப்படித்தான் உள்ளன. ஏனெனில், அமெரிக்க – இந்திய வெளியுறவுக் கொள்கைகள் எழுதப்பட்டவை. ஆட்சியாளர்களின் தன்மைக்கு ஏற்ப அந்தக் கொள்கைகள் மாறக் கூடியவையும் அல்ல.**

# சூனியக்கார அமைச்சரா மாறிப்போன சுகாதார அமைச்சருக்கு...




அம்மாவுக்கு வணக்கம்.

நான் நல்ல சுகம். உங்கடை சுகத்தையும் கடவுள்தான் காப்பாற்ற வேணும் எண்டு கேட்டுக்கொள்ளுகிறன்.

ஒரு பானை எடுத்து, அதிலை தண்ணியை நிரப்பி, அதைக் கொண்டு போய் ஆத்திலை எறியுங்கோ, கொரோனா தணியும் எண்டு நீங்கள் செய்து காட்டின காரியத்தைப் படத்தில பார்த்தன். அதைப் பாத்திட்டுச் சனம் பகிடி பண்ணுகினம்.

"கொரோனவை ஒழிக்க ஆராவது கடலுக்கை குதியுங்கோ எண்டு சொன்னால் குதிக்கவும் தயார்," எண்டு வீராவேசத்தோடை வேறை, சொல்லி இருக்கிறியள். இதிலை இருந்து என்ன விளங்குது? கொரோனாவும் ஒழியாது. நீங்களும் கடலுக்கை குதிக்கத் தேவை இல்லை எண்டுதானே மறைமுகமாகச் சொல்ல வாறியள்.

எங்கடை செல்லக்கிளி அண்ணை தன்ரை மனுசிக்குப் பேய் தொத்திட்டுது எண்டு சொல்லி கொண்டு போய் சாமியரிட்டைக் காட்டினவர். அவர் பாத்திட்டு " மனுசிக்கு , பேயிலை பெரிய பேயான "பெப்பேய்" பிடிச்சிருக்கு. அதை விரட்டிறது கஷ்டம் "எண்டு சொன்னாராம். செல்லக்கிளி அண்ணைக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சாம். "அப்ப நான் என்ன செய்ய?" எண்டு கேட்டாராம். சாமியார், தான் தப்பிறதுக்காக "உதுக்கு ஒண்டும் செய்யேலாது. ஒரே வழி, பேயோடை வாழப் பழகிறதுதான்." எண்டு ஒரு போடு போட்டாராம். அது மாதிரி சுகாதார அமைச்சரான நீங்களும் "கொரோனாவோடை வாழப்பழகிறதைத் தவிர வேறை ஒண்டும் செய்யலோது." எண்டு சொல்லிப் போட்டியள். "கொரோனா எப்ப போகும் எண்டு" அயண்டக் கேள்வி கேக்கிறவைக்குப் பதில் சொல்லிச் சமாளிச்சுப் போட்டியள் எண்டு நீங்கள் நினைக்கலாம். ஆனால், மக்கள் என்ன கதைக்கினம் எண்டால், உதைச் சொல்ல ஒரு நாட்டுக்கு மந்திரியா இருக்கத் தேவை இல்லை. ஒரு ஐஞ்சாம் வகுப்புப் படிக்கிற பிள்ளையைக் கேட்டாலே சொல்லும் எண்டு நையாண்டி பண்ணிச் சிரிக்கினம்.

அந்தக் காலத்திலை மந்திரி எண்டு சொன்னால் மதிநுட்பமுள்ளவர் எண்டுதான் கருத்து. அரச சபையிலை ஒரு பிரச்சினையெண்டால் அரசன் மந்திரியைத்தான் கூப்பிட்டு ஆலோசனை கேட்பராம். மந்திரியும் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சரியான வழியைச் சரியாச் சொல்லிக் குடுப்பார் எண்டு நாங்கள் பாலர் பாடசாலையிலேயே படிச்சனாங்கள். இப்பிடிப் பொறுப்பில்லாமல் சொல்லுற உங்களைப் போல ஒரு ஆளை சுகாதார மந்திரி எண்டு சொல்லலாமோ?

இது என்னெண்டால், ஆத்தாக்கொடுமையிலை சனத்தைச் சமாளிக்க நீங்கள் ,மந்திரிச்ச தண்ணிய மண்பானைக் கொண்டுபோய் ஆத்துக்க ஊத்தினதைக் கண்டு, அரைவாசிச் சனத்துக்கு ஐஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சுது.

"கொரோனாவோடை வாழப் பழகுங்கோ" எண்டு நீங்கள் சொன்னதைப் பேப்பரிலை வாசிச்ச அந்த நேரம் தொட்டு என்ரை அயலிலை இருக்கிற சரஸ்வதி அக்கா ,அமெரிக்கன் துவாய் ஒண்டை எடுத்து மூக்கு, வாய் எண்டு எல்லாத்தையும் மூடி இறுக்கக் கட்டினவதான். இற்றைவரை அவுக்கவும் இல்லை. மற்றைவையளை ஏறெடுத்துப் பார்க்கிறதும் இல்லை. ஆரேன் கிட்டப்போனால் காணும். "கிட்டவராதையுங்கோ" எண்டு பிலத்துக் கத்திறா. அப்பதான் , உங்கடை பொறுப்பில்லாத கதையைக் கேட்டு எங்கடை ஊர் சரஸ்வதி அக்கா மாதிரி நாட்டிலை எத்தினை மெனிக்காக்கள், எத்தினை பாத்திமாக்கள் அலையப் போகினம் எண்டு நினைச்சன்.

எட, பேய்பிடிச்ச ஆளோடை, நோய் பிடிச்ச ஆளோடை வாழப் பழகிக் கொள்ளுங்கோ எண்ட மாதிரி, ஒரு பொறுப்பில்லாமல், கொரோனாவோடை வாழப்பழுங்கோ எண்டால்..., அதுகும் கண்ணுக்குத் தெரியாத சீவன். கண்ணுக்காலையும் போகுமாம். வாய்க்குள்ளையும் போகுமாம். மூக்குக்காலையும் போகுமாம். பிடிச்சால் ஒரு தரும் தப்பேலாது. உங்கை பாக்கேல்லையே, கொரோனா அமெரிக்காவிலை ஜனாதிபதியையும், லண்டனிலை பிரதமரையும், பம்பாயிலை ஐஸ்வரியாவையும் எண்டு எத்தினை பிரபலங்களைத் தாக்கி அவையளை இன்னும் பிரபலப்படுத்திப் போட்டுது. பாட்டுக்கார பாலசுப்பிரமணியத்தையும் அது விட்டு வைக்கேல்லை. ஆனா நீங்களோ சுகாதார அமைச்சர் எண்ட பொறுப்பில்லாம, சூனியக்கார அமைச்சர் மாதிரி எல்லோ நடக்கிறியள்.

நானும் வாசிகசாலைக்கு வாற பேப்பர் எல்லாத்தையும் ஒண்டும் விடாமல் வாசிச்சுத் தள்ளுறனான். இன்னும் ஒருதராலையும் தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கேலாமல் இருக்கு. அதாலை சனம் அந்தரிக்குது எண்டு எல்லாம் எனக்கும் விளங்கும். ஆனால், எங்கடை நாட்டைப் பொறுத்தவரை கிருமி இஞ்சை உற்பத்தியாகேல்லை. எல்லாம் இறக்குமதியானதெண்டு எங்களுக்கு வடிவாத் தெரியும். ஆனால், நாட்டிலை கொரோனா இவ்வளவு மோசமா வாறதுக்கு நீங்களும், உங்கடை அரசாங்கமும்தான் காரணம் எண்டும் எங்களுக்கு நல்லாத் தெரியும்.

ஒரு மனுசனுக்கு ஆசை வரப்படாது கண்டியளோ. அது வந்தால் அது ஒண்டையும் பாக்காது எண்டு சொல்லுறவை. சட்டத்திலை இருபதிலையும், பார்லிமெண்டிலை மூண்டில் இரண்டிலையும் எடுக்கிறதில தான் நீங்கள் அவதானமா இருந்தனியளே ஒழியச் சனத்தின்ரை பாதுகாப்பிலை அக்கறை இல்லாமல் இருந்திட்டியள். அப்பிடி ஒரு பிழையை விட்டிட்டு "கொரோனாவோடை வாழப் பழகுங்கோ" எண்டு சொல்லுறது நியாயமோ? யோசிச்சுப் பாருங்கோ! கடைசியா ஒரு டவுட். இப்ப உங்கட பேர் பவித்திரா வன்னியாராச்சியா? இல்லாட்டி பவித்திரா தண்ணியாராய்ச்சியா? முடிஞ்சால் பதில் அனுப்புங்கோ.

நன்றி .

தங்கள் மேல் அதி பட்சமுள்ள
அப்பாவி அன்னமக்கு.

புதிர் 20




○ மாயன்

கடல் நடுவே பேரிரைச்சலோடு , நீரைக் கிழித்தபடி எழுந்தது ஒரு இராட்சத விலங்கு. பார்ப்பதற்கு சிங்கம் போல இருந்தாலும் நீண்ட கோரமான பற்களும், மலை போன்ற உடலும், நெருப்பெரியும் கண்களுமாக பயங்கொள்ளும் தோற்றத்தோடு இருந்தது. திடீரெனக் கடல் நடுவே தோன்றிய விலங்கைப் பார்த்து முதலில் தீபவர்மன் துணுக்குற்றாலும், ஒரேநொடியில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, இடையில் தொங்கிய வாளை உருவினான்.

ஆனால் அந்த வாளுக்கு வேலை வைக்காமல், அப்படியே படகோடு தீபவர்மனை ஆவென்று விழுங்கத் தொடங்கியது அந்த விலங்கு. தீபவர்மன் ஓயவில்லை. தன்னால் முடிந்த மட்டும் அதன் வாயை தன் வாளால் குத்தினான். ஆனால் அதற்கு சிறு குண்டுசி குற்றிய வலி கூட ஏற்படவில்லை. அது மெதுவாக அவனை அசை போட்டு விழுங்கி யது. குகை போன்ற அதன் வாய்க்குள் சுரப்புகள் மூலம் கசிந்தபடியிருந்த திரவங்கள் பிசுபிசுவென்று ஒட்டுவது போல இருந்தன. காலை எடுத்து ஓரடி கூட வைக்க முடியவில்லை.

அப்படியே காலை ஒட்டியது போல இருந்தது. அப்படியே வாயை மூடி , ஒருமுறை காற்றை உள்ளிழுத்தது அந்த விலங்கு. அப்படியே சறுக்கிக் கொண்டு உள்ளே விழுந்தான் தீபவர்மன். அத்தோடு தன் கதை முடிந்தது என அவன் நினைத்தான். ஆனால் அவன் நினைத்ததற்கு மாறாக அவன் விழுந்த இடம் ஒரு மண்டபம் போல மாறியிருந்தது.

அங்கே பல பணியாளர்கள் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தனர். கண்ணைப் பறிப்பது போல விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. தீபவர்மனுக்கு எதுவுமே புரியவில்லை. அந்த இராட்சத விலங்கு தன்னை விழுங்கியும் தான் எப்படி சாகாமல் இந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தேன் என அவன் பலவாறு ஆராய்ந்தும் விடை கிடைக்கவில்லை, மாறாக ஒரு பெண்ணின் சிரிப்பொலிதான் கேட்டது.

கூடவே,

"புதிர்களின் ராஜாவுக்கே இந்தப் புதிரை அவிழ்க்கமுடியவில்லையா?" என ஒரு கேள்வியும் எழுந்தது. குரல் வந்த திசையை நோக்கினான் தீபவர்மன். அழகின் மொத்த உருவமாக இளவரசி ஒருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கம்பீரமும், லேசாகக் கேலியும் கலந்திருந்தன.

" நீங்கள் யாரென அறியலாமா? "

திக்கித் திணறியபடி கேட்டான் தீபவர்மன்.

"தாராளமாக. நான் பவளத்தீவின் ராணி. என் பேரும் பவளராணிதான். இது என் அரண்மனை. போதுமா விளக்கம்?" விடையோடு கேள்வியையும் அவள் வீசினாள்.

" போதும் ராணியாரே, ஆனால் அந்த விலங்கின் வாயில் சிக்கிய நான் எப்படி இங்கே வந்துசேர்ந்தேன்?" என்று தன் சந்தேகம் தீராமலேயே கேட்டான் தீபவர்மன்.

அதற்கு கலகலவென மீண்டும் சிரித்தாள் பவளராணி.

" புதிர்மலை மன்னரே, உண்மையில் அது உயிருள்ள விலங்கே அல்ல. எங்கள் பவளத்தீவின் கட்டட விற்பன்னர்களின் கைவண்ணம் அது. அரண்மனையைப் பாதுகாக்க இப்படி ஒரு ஏற்பாடு" என அந்தச் சிரிப்பினூடே அவள் விளக்கினாள்.

அதன்பின்னர்தான் தீபவர்மனுக்கு உண்மை புரிந்தது.

" சரி, நீண்டதூரம் பயணம் செய்து களைத்துப் போயிருப்பீர்கள், உணவருந்தியபடியே உரையாடலாமா?" எனக் கேட்டாள் பவளராணி. தீபவர்மனும் சம்மதமெனத் தலையசைத்தான். ராணி உணவருந்தும் இடத்தை நோக்கிச் சுட்டிக் காட்ட , தீபவர்மன் அங்கே போய் அமர்ந்தான். அறுசுவை உணவுகள் சுடச்சுடப் பரிமாறப்பட்டன. அவன் உணவருந்தியதைப் பார்த்து ரசித்தபடியே ஒரு கேள்வியைக் கேட்டாள் பவளராணி. அதைக் கேட்டதும் தீபவர்மனுக்கு தூக்கிவாரிப்போட்டது.

" அற்புதத் தீவுக்கு போய் நீங்கள் எடுக்கப் போகும் அதிசயத் தேனில் எனக்கும் ஒரு துளி கிடைக்குமா?"

இதுதான் அவள் கேட்ட கேள்வி.

" இவளுக்கு எப்படி தான் அங்கு போவதும் தேனை எடுக்க நினைப்பதும் தெரியும்? முனிவர் எனக்கு மட்டும் தானே சொன்னார்?" என்று தீபவர்மன் குழம்பினான். ஆனால் அடுத்து அவள் சொன்ன விடயம் தீபவர்மனையே கிடுகிடுக்க வைத்துவிட்டது. ( புதிர்கள் தொடரும்)




இ.சர்வேஸ்வரா
விரிவுரையாளர்,கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வு களை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.

19

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை


கடந்த வாரம் பல்கலைக்கழக அனுமதி ஒன்றை இழப்பதற்கான பல்வேறு ஏதுக்கள் குறித்து ஆராயத் தொடங்கியிருந்தோம். அவற்றில் குறிப்பாக பல்கலைக்கழக அனுமதியொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகமையிருந்தும் அதனை தவறவிடுவதில் தொடர்புடைய தவறுகள் அல்லது கவனயீனங்கள் குறித்தே அதிகம் கவனத்தைச் செலுத்த வேண்டும் எனும் வகையில் கட்டுரையாளர் அறிந்திருந்த சில உண்மைச் சம்பவங்களை மையப்படுத்தி சில சமூகத் தெளிவுபடுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. அவை சமூகத்தைச் சென்றடைந்திருப்பதை கட்டுரையாளருடன் தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட வாசகர்கள் மூலம் அறியக்கிடைத்தது. அதன்வழி இக் கட்டுரைத் தொடர் சமூகப்பெறுமதி மிக்கதொன்று எனும் உணர்வுநிலை மெய்பிக்கப்பட்டுள்ளமை கட்டுரையாளரை ஊக்கப்படுத்துவதாக அமைந்துள்ளது. இவ்வாரமும் சில சம்பவங்களின் அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதியை இழத்தல் தொடர்பில் மேலும் சில விடயங்களை அறிந்து கொள்ளலாம்.

### சம்பவம் 3

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவியொருவர் உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுபேறுகளைப் பெற்றிருந்த நிலையில் முதற்படிவத்தையும் அனுப்பியிருந்தார். வெட்டுப்புள்ளிகள் வெளிவந்திருந்த போது தான் விண்ணப்பித்த கற்கைநெறியொன்றுக்கு தனது இசற் புள்ளிகள் போதுமானதாகவிருந்தபோதும் தனக்கு அவ்வாய்ப்புக் கிடைக்கவில்லை எனக் கருதி தனது ஆசிரியரான கட்டுரையாளரை அணுகினார். குறித்த மாணவியின் படிவங்களை ஆராய்ந்த போது மாணவி ஒரு பெரும் தவறை இழைத்திருந்தமையை கட்டுரையாளர் கண்டறிந்து அத் தவறை சீர்செய்து அனுமதியைப் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது என பக்குவமாக மாணவிக்கு தெளிவுபடுத்தினார். அம் மாணவி செய்திருந்த தவறு இது தான். குறித்த மாணவி உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவில் உயர்தரப்பரீட்சையை எதிர்கொண்டவர். அதனடிப்படையில் ஏழு பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (Information Communication Technology) எனும் கற்கைக்கு விண்ணப்பிக்கும் தகுதியைக் கொண்டிருந்தார்.

இருந்தும் அவர் தவறுதலாக தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும் (Information and Communication Technology) எனும் பெயரினால் இலங்கை ராஜரட்டைப் பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருந்தார்.

இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிப்பவர் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்கும் தோற்றி சித்திய டைய வேண்டும். முன்னையது அவ்வாறானது அல்ல. குறித்த மாணவி தான் முன்னைய



கற்கைக்கே விண்ணப்பிப்ப தாக நினைந்து பின்னைய கற்கைக்கு விண்ணப்பித்திருந்தமை யால் உளர்சார்புப் பரீட்சை குறித்தும் கவனம் எடுக்கவில்லை.

இந் நிலையில் வெட்டுப்புள்ளிகள் வெளி வந்த போது மாணவி தனக்கு கிடைக்க விருந்த வாய்ப்பை இழந்த பின்னரே தனது தவறை உணர்ந்தார். இங்கு குறித்த இரு கற்கைநெறிகளிலும் "உம்" and எனும் ஒரு சொல்லே வித்தியாசப்படுகின்றது. அதனைக் கவனிக்கத்தவறியமையால் ஏற்பட்ட கவனயீனப் பிழையினால் தனக்கான பெறுமதியான பல்கலைக்கழக வாய்ப்பை அம் மாணவி இழக்க நேரிட்டது.

இவ்வாறு புல்தலைக்கழக கற்கை நெறிகளில் ஒத்த பெயரில் பல்வேறு கற்கைகள் ஒன்றுக்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் உள்ளன. இன்னொரு உதாரணமாக முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (Management and Information Technology MIT) எனும் பெயரில் களனிப் பல்கலைக்கழத்தினால் ஒரு கற்கைநெறியும் தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் (Information Technology and Management) எனும் பெயரில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தினால் ஒரு கற்கை நெறியும் முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) (Management and Information Technology-SEUSL) எனும் பெயரில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் ஒரு கற்கை நெறியும் வழங்கப்படுகின்றன. இக் கற்கைநெறிகளில் களனிப் பல்கலைக் கழகத்தின் கற்கைநெறிக்கு மட்டும் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஏனைய இரண்டுக்கும் அத்தகைய தேவைப்பாடு அண்மித்த காலம் வரை இருந்ததில்லை. இருந்தும் மொறட்டுவப் பல்கலைக்கழகம் தனது கற்கைநெறிக்கு 2020/2021 கல்வியாண்டு தொடக்கம் உளச்சார்புப் பரீட்சையை நடத்தவுள்ளது.

எனவே பல்கலைக்கழகங்களுக்கான விண்ணப்பங்களை நிரப்பும் போது கற்கைநெறிகளின் பெயர்கள் குறித்தும் மிகவும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும் என்பதையும் மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் தெரிந்திருக்க வேண்டும். சிறிய தவறுகளினால் பெறுமதியான வாய்ப்புக்களை இழப்பது வாழ்க்கையில் பின்னடைவான நிலமைகளைத் தோற்றுவித்துவிடும்.

### சம்பவம் 4

இது அனேகமான மாணவர்கள் விடும் தவறு ஆகும். இருந்தும் இத் தவறு மிக இலகுவாக சீர்செய்யத்தக்கது என்பதனால் அதிகம் அச்சப்படத்தேவையில்லை. இருந்தும் அநாவசிய பதற்றம், பணச்செலவு, நேரவிரயம் என்பவற்றை இத் தவறுகள் ஏற்படுத்தும். அதாவது பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பத்தில் இரண்டு இடங்களில் மாணவர்கள் கையொப்பம் இடவேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன.

தற்போது இணையவழி விண்ணப்ப நடைமுறை பின்பற்றப்படுகின்ற போதும் இத் தேவைப்பாடு சட்ட வலிதாண்மை கருதி பின்பற்றப்படுகின்றது. இருந்தும் சில மாணவர்கள் ஒரு இடத்தில் மட்டும் ஒப்பமிட்டு விண்ணப்பத்தை அனுப்புவதுண்டு.

இத்தகையவர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அழைத்து தமது அலுவலகத்தில் வைத்து கையெழுத்தை பெறுவதுண்டு. ஆனால் துரதிஸ்டவசமாக ஆணைக்குழுவின் அழைப்புக்களை தவறவிடுதல் அல்லது அசட்டை செய்தல் போன்ற விடயங்களினால் குறித்த விண்ணப்பம் மாணவனின் பூரண சம்மதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரமாக அமையும் கையெழுத்தின்மையால் நிராகரிப்பப்படவும் வாய்ப்புண்டு.

பாடசாலை அதிபர்கள் தாங்கள் விண்ணப்பத்தில் ஒப்பமிடும் போது மாணவர்கள் தங்களது ஒப்பத்தை இட்டுள்ளார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். கொழும்புக்கான போக்குவரத்து வசதிகள் இலகுபடுத்தப்பட்டுள்ள சூழலில் ஆணைக்குழுவில் சென்று கையொப்பம் இடுவது சுலபமான காரியம். இருந்தும் போர்க் காலத்தில் படையினரிடம் பதுகாப்பு அனுமதி பெற்று அதன் பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பலேறி திருகோணமலை சென்று அங்கிருந்து கொழும்பு சென்று கையொப்பம் வைத்து அதன் பின்னர் மீண்டும் அதே நெருக்கடிமிக்க கடல்பயணம் மூலம் யாழ்ப்பாணம் திரும்பியவர்கள் சிலர் உள்ளனர். ஒரு கையெழுத்து வைப்பதற்கான பத்து நாள்களை செலவழிக்க வேண்டியேற்பட்ட காலமும் உண்டு. எனவே சிறிய கவனயீனத் தவறுகள் பல பின்னடைவுகளைத் தரும்.

குறிப்பாக கடந்தவாரமும் இவ்வாரமும் பல்கலைக்கழக அனுமதிக்கான முதற்படிவங்களை நிரப்புவது மற்றும் பாடச் சேர்க்கைகளின் பொருத்தப்பாடற்ற தன்மையினால் பல்கலைக்கழக அனுமதியொன்றை இழப்பது தொடர்பிலான சில விடயங்களை சில உண்மைச் சம்பவங்களுடன் ஆராய்ந்திருந்தோம். எதிர்வரும் வாரங்களில் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தபின்னரும் ஏற்படக்கூடிய தவறுகள் தொடர்பில் ஆராயலாம்.

(தொடரும்)

# பொண்ட் ! ஜேம்ஸ் பொண்ட்....!





சினிமா ரசிகர்களுக்கு இந்த வாரமும் ஒரு பெருந் துயரம் நேர்ந்திருக்கிறது. ஜேம்ஸ் பொண்ட் (James Bond) என்ற ஸீன் கனோரி( Sean Connery )இன் மரணம். அது உண்டாக்கியிருக்கும் இழப்பு.

உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான சினிமா ரசிகர்களின் பெருநாயகனாக 30 ஆண்டுகளுக்கு மேலாகப் புகழ் பெற்றிருந்தவர் ஸீன் கனோரி.

“ பொண்ட் ஜேம்ஸ் பொண்ட்” என்ற ஒற்றை மந்திரச் சொல்லால் ரசிகர்களைக் கட்டிப்போட முடியும் என நிரூபித்து, ஜேம்ஸ் பொண்ட் கதாபாத்திரத்துக்கு உயிரூட்டியவர். இவருடைய செல்வாக்கு ரசிகர்களிடம் மட்டுமல்ல, பெரும் சினிமாத் தயாரிப்பு நிறுவனங்கள் தொடக்கம் முன்னணி நடிகர்கள் வரையில் தாக்கம் செலுத்தியது.

எடின்பரோ ஸ்கொட்லாந்தில் மிக ஏழ்மையான கூலித்தொழிலாளர்களின் குடும்பத்தில் 1930 பிறந்தவர் ஸீன் கனோரி. இறக்கும்போது அவருக்கு வயது 90. ஆனால், இன்றும் அவர் இளைஞராகவே உணரப்பட்டவர். அப்படித்தான் வாழ்ந்தவர். புகழின் உச்சியிலிருந்தாலும் தன்னுடைய கடந்த காலத்தையும் ஏழ்மையான வாழ்க்கையையும் என்றைக்கும் அவர் மறந்ததில்லை. அதைப்போல தான் பிறந்து வளர்ந்த அந்தப் பகுதியை மறந்தவருமில்லை.

மிகச் சிறிய வயதில் (13வயதில்) குடும்பச் சூழல் காரணமாக பள்ளிப் படிப்பை விட்டு வெளியேறி, பால் விற்கும் தொழிலில் தன்னுடைய வாழ்க்கையை ஆரம்பித்தவர் ஸீன் கனோரி. பிறகு வாகனச் சாரதியாகப் பணியாற்றினார். பின்னர் பல்வேறு தொட்டாட்டு வேலைகள். அதற்குப் பின்னர் இரண்டு வருடங்கள் கடற்படையில் இணைந்து பணியாற்றினார். அந்த நாட்களில்தான் அவர் கட்டழகனாக மாறும்பயிற்சியைப் பெற்றார்.

அனத வைத்துக் கொண்டு, படங்களை வரையும் மாணவர்களுக்கு ஒரு ' மொடலாக' தனது உடலின் பாகங்களை வரையவைத்து பணம் சம்பாதித்தார் ஸீன் கனோரி. அவருடைய சினிமா வாழ்க்கைக்கு இது பெரிய படிக்கல். ஆனாலும் இதற்கு முன்பே ஸீன் கனோரி ஒரு பாடகரானார். அதுவே அவருக்கு வருமானத்தைத் தந்த தொழிலுமாக இருந்தது. அந்த நிலையில்தான் நடிகர் மைக்கல் கிளைனைச் சந்தித்தார் .அது பெரிய மாறுதலை உண்டாக்கியது.





சினிமா வாய்ப்புகள் ஸீன் கனோரிக்கு வரத் தொடங்கின. நடிப்பில் தனக்கென்றொரு தனித்தன்மையை வகுத்துக் கொண்டு, அதில் நுட்பங்கள் பல செய்து படிப்படியாக உயர்ந்தார். அப்படியே உலகப் புகழின் உச்சியிலேறினார். விருதுகளும் பாராட்டுகளும் கொண்டாட்டமுமாகவே கழிந்தது ஸீன் கனோரியின் வாழ்க்கை.

ஸீன் கனோரியின் படங்கள் யாழ்ப்பாணத்தில் அன்று பெரும்பாலானவர்களால் பார்க்கப்பட்டன. தமிழில் அப்போது ஸீன் கனோரி யின் தாக்கத்தினால் நேரடி அடையாளமாக நடித்தவர் ஜெய்சங்கர். பிறகு ரஜினிகாந்த் உள்ளிட்ட நடிகர்களும் ஸீன் கனோரியைப் பின்பற்றி ஜேம்ஸ் பொண்ட் பாணியில் நடித்தனர். தாய் மீது சத்தியம் படத்தை நீங்கள் பார்த்தால் இதைப் புரிந்து கொள்ளமுடியும். ஒடுக்கப்பட்ட ஒருவன் உலகின் சிகரங்களில் உயர்ந்து கொடியாகப் பறந்தான் என்பதற்கு ஸீன் கனோரி ஒரு நல்ல சாட்சி. ஆனால், அவர்தான் இன்றில்லை. என்றாலும் அவர் விட்டுச் சென்ற அந்தப்படங்களும் அவை உண்டாக்கும் கனவுகளும் அவை உருவாக்கும் ஒரு விதமான மாய உலகும் உண்டு. அது எப்போதும் அவரைப் போல அழகானது. ரசிக்கக் கூடியது



## இரண்டு படங்கள்

○ ஆரதி

இது கொரோனா யுகம். அப்படியென்றால் ஏறக்குறைய லொக்டவுண் காலம் எனலாம். இந்தக் காலத்தில் வீட்டிலிருந்து கொண்டே படம் பார்ப்பவர்களுக்கு இரண்டு படங்களைச் சிபாரிசு செய்யலாம். ஒன்று பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் - லட்சுமி நடித்த மிதுனம். மற்றது மம்முட்டியின் நடிப்பில் உருவான மதிலுகள். மிதுனம் தெலுங்கு மொழிப்படம். மதிலுகள் மலையாளச் சினிமா.

இரண்டும் மிக எளிமையான படங்கள். முக்கியமாக ஒரு களத்தில் மட்டும் உருவாக்கப்பட்ட படங்கள். ஆனால், அந்தத் தன்மை பார்வையாளருக்கு எந்த விதமான அலுப்பையும் தரவில்லை. பதிலாக நாமே அந்தச் சூழலுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பதாக உணர வைக்கிறது. அப்படித் தோன்றுகிறது. நல்ல சினிமாவின் வெற்றி என்பது அப்படித்தானிருக்கும்.

மிதுனத்தில் இரண்டே இரண்டு பாத்திரங்கள் மட்டுமே. கணவன் - மனைவி. கணவராக எஸ்.பி.பி. மனைவியாக லட்சுமி. இருவரும் வயோதிபத் தம்பதிகள். இவர்களுக்கிடையிலான வாழ்க்கையே படத்தின் கதை. ஒரு வீட்டில், அதைச் சுற்றிய வளவில் அவர்கள் வளர்க்கின்ற செல்லப்பிராணிகள், வளவுத்தோட்டம்,சூழல் என்பதே காட்சிப் பின்னணி.

இன்று தனியே இருக்கும் வயோதிபத் தம்பதிகள் பற்றிய சித்திரத்தை நமக்குள் அப்படியே எழுப்பும் இந்தப்படம், நாளை நாம் வயோதிபமாகும்போது நிகழவுள்ள வாழ்க்கையையும் காட்சிப்படுத்துகிறது. இரண்டு பாத்திரங்களை - இரண்டே இரண்டு நடிகர்களை மட்டுமே கொண்டுள்ள மிதுனம் மொழி தாண்டி, நமக்குள் நெருக்கமாகிறது. ஏனென்றால் அந்த வாழ்க்கையும் அதில் வாழும் மனிதர்களும் வேறு யாருமல்ல. நமக்கு அயலில் உள்ளவர்களே. இந்த நெருக்கமே இந்தப் படத்தை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டுகிறது.

இந்தப்படத்தின் இயக்குனர் தனிக்கல் பாரதி.

மதிலுகள் சிறைச்சாலையில் நிகழ்கின்ற படம். மலையாளத்தின் மிகப் புகழ் பெற்ற எழுத்தாளரான வைக்கம் முகமது பஸீரின் மதிலுகள் என்ற புகழ்பெற்ற சிறு நாவலே படத்தின் கதையும். பஸீரின் சொந்த வாழ்க்கையே அந்த நாவல் என்று சொல்லப்படுவதுண்டு. படத்திலும் அப்படித்தான் காண்பிக்கப்படுகிறது.

இளவயதுக் காலத்தில் சிறையிலிருந்தார் பஸீர். ஆகவே ஏறக்குறைய இது ஒரு சுயவரலாற்றுப் படம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், அது பஸீர் என்ற இளவயடைய ஒரு போராட்டக் காரரின் - அரசியல் கைதியாக இருந்த காலப்பகுதியின் கதை மட்டுமே. பஸீரின் மொத்த வாழ்க்கைச் சரித்திரமும் அல்ல.

இதனால் படம் முழுவதும் சிறைச்சாலைக்குள்ளேயே நிகழும் காட்சிகளும் சம்பவங்களுமாகவே உள்ளன. இதனால் படத்தில் பெண்களே இல்லை. ஆம், நிச்சயமாக ஒரு பெண் பாத்திரம் கூட இல்லாமல் அருமையான முறையில் உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆனால், படத்தில் பஸீர் என்ற இளைஞருக்கும் (மம்முட்டிக்கும்) நாராயணி என்ற பெண்ணுக்குமிடையில் அற்புதமான காதல் மலர்கிறது. பூச்செண்டுகள் தொடக்கம் அன்பளிப்புப் பொருட்கள் வரையில் பலதையும் அவர்கள் பரிமாறிக் கொள்கிறார்கள். வேண்டியபோதெல்லாம் பேசிக் கொள்கிறார்கள். இருவரும் ஆளையாள் பார்த்ததில்லை. சந்தித்ததில்லை. ஆனால், உறவு வளர்கிறது. இதன்போது நிகழும் அந்தக் காதல் நிரம்பிய உரையாடல்கள் காவியமே. அந்தப் பகுதியை திரும்பத்திரும்பப் பார்க்க வேண்டும் என்ற அளவுக்கு வெற்றிகரமாக இயக்கியிருக்கிறர் அடூர் கோபாலகிருஸ்ணன். தேசிய விருது பெற்ற இந்தப் படம் மலையாள கிளாஸிக் சினிமாவில் ஒன்று.





**இரண்டும் இந்தக் காலத்தை மீறிய காப்பியங்கள்.**



## மீள்வருகை

ஆர்.லயனல்

கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து மீண்டு, களமிறங்கிய
ரொனால்டோ வெறும் 120ஆவது செக்கனில் கோலொன்றைப் பதி
வுசெய்துள்ளார். அதுபோதுமே, ரொனால்டோவின் ரசிகர்களுக்கு
கொண்டாடித் தீர்க்கின்றனர்.
கொரோனாத் தாக்கத்துக்கு உட்பட்ட ரொனால்டோ இத்தாலியின்
பிரபல நட்சத்திர விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டார்.
ரொனால்டோ தனிமைப்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில்
ரொனால்டோவின் போட்டியாளரான மெஸ்ஸி விளையாடும்
பார்சிலோனா கழகத்துக்கும் ரொனால்டோவின் யுவென்டாஸ்
கழகத்துக்கும் இடையில் ஆட்டம் நடைபெற்றது. இந்த ஆட்டத்
தில் ரொனால்டோவைக் களமிறக்குவதற்கு தீவிர முயற்சிகள் எடுக்
கப்பட்டும் கொரோனாவில் இருந்து அவர் மீளவில்லை. இதை
யடுத்து ரொனால்டோ இல்லாத யுவென்டாஸை வீழ்த்தியது
பார்சிலோனா.
இந்த ஆட்டம் முடிவடைந்த ஓரிரு தினங்களில் ரொனால்டோ
கொரோனாவில் இருந்து மீண்டுள்ளார். அவர் மீண்டும் களமி
றங்கி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். கொரோனா
தனிமைப்படுத்தலுக்குப் பின்னர் களமிறங்கிய 120ஆவது செக்
கனில் அதிரடி காட்டி கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ.
மின்னலின் வருகை வியப்பானதாகத்தானே இருக்கும்.

விளையாட்டு

## அதிரடி அரங்கு



### தடை போடும் செயலாளர்; முடமான பிரதேச சபை

பொதுவாக உள்ளூராட்சி சபைகளில் அதிகாரிகள் மக்களுக்கு நல்லது செய்ய நினைத்தாலும், மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் உறுப்பினர்கள் தங்கள் அரசியல் நலனுக்காக அதைக் குழப்பியடிப்பது வழக்கம். ஆனால் பூநகரியில் அது தலைகீழாக நடக்கின்றதாம். 2020 ஆம் ஆண்டு முடிவடைய இருக்கும் நிலையில், இந்த வருடத்துக்கான மூலதன வேலைத்திட்டம் ஒன்றுமே பூநகரியில் நிறைவேற்றப்படவில்லை. காரணம், பிரதேச சபையின் செயலாளரே என ஒருமித்து விரல் சுட்டிக் காட்டுகின்றனர் சபையின் உறுப்பினர்கள். பிரதேச சபையில் மக்கள் பிரதிநிதிகள் தீர்மானங்களை எடுத்து அதை நிறைவேற்ற, செயலாளருக்கு அனுப்பி வைப்பார்கள். ஆனால் அந்தத் தீர்மானங்களில் ஏதேனும் 'முட்டையில் முடி பிடுங்கி' குற்றம் சொல்லி, அவற்றை நடக்க விடாமல் செய்வதே தன்னுடைய தலையாய பணி என்று பிரதேச சபையின் செயலாளர் தாந்தோன்றித்தனமாக நடக்கிறார் என்றும் குற்றம் சுமத்தப்படுகின்றது. இதுதவிர அந்தப் பிரதேச சபையின் செயலாளர் மீது உறுப்பினர்களும், மக்களும் பட்டியலிடும் குறைகள் அனுமார் வால் போல் நீண்டுகொண்டே போகின்றன.

"பிரதேசசபையின் ஆயுட்காலமே முடிவுறும் நிலைக்கு வந்துகொண்டிருக்கும் நிலையில் இதுவரை பிரதேச சபையின் தவிசாளருக்கு, கடிதங்களை எழுதுவதற்காக உத்தியோகபூர்வ கடிதத் தலைப்புக்களை இன்னும் செயலாளர் கையளிக்கவில்லை. பணியாளர்கள் எவரும் தன்னுடைய உத்தரவின்படி நடக்காவிட்டால், அவர் பழிவாங்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றாராம். பிரதேச சபைத் தவிசாளரை மக்கள் சந்திக்க வந்தால், அவர்களைத் தடுத்து 'என்னைச் சந்தித்தால் போதும்' என்று திருப்பி அனுப்புகின்றார். இப்போது தவிசாளருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் உபதவிசாளரே அந்தக் கடமைகளைக் கவனிக்கிறார். ஆனால் அவரையும் செயலாளர் ,கிள்ளுக்கீரையாக நினைத்தே நடந்து கொள்கிறார்" என்கிறார்கள் மக்கள்.

தவிர, குறித்த பிரதேச சபையின் செயலாளர் 'சுப்ரா' தரத்தைச் சேர்ந்தவர்தான். அவரது சேவைத் தகுதிக்கு செயலாளர் பதவி என்பது கொக்கு தலையில் வெண்ணெய் போல , தகுதியை மீறிய ஒன்றுதான். அதனால்தான் இப்படி ஆடுகிறார் என்றும் அதே மக்கள் சொல்கிறார்கள்.

மக்கள் சொல்வதிலும் நியாயம் இருப்பது போலவே படுகின்றது. இதே நபர்தான், கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளராக இருந்த போது, கனகபுரம் மாவீரர் மயானத்தை மக்கள் அமைக்க முனைகையில் அதைத் தடுத்து நிறுத்தியவர் என்பதும் கூடுதல் தகவல்.

## கண்காணிப்பு

ஆஸ்திரேலியத் தொடரில் இடம்பெற வைப்பதற்காக உச்சக்கட்ட மருத்துவக் கண்காணிப்பில் உள்ளார் இசாந் சர்மா.

இசாந் சர்மா தற்போது காயமடைந்துள்ளார். ஆஸ்திரேலியத் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணியில் இசாந் சர்மாவின் பெயர் சேர்க்கப்படவில்லை. ஆனால் ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் இசாந் சர்மாவின் பங்களிப்பு இன்றியமையாதது. இந்த நிலையில்தான் அவர் உச்சக்கட்ட மருத்துவக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளார். அனேகமான அவர் ஆஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் இடம் பெறுவார் என்று இந்திய கிரிக்கெட் சபையின் தலைவரான கங்குலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




## நீள நினைதல்

வாசகர்களே, இது உங்களுக்கான பகுதி. உங்கள் வாழ்வில் சந்தித்த, கேட்டறிந்த, அனுபவப்பட்ட சுவாரசியமான மறக்க முடியாத, பகிர விரும்பும் நிகழ்வுகளை எழுதி அனுப்புங்கள். சிறந்த நினைவுப் பகிர்வுகள் 'நீள நினைதல்' பகுதியில் பிரசுரமாகும்.

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

## விரிசல்



இந்தியக் கிரிக்கெட்டில் தற்போது விரிசலொன்று சாதுவாகத் தென்பட ஆரம்பித்துள்ளது. ரோகித்தை மையமாக வைத்து இந்த விரிசல்கள் விழுந்துகொண்டிருக்கின்றன.

ஐ.பி.எல் தொடர் தற்போது நடைபெறுகின்றது. இந்தத் தொடரின் பின்னர் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இருதரப்புத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான இந்திய அணியில் ரோகித் சேர்க்கப்படவில்லை. கே.எல்.ராகுல் துணைத் தலைவராகப் பெயரிடப்பட்டுள்ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் ரோகித் காயத்தால் அவதிப்பட்டார். இதைக் கருத்தில்கொண்டுதான் ஆஸ்திரேலியத் தொடரில் அவர் நீக்கப்பட்டார் என்று இந்தியக் கிரிக்கெட்டின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு வெளிவந்த அடுத்த நாளே ரோகித் வலைப்பயிற்சியில் ஈடுபடும் காணொலியை மும்பை இந்தியன்ஸ் அணி வெளியிட்டது. ரோகித்தும் களத்துக்குத் திரும்பினார்.

'காயம் குணமடைந்துவிட்டது. ஐ.பி.எல்லில் தொடர்ந்து விளையாடப் போகின்றேன். என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்' என்று ரோகித் தெரிவித்தார். இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவரான கங்குலி, இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோர் ரோகித்தைக் கண்டித்தனர். 'ரிஸ்க் நிலை வேண்டாம்' என்று எச்சரித்தனர். ரோகித் மீண்டும் களமிறங்கிய போதிலும் ஆஸ்திரேலியத் தொடருக்கான அணியில் மாற்றங்கள் செய்வதில்லை என்று இந்திய கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழுவும் உறுதியாக உள்ளது. ஆக, இந்திய அணிக்குள் விரிசல் உள்ளமை அப்பட்டமாகத் தெரிகின்றது. அது எந்தளவு நிலையில் உள்ளது என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும். மலிந்தால் சந்தைக்கு வரும்தானே. வரும்போது பார்க்கலாம்.